REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI
வார மலர்

## உயிர் வலிக்கும் கணங்கள்


## சிறுபான்மைக் கட்சிகள் என்பவை எவை?

## முள்ளி வாய்க்காலும் முள்ளுக் கம்பி வேலியும்

புதிய தொடர்

## ஜி.எஸ்.பி. வரிச்சலுகைக்கு சர்வதேசம் விதிக்கிறது நிபந்தனை

## மிக மோசமான கட்டத்தில் தமிழரின் அரசியல் நிலை



யாழ் விலை 30/=

## 2010 புத்தாண்டு வாழ்த்துகள்





# மோசமான கட்டத்தில் தமிழரின் அரசியல் நிலை

"தமிழ் மக்களுக்கு எப்போதுமே சோதனை காலம்தான்" என்று கவலையோடு சொன்னார் ஒரு முதியவர். இப்போது வந்துள்ள ஜனாதிபதித் தேர்தலை மட்டும் மனதில் வைத்து அவர் இதைச் சொல்லவில்லை. பொதுவாகவே தமிழ் மக்களின் அரசியல் நிலை வரவர மோசமாகியே வந்துள்ளது. இப்போது அது மிக மோசமான ஒரு கட்டத்தை எட்டியுள்ளது என்பதே அவருடைய அபிப்பிராயம். இது பற்றி நாம் தொடர்ந்து உரையாடிய போது பல விசயங்கள் புரிந்தன. அவற்றை இங்கே வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று விரும்பு கின்றேன். அது இன்றைய சூழலில் மிகப் பயனுள்ளதாக இருக்கும்.

முதலில் வரப்போகிற ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்களுக்கு முன்னால் வந்துள்ள மிகப் பெரிய சவால். முதன்மை வேட்பாளர்கள் என்று கருதப்படுகின்ற மஹிந்த ராஜபக்ஷவும் சரத் பொன்சேகாவும் போர்க் குற்றவாளிகளாக கருதப்படுகிறவர்கள். எனவே இந்த இருவரில் எவரையும் ஆதரிக்க முடியாது என்பது பொது அபிப்பிராயம். ஆனால் தமிழ் மக்கள் வாக்களித்தால் என்ன; வாக்களிக்காது விட்டால் என்ன யாரோ ஒரு 'குற்றவாளி' ஜனாதிபதியாகப் போகின்றார். எனவே வாக்களிக்காமல் விடுவதில் பயனேதுமில்லை.

தமிழ் மக்கள் இதற்கு முன்னர் பல தடவைகள் வாக்களிக்காமல் தேர்தலைப் பகிஷ்கரித்திருக்கிறார்கள். ஆனால், அதனால் எந்த நன்மையும் கிட்டவில்லை. எந்த முன்னேற்றம் ஏற்படவுமில்லை. இதைப் போல ஒரு முகமாக நின்று தமது ஏகோபித்த உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர். உதாரணம் பொங்கு தமிழ் எழுச்சிகள் மற்றும் புலம்பெயர் நாடுகளில் போராட்டம். தமிழ் மக்கள் ஒரு மனதாக தமது அரசியல் உணர்வை வெளிப்படுத்தியமையாக 1977, 1989, 2002 தேர்தல்களைச் சொல்லலாம். ஆனால் எந்தப் பயனும் அவற்றாலும் விளையவில்லை.

சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தொடங்கி கரும்புலிப் படையணிகள் வரையும் பல விதமாக தமது போராட்டங்களை நடத்திய போதும் தமிழருக்கு முன்னேற்றம் ஏற்படவில்லை. இப்போதுள்ள நிலமையானது போராட்டம் ஆரம்பித்த காலத்தையும் விட (50 ஆண்டுகள் முன்னிருந்த நிலமையைவிட) மோசமானதே.

இதற்குள் தமிழ் மக்கள் நடத்திய போராட்டங்களும், பட்ட பாடுகளும், சந்தித்த இன்னல்களும், இழப்புகளும், பின்னடைவுகளும் கொஞ்சமல்ல. செய்த போராட்டங்கள் சாதாரணமானவையும் அல்ல. ஒரு சிறிய இனமான போதும் அது தன்னுடைய சக்திக்கு அப்பால் தன்னுடைய ஆற்றலையும் வலிமையையும் திரட்டிப் போராடியது. மிக உச்சமான தியாயங்களையும் செய்திருக்கிறது. ஆனால், விளைவு மிகவும் மோசமாகி பூஜ்ஜியத்திலேயே வந்து நிற்கிறது.

அப்படியென்றால் எங்கோ தவறு நடத்திருக்கிறது. இல்லையென்றால் இவ்வளவு வீரம்செறிந்த போராட்டத்துக்குப் பின்னர், இத்தனை வலிமையான தியாகங்களுக்குப் பின்னர் ஏன் இன்னமும் வெற்றியடையாமல் இருக்க வேண்டும்?

ஆகவே என்ன தவறு நடந்திருக்கிறது; என்ன பிழைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்று நாம் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் அப்போது தலைமைத்துவத்தில் இருந்த கட்சிகளும் தலைவர்களும் இயக்கங்களும் எடுத்த முடிவுகளை மக்கள் அனுசரித்து நடந்திருக்கின்றனர். இந்தத் தரப்புகள் விடுத்த அறிவிப்புகளையெல்லாம் ஏற்றுச் செயற்பட்டிருக்கின்றனர். தேர்தலில் வாக்களியுங்கள் என்ற போது வாக்களித்தனர். தேர்தலைப் புறக்கணியுங்கள் என்றபோது புறக்கணித்தனர்.

ஆனால் எதிலும் வெற்றியில்லை. இப்போது இன்னொரு தேர்தல் வந்துள்ளது. இதைப் பகிஷ்கரிக்க முடியாது. பகிஷ்கரிப்பதால் பயனுமில்லை. ஆகையால் இந்தத் தேர்தலை பகிஷ்கரிக்கவும் முடியாது. அதற்காக பிரதான வேட்பாளர்களாகக் கருதப்படும் மஹிந் த



ராஜபக்ஷவுக்கும், சரத் பொன்சேகாவுக்கும் வாக்களிக்கவும் இயலாது. ஏனெனில் முன்னர் குறிப்பிட் டதைப் போல இருவ ரும் போரின் பங்காளிகள். அந்தப் போர் வெற்றியை அடிப்படையாக வைத்தே அவர்கள் தேர்தலில் நிற்கின்றனர்.

தமிழ் மக்கள் இந்த இருவரையும் ஏற்க முடியாத நிலையில் இருக்கின்றனர். எனவேதான் தமிழ் ஊடகங்கள் எதுவும் இன்னும் வெளிப்படையாக இருவரில் ஒருவரையேனும் ஆதரிக்கும் நிலைப்பாட்டை காட்ட முடியாத நிலையில் இருக்கின்றன. தமிழ் கூட்ட மைப்பின் தடுமாற்றங்களும் தயக்கங்களும் இதன் காரணமாகவே ஏற்பட்டன.

தமிழ் தலைமைகளின் தீர்க்க தரிசனமற்ற அரசியல் வழிமுறைகளும் போராட்டங்களும் இன்று இத்தகைய நெருக்கடி நிலையில் கொண்டுவந்து தமிழ் மக்களை நிறுத்தியிருக்கிறது.

ஆனால், சிங்கள மக்களுக்கு இந்தளவுக்கு நெருக்கடிகள் இல்லை. அவர்கள் இருவரில் ஒருவரை எந்தத் தடுமாற்றங்களுக்கும் இடமில்லாமல் தேர்வு செய்துவிடலாம். தமிழர்களால் அப்படிச் செய்ய முடியாது.

அப்படியொரு நிலையை இன்றைய இலங்கையின் கொழும்பு அரசியல் உருவாக்கியுள்ளது. இப்படியொரு நிலைமை தமக்கு வரும் என தமிழ் மக்கள் ஒருபோதுமே எண்ணியிருக்கவில்லை. தாம் தேர்ந்தெடுக்கவே முடியாத ஒரு வேட்பாளரை வெல்ல வைக்க வேண்டிய அவலமும் அபத்தமும் இது. வெளிப்படையாக ஒருவரை ஆதரிக்க முடியாத சூழலில் தடுமாற வேண்டிய மக்களாக தமிழர்கள் இருக்கின்றனர் என்பது இலங்கை அரசியல் எத்தகைய பாரிய பிரச்சினை என்பதற்கு சிறந்த உதாரணமாகும்.

இனவிவகாரம் இன்று இத்தகையதொரு பரிணாமத்தை எடுத்துள்ளது. சிறுபான்மை மக்கள் குறித்த எந்த அக்கறையும் இல்லாத வேட்பாளர்களுக்கு சிறுபான்மை மக்களே வாக்களித்து வெல்ல வைக்க வேண்டும். சிறுபான்மை மக்களுக்கு எதிராக பகிரங்கமாக கருத்துச் சொன்னவர்கள், சிறுபான்மையினருக்கு எதிராக போர் தொடுத்தவர்களுக்கு சிறுபான்மையினர் ஆதரவளிக்க வேண்டும். இவ்வளவுக்கும் தேர்தல் சம்பிரதாயத்துக்காவது சிறுபான்மை மக்கள் தொடர்பாக தாம் எத்தகைய நிலைப்பாட்டுடன் இப்போதுள்ளோம் என்று இதுவரையும் இவர்கள் சொல்லவில்லை. அவர்கள் அப்படி எதனையும் சொல்லப்போவதுமில்லை. அப்படிச் சொல்ல முடியாத ஓர் அரசியல் யதார்த்தமே இன்று இலங்கைத்தீவில் உள்ளது. இதுதான் இனமுரண்பாட்டின் உச்சமாகும்.

தமிழ் பேசும் மக்களுக்குரிய உரிமைகள் தொடர்பாகப் பேசினால் அது அந்த வேட்பாளரை சிங்கள மக்களிடத்தில் தோல்வியடையச் செய்துவிடும். சிங்கள மக்களின் செல்வாக்கைப் பெறுவதற்காக தமிழ் மக்களின் உரிமைகள் பற்றி மௌனமாக இருந்தால் தமிழர்களின் ஆதரவைப் பெற முடியாது. ஆக, ஒரே கோரிக்கையை வைத்து இரண்டு இனங்களிலும் ஒருவர் வாக்குக் கேட்க முடியாது. தமிழர்களுக்கு உத்தரவாதம் சொன்னால் மட்டும்தான் அவர்கள் வாக்களிப்பார்கள். ஆனால், அப்படிச் சொல்வதற்கு முடியாத ஒரு யதார்த்தம் இன்று வளர்ந்து விட்டது.

**அருள் மனோகரன்**

இது, வாக்குறுதிகள் கூட கிடைக்காத நிலையில் தமிழ் மக்கள் தமது வாக்குகளை - தமது ஆதரவைத் தெரிவிக்க வேண்டியதோரு அவல நிலை. சரி, தமிழ் மக்களுக்கு தீர்வு குறித்த உத்தரவாதங்கள் வழங்கினால் மட்டும் அது நடந்து விடுமா? அல்லது உடன்படிக்கைகள் செய்தால்கூட அது நிறைவேற்றப்படுமா? இதுவரையான வரலாற்றில் எத்தனையோ தடவைகள் இத்தகைய வாக்குறுதிகளும், உத்தரவாதங்களும் உடன்படிக்கைகளும் செய்யப்பட்டன. அவற்றில் ஏதாவது நிறைவேற்றப்பட்டதா? அல்லது ஆட்சிக்கு வந்த எவர்தான் தமிழர்களின் மீது ஒடுக்கு முறையைக் கட்டவிழ்த்து விடவில்லை? யார் தமிழர்களின் மீது போர்தொடுக்கவில்லை? இந்த நிலை யில் இப்போது என்ன புதிதாக நடந்து விட்டது? என்று சிலர் கேட்கிறார்கள்.

அப்படியென்றால் தமிழர்கள் சரணாகதி அரசியலில்தான் இறங்க வேண்டியதா என்ற கேள்வி எழலாம். ஒரு புன்சிரிப்புடன் இதை ஆமோதிப்பதைத் தவிர வேறு என்ன செய் முடியும்?


ஏனெனில், இது உண்மையில் கையறு நிலையில் தமிழர்கள் நிற்க வேண்டி வந்ததன் விளைவே. ஒரு நண்பர் துக்கத்துடன் சொன்னதைப் போல, இதுவரையிலும் தமிழர்கள் தோற்றதைவிடவும் கவலையளிப்பது, இனிமேல் அவர்கள் தோற்கப்போவது தான் என்பது. இதுவரையிலும் அவர்கள் தமது உரிமைகளுக்காகவும் விடுதலைக்காகவும் போராடினார்கள். அதில் தோல்விகள் பின்னடைவுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அவர்கள் போராடினார்கள். போராட்டத்தில் வெற்றி தோல்விகள் ஏற்படுவது இயல்பு. வெளியாருடைய நோக்கில் இது குறித்து ஒரு நன்மதிப்பும் இருக்கும். போராடினார்கள். சூழ்நிலை அதைத் தோற்கடித்து விட்டது என்று.

ஆனால், இந்தத் தோல்வியைப் பாடமாகக் கொண்டு, இனிமேல் தாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தெரியாமல் தடுமாறினால் எவர்தான் மதிப்பர். தோல்விகளில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளாதோரை, அனுபவங்களிலிருந்து எதையும் படித்துக் கொள்ள முடியாதோரை எவரும் மதிக்கவும் மாட்டார்கள். மன்னிக்கவும் மாட்டார்கள்.

எனவே, இப்போது சிங்களத் தலைமைகள் தமிழர்களைத் தோற்கடித்ததற்கு நிகராக தமிழ் தலைமைகள் தமிழர்களை தோற்கடித்துள்ளனர் என்பது நிரூபணமாகியுள்ளது. இப்போதும் எத்தகைய விவேகத்துடனும் தீர்க்க தரிசனத்துடனும் இவர்கள் இல்லை என்பதையே இன்றைய நிலவரங்கள் காட்டுகின்றன.

எதையும் வெளிப்படையாகச் சொல்லி தீர்மானிக்கும் ஒருவரோ- ஒரு குழலோ இனி இல்லை என்று இலங்கை அரசியல் நிலவரமாகிவிட்டது. இதில் மக்கள் தமது அனுபவங்களின் வழியாகவும் தம் அறிவின் படியும் தீர்மானம் எடுப்பதே சிறந்தது. அதுவே வழி. *

# நிபந்தனையில்லா ஆதரவும், ஆதரவுக்கான நிபந்தனைகளும்!





சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றோம். அந்த வாசகத்தை விளங்கிக் கொள்வதற்கான நல்ல தருணம் இந்த ஜனாதிபதித் தேர்தல்!

ஆறு ஆண்டுகள் ஹாயாக ஜனாதிபதியாய் இருக்க வேண்டிய மஹிந்த ராஜபக்ஷ, நான்கு ஆண்டுகள் மட்டுமே கழிந்த நிலையில் மீண்டும் ஒரு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குத் தீர்மானம் எடுத்ததையும், தன்னுடைய நிருவாகத்தின் கீழ் நல்ல பிள்ளையாட்டம் இராணுவத் தளபதியாக வேலைபார்த்துக் கொண்டிருந்த ஜெனரல் சரத்பொன்சேகாவை சும்மா வம்புக்கிழுத்து - இன்று, தனக்கு நிகரான ஒரு சக்தியாக உருவாக்கி விட்டுள்ளதையும் பார்க்கும் போது, சும்மா கிடந்த சங்கை மஹிந்த ராஜபக்ஷ ஊதிக் கெடுத்து விட்டார் போலதான் தோன்றுகிறது.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் இந்த நாட்டின் நவீன மன்னராக அரச ஊடகங்களாலும் ஆதரவாளர்களாலும் புகழப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ - முச்சக்கர வண்டி ஓட்டுநர்களை அலரி



ரவூப் ஹக்கீம்

மாளிகைக்குள் அழைத்து வாக்குக் கேட்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார் என்று யார்தான் நினைத்தார்கள்!

ஜனாதிபதித் தேர்தலொன்று இடம்பெற்றால், மஹிந்த ராஜபக்ஷ ஏ.சி. அறைக்குள் இருந்தவாறே வெற்றிபெறுவார் என்றுதான் அவரின் எதிராளிகள் கூட எண்ணியிருந்தார்கள். ஆனால், அந்த நிலைவரத்தை அப்படியே புரட்டிப் போட்டு விட்டது எதிர்க்கட்சிகளின் அரசியல் வியூகம்!

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இப்படியொரு இக்கட்டான நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தியுள்ள இந்த அரசியல் வியூகத்தை மிக லாவகமாகத் திட்டமிட்டு வகுத்தவர்கள் என்று ஒரு சிலரை நாம் அடையாளப்படுத்த முடியும். அவர்களில் குறித்துச் சொல்லத்தக்க ஒருவர் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம்!

மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான தற்போதைய அணியை உருவாக்குவதன் பின்னணியிலும், முன்னணியிலும் நின்று - ஹக்கீம் அயராது உழைத்திருக்கின்றார்! ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டாம் எனக்கூறி அவரை ஒதுங்கச் செய்ய வைத்தவரே மு.கா. தலைவர் ஹக்கீம்தான் என்றால் நம்புவதற்குக் கொஞ்சம் கடினமாகத்தான் இருக்கும். ஆனால், அதுதான் உண்மை! ரணிலோடு மிகவும் சூசகமாகவும், பவ்வியமாகவும் பேசி ஹக்கீம் அதைச் சாதித்தார்.

எதிரணி பலமாக இல்லாத ஒரு நாட்டில் ஜனநாயகத்தன்மையை பெரிதாக எதிர்பார்க்க முடியாது. தட்டிக் கேட்க ஆளில்லாத நிலையில் அல்லது தட்டிக் கேட்கும் ஆள் பலவீனமாக இருக்கும் போது ஆட்சியாளர்கள் தமது விருப்பத்துக்கு விளையாட்டுக் காட்டத்தான் நினைப்பார்கள். இப்போதைய எதிர்க் கட்சிகளின் கூட்டணிக்கு முன்னரான அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும், பின்னரான செயற்பாடுகளுக்கும் இடையிலான மாற்றங்களை வைத்தே இந்த யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள முடியும்!

அதேவேளை, எதிர்க்கட்சிகளினுடைய கூட்டணியின் உருவாக்கத்துக்குப் பிறகு தான், நாட்டில் அரசியல் சமநிலையொன்று ஏற்பட்டுள்ளதாக மு.கா. தலைவர் ஹக்கீம் அடிக்கடி கூறி வருகின்றமையும் இங்கு கவனிக்கத்தக்கது.

இப்படியானதொரு அரசியல் சமநிலையுடன் - எதிரணியினர் இன்று தமது பொது வேட்பாளரான சரத்பொன்சேகாவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக தேர்தல் களத்தில் இறக்கியுள்ளனர். இந்தத் தேர்தலில் வெற்றிபெறுபவர் யார் என்பதில்தான் நிறையக் கட்சி களினதும் நபர்களினதும் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

குறிப்பாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி போன்ற கட்சிகளின் நல்லது கெட்டதுகள் அனைத்துமே இந்தத் தேர்தல் முடிவுகளில்தான் அடங்கியுள்ளது. இன்னும் சற்று விளக்கமாகச் சொன்னால், ஜெனரல் சரத்பொன்சேகாவின் வெற்றிதான், இந்தக் கட்சிகளின் யோகமாக அமையப் போகின்றது.

**மப்றூக்**

இதேவேளை, இன்னுமொரு விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டியுள்ளது. அதாவது, ஹக்கீம் மற்றும் மனோ கணேசன் போன்றவர்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலில் கிங் மேக்கர்களாக இருப்பதால் - தமிழ், முஸ்லிம் சமூகங்களும் பொன்சேகாவின் வெற்றியால் ஏதோ ஒருவகையில் நன்மைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக அபிப்பிராயம் கூறுகிறார் ஓய்வு பெற்ற அரசாங்க அதிகாரியொருவர்!

பல ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளின் அடிப்படையில் தான் ஹக்கீம் மற்றும் மனோகணேசன் போன்றோர் சரத்பொன்சேகாவை ஆதரிக்கின்றார்கள் எனத் தெரிகிறது. மு.காங்கிரஸைப் பொறுத்தவரை அந்தக் கட்சி - ஐக்கிய தேசிய முன்னணியுடன் எழுத்துமூலமான ஓர் ஒப்பந்தத்தைச் செய்துள்ளதாகவும், அந்த ஒப்பந்தத்திலுள்ள விடயங்களையெல்லாம் உள்ளடக்கி - ஐ.தே.முன்னணி ஓர் எழுத்து மூலமான ஒப்பந்தத்தை ஜெனரல் சரத்பொன்சேகாவுடன் செய்திருப்பதாகவும் - மு.காங்கிரஸின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி. ஹசனலி கூறுகின்றார்.

ஆனால், ஐ.தே.முன்னணியுடன் மு.கா. செய்துள்ள அந்த ஒப்பந்தத்தில் என்னென்ன விடயங்களெல்லாம் உள்ளடங்கியுள்ளன என்பது பற்றிய தெளிவானதொரு அறிக்கையினை இதுவரை - சம்பந்தப்பட்ட தரப்பினர் எவருமே வெளியிடவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. இருந்தபோதும், கடந்த வாரம் சாய்ந்தமருது பரடைஸ் ஹோட்டலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருந்த சில விடயங்களை வைத்துப் பார்க்கும் போது, மு.காங்கிரஸ் எவ்வாறான பேரங்களையெல்லாம் முன்வைத்திருக்கும் என ஓரளவு நம்மால் அனுமானிக்க முடிகிறது.

அதாவது, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் மு.காங்கிரஸ் செய்து கொண்ட ஒப்பந்தத்திலுள்ள அனைத்து விடயங்களும் செல்லுபடித் தன்மையுடைய நிலையில் இருப்பதாகவும், அது காலாவதியாகவில்லை என்றும் ஹக்கீம் அந்தச் சந்திப்பின்போது கூறினார். அப்படியென்றால், கடந்த முறை செய்து கொண்ட ஒப்பந்தத்திலுள்ள அம்சங்கள் அனைத்தும் இந்த தேர்தல் உடன்படிக்கையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றுதான் அர்த்தமாகிறது.

இதேவேளை, சரத்பொன்சேகா ஜனாதிபதியானால் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு தமிழ் பேசும் ஆளுநர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும், கல்முனைக் கரையோர மாவட்டம் உருவாக்கப்படும் என்றும் அதன்போது மு.கா. தலைவர் ஹக்கீம் உறுதியளித்தார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் நீங்கள் அமைச்சராக இருந்தபோதும் கல்முனைக் கரையோர மாவட்டத்தைப் பெற்றுத் தருவதாகக் கூறினீர்கள். ஆனால், அது நடக்கவில்லை. எப்படி உங்களை இம்முறை நம்புவது? என்கிற அர்த்தப்பட ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியொன்றை முன்வைத்தார்!

அதற்கு ஹக்கீம் பதிலளிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சியின் அந்த ஆட்சிக் காலத்தின்போது கல்முனைக் கரையோர மாவட்டத்துக்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. ஆனால், அந்தக் கரையோர மாவட்டதுக்கான தலைமையகம் அக்கரைப்பற்றில்தான் அமைய வேண்டுமென்று அப்போது அமைச்சராக இருந்த அதாஉல்லா பிரச்சினைப்படுத்தினார். அதனால்தான் - கல்முனைக் கரையோர மாவட்டத்தை உருவாக்க முடியாமல் போயிற்று என்றார். அக்கரைப்பற்றுப் பிரதேசம் அமைச்சர் அதாஉல்லாவின் சொந்த ஊர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எது எப்படியோ, சரத்பொன்சேகா ஜனாதிபதியாகத் தெரிவானால், நாம் உங்களுக்கு இன்ன இன்ன விடயங்களையெல்லாம் பெற்றுத் தருவோம் என்று ஹக்கீம், மனோ கணேசன் போன்ற சிறுபான்மையினத் தலைவர்கள் - அவர்கள் சார்ந்த சமூகங்களுக்கு வாக்குறுதிகளை ஒருபுறம் வழங்கிக் கொண்டிருக்க, மறுபுறத்தில் - எந்த வாக்குறுதிகளையும் மக்களுக்கு வழங்காமல், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமது நிபந்தனையற்ற ஆதரவினை வழங்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்கள் அமைச்சர்களான அதாஉல்லா மற்றும் ஆறுமுகன் தொண்டமான் போன்றோர்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை இன்று அவர்களுக்கு நிறையவே பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் அவர்களின் நிலங்கள் சிங்களப் பேரினவாதிகளால் அபகரிக்கப்படுவதென்பது - அந்த மக்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும்.

முஸ்லிம்களுக்குச் சொந்தமான பொத்துவில் கரங்கோவா பகுதியிலுள்ள



அதாஉல்லா

502 ஏக்கர் நெற்செய்கை நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது. தீகவாபி பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களின் காணிகள் இன்னும் களவாடப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. ஒலுவில் ஆலிம்சேனையில் செய்கை பண்ணப்பட்டிருந்த முஸ்லிம் மக்களின் நெற்பயிர்கள் அறுவடைக்குத் தயாரான நிலையில் இருந்த போது தீ வைத்து எரிக்கப் பட்டிருக்கின்றன.

(26 ஆம் பக்கம் பார்க்க)

**SWORN TRANSLATIONS**

வெளிநாடுகளுக்குத் தேவையான சகல ஆவணங்களும் ENGLISH, FRENCH, GERMAN, ITALIAN, SWEDISH, PORTUGUESE, SPANISH, ARABIC மொழிபெயர்ப்புகளுக்கு நாடுங்கள்

**T.K. INTERNATIONAL**

LANGUAGE TRANSLATION SERVICE
NO. 218, BASEMENT,
HULFTSDORP STREET,
COLOMBO-12.
TEL: 071 8258714

**வீடு விற்பனைக்கு**

வீட்டோடு சேர்ந்த 8 1/2 பேர்ச்சஸ் காணி விற்பனைக்குண்டு. அமைதியான சுற்றுச் சூழலில் நீதிமன்றத் தொகுதியின் பின்னால் சாஞ்சி ஆராயச்சிகே வத்தை கொழும்பு-12

தொடர்பு கொள்ளவும்: 0712719453

சுடர்ஒளி
ஜன. 03 - ஜன. 09, 2010

85, ஜெயந்தமலமிகாறாச்சி மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன் 0115738005 பக்ஸ் 0114734404
E-mail: editorial@sudaroli.com

## தேர்தலும் விலை குறைப்பும்

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் சில வாரங்களே இருக்கின்றன. ஜனவரி 27 ஆம் திகதி யார் இந்த நாட்டின் புதிய ஜனாதிபதி என்பது தெரிந்துவிடும். ஏற்கனவே கட்சித் தாவல்கள் ஆரம்பமாகி விட்டன. அடுத்த சில நாட்களில் மேலும் பலர் கட்சி மாறலாம். தெற்காசிய நாடுகளிலே, இப்படியான அரசியல் நிலைமை இலங்கையிலேயே அதிகமாக இருக்கிறது.

தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு இன்னும் இரண்டு வருடங்கள் இருக்கும்போதே புதிய ஜனாதிபதிக்கான தேர்தலை நடத்துகிறார் மஹிந்தர். இரண்டு ஆண்டு காலத்தின் பின் மக்கள் யுத்த வெற்றியை மறந்துவிடுவார்கள் என்ற நோக்கத்துடனேயே யுத்த வெற்றியின் சூட்டோடு தேர்தல் நடத்தப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தலில் சுலபமாக வெற்றி பெற்றுவிடலாம் என்றே மஹிந்தர் முதலில் கருதினார். ஆனால், கிணறு வெட்ட பூதம் கிளம்பியதுபோன்று எதிரணி வேட்பாளராக சரத் பொன்சேகா போட்டியிடுவது பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. வெற்றிக்கனியை சுலபமாகத் தட்டிப் பறித்துவிடலாம் என்ற எதிர்பார்ப்பில், சரத் பொன்சேகாவின் வருகையால் மண் விழுந்துவிட்டது.

புலிகளைத் தோற்கடிப்பதற்கு வகுத்த வியூகங்களைவிட சரத் பொன்சேகாவைத் தோற்கடிப்பதற்கு பெரும் வியூகங்களை வகுக்கவேண்டிய நிலைமை மஹிந்தருக்கு ஏற்பட்டுள்ளது. பொதுவாகச் சொன்னால் கடந்த நான்கு வருடங்களாக முடிசூடா மன்னர்களாக இருந்த ராஜபக்ஷ சகோதரர்கள் தற்பொழுது பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இதன் விளைவுகள்தான் தற்பொழுது அவசரம் அவசரமாக மேற்கொள்ளப்பட்டுவரும் விலைக்குறைப்புகள்.

கடந்த காலங்களில் கண்ணை மூடிக்கொண்டு விலைகள் உயர்த்தப்பட்டன. உலக சந்தையில் விலை உயர்வு என்று காரணம் கூறப்பட்டது. தற்போது திடீர் என்று விலைகள் குறைக்கப்படுகின்றன. ஆனால், மக்களுக்கு இவற்றால் பலன் இருப்பதாகத் தெரியவில்லை.

லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை 60 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. பெற்றோல் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. மாவிலையும் குறைக்கப்பட்டுள்ளது. டீசல் விலையைக் காரணம் காட்டி பஸ் கட்டணங்கள் குறைக்கப்படவில்லை. ஆனால், முச்சக்கரவண்டிக் கட்டணங்கள் குறைக்கப்பட்டிருக்க வேண்டும். அவற்றிலும் மாற்றம் இல்லை.

சில முக்கிய உணவுப் பொருள்களுக்கு இறக்குமதித் தீர்வை நீக்கப்பட்டது. ஆனால், அவற்றின் விலையும் குறைந்தமாதிரி இல்லை. சந்தையில் உருளைக்கிழங்கு, பம்பாய் வெங்காயம் ஆகியவை இன்னும் உச்ச விலையிலேயே விற்கப்படுகின்றன. பிரதானமாக மாவிலை குறைந்தால் உணவுப் பொருள்களின் விலைகள் ஓரளவு குறையவேண்டும். கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் உள்ள பெரும்பாலான உணவகங்கள் சமையலுக்குச் சமையல் எரி வாயுவையே பயன்படுத்துவதால் மா, சமையல் எரிவாயு விலைக்குறைப்புகளால் உணவகங்கள் பெருமளவு விலை குறைப்புச் செய்யமுடியும். ஆனால், உணவகங்களில் உணவுப் பொருள்களின் விலைகள் இன்னும் உச்சத்திலேயே உள்ளன. மக்கள் சுமக்கும் பொருளாதாரச் சுமையை வாழ்க்கைச் செலவு புள்ளி அதிகரிப்பு துலாம்பரமாகக் காட்டுகிறது.

ஆகவே, மா, பெற்றோல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகளைக் குறைத்தால் மட்டும் போதாது; இந்த விலைக் குறைப்புகளின் பயன்கள் மக்களை நேரடியாகச் சென்றடைவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அது மட்டும் அல்ல, தேர்தல் முடிந்தபிறகு இவற்றின் விலைகள் மீண்டும் உயர்த்தப்பட்டுவிடும் என்ற சந்தேகம் பொது மக்கள் மத்தியில் இருந்துவருகின்றது.

அரசாங்கம் இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு செயற்படவேண்டியது அவசியம். *

# சிறுபான்மைக் கட்சிகள் என்பவை என்ன?



வீதிக்கு வீதி பெட்டிக்கடை வைத்திருப்பதைப்போல இலங்கையில் சிறுபான்மை மக்களிடம் ஏராளம் கட்சிகள் இருக்கின்றன. ஒரு கணம் இந்தக் கட்சிகள் குறித்து நீங்கள் சிந்தித்தால் சிரிப்புத்தான் வரும். கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்தீர்கள் என்றால் உங்களுக்குக் கோபம் வரும். அந்தக் கோபமும் முதலில் இந்தக் கட்சிகள் மீது வரும். பிறகு உங்களின் மீதே வரும். ஏனென்றால், இந்தக் கட்சிகளால் எதுவுமே செய்யமுடியாது. உருப்படியாக ஒரு சிறு காரியத்தைத் உள்ளது. சனங்கள் யாருடன் நிற்பது, யார் சரியான தீர்மானம் எடுக்கிறார்கள் என்று தடுமாறவேண்டிய ஒரு நிலை பலவீனம் இல்லாமல் வேறென்ன?

இவற்றைப் போன்றதே தமிழ்க் கட்சிகளின் கதையும். தமிழர்களிடம் பத்துவரையான கட்சிகள் இருக்கின்றன. இவ்வளவுக்கும் அரசியலில் மிகவும் பலவீனமான நிலையிலேயே இந்தக் கட்சிகளும் மக்களும் இருக்கின்றார்கள். இந்தக் கவலைகள் எல்லாம் பலருக்கும் கிடையாது. இவ்வளவு கட்சிகளை வைத்துக்கொண்டு எந்த அரசியல் தீர்மானமும் எடுக்கமுடியாமல் தமிழர்கள் தடுமாறிக்கொண்டிருப்பது எவ்வளவு பெரிய வெட்கக்கேடான சங்கதி?

உண்மையில் சிறுபான்மைத் தரப்பின் அரசியல் பலம் என்பது அதன் விவேகத்தில்தான் தங்கியிருக்கின்றது. உலகில் சிறியதற்கும் பெரியதற்கும் இடையிலான சமநிலைகள் எப்போது முண்டு. சிங்கம் இருக்கும் காட்டில் சிறு முயலும் வாழ்கிறது. சுறாக்களும் திமிங்கிலங்களும் இருக்கும் கடலில் சிறு மீன்களும் இருக்கின்றன. அவையவை தத்தம் விவேகத்தினாலும் ஒற்றுமையினாலும் தமது இருப்பை உறுதி செய்துகொள்கின்றன.

சிறுபான்மை மக்கள் தமது ஒற்றுமையின் மூலமும் விவேகமான இருக்கிறது - இந்தத் தேர்தல். இத்தகைய பலவீனமான நிலைக்கு சிறுபான்மை மக்களைக்கொண்டு சென்றவை இந்தக் கட்சிகளே!



சிறுபான்மைக் கட்சிகள் எப்போதும் புத்திக்கூர்மையுடனும் விவேகத்துடனும் இயங்கவேண்டும் என்று பார்த்தோம். ஒன்றுபட்ட சிந்தனையும் ஒருமுகப்பட்ட செயற்பாடுமே இந்தக் கட்சிகளைப் பலப்படுத்தும். அப்படியில்லாதபோது இவற்றை எதிர்த்தரப்பு உடைப்பது தானும் ஈடேற்ற இயலாது. இப்படியிருக்கும்போது இதைத் தமிழர்கள் எப்படியோ அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று.

மலையகத்தில் மட்டும் ஐந்து, ஆறு கட்சிகள் இருக்கின்றன. கட்சிகள் அதிகரிக்கும்போது முரண்பாடுகளும், பலவீனங்களின் வெளிப்பாடுகளும் அதிகரிக்கின்றன. முரண்பாடுகள்தான் பல கட்சிகளின் உருவாக்கத்துக்குக் காரணம் என்று சொல்வோரும் உண்டு. சரியான தீர்மானங்களும், மக்களின் விமோசனத்துக்கான செயல்பாடுகளும்



கொண்ட ஒரு கட்சியில் முரண்பாடுகளுக்கும் பிரிவுகளுக்கும் இடமில்லை. தனி நலன்களே எப்போதும் முரண்பாடுகளை அதிகரிக்கச் செய்கின்றன. கட்சியில் ஜனநாயகம் இன்மையும் அதிகாரப் போட்டியும்கூட உடைவுக்கு வழியேற்படுத்துகின்றன. ஆனால், இப்படி பல கூறுகளாகப் பிரிந்து சிறு சிறு அணிகளாகக் கட்சிகள் பெருகினால், அதனால் பலவீனமடைவது அந்தச் சமூகத்தின் மக்களே! இது ஏற்கனவே பலவீனமாகவும் ஒடுக்குமுறைக்கும் உள்ளாகியிருக்கும் மக்களை மேலும் பலவீனமாக்கிவிடுகிறது.

மலையகத்தைப்போலவே, முஸ்லிம்களிடமும் நான்கு, ஐந்து பிரிவுகள் உண்டு. இந்தக் கட்சிகள் தமக்கிடையில் அடிபட்டுச் சக்தியை வீணடிக்கின்றன. எதிர்காலம் பற்றி கவலைகளோடு மக்கள் இருக்கும் போது, அதுபற்றிய அக்கறைகளை விடுத்து, தமது இருப்புக் குறித்தே இந்தக் கட்சிகள் சிந்திக்கின்றன. இன்று முஸ்லிம் மக்களின் ஒருமித்த திரட்சி என்பது கேள்விக்குரிய ஒன்றாகவே அரசியல் செயல்பாடுகளினாலும்தான் பலமாக இருக்கமுடியும். வேதனைக் குரியவாறு, இலங்கையில் சிறுபான்மை மக்கள் பிளவுண்டிருக்கின்றனர். மக்களை அழிநடத்துவதற்கென்ற கட்சிகளும் பிரிந்தே இருக்கின்றன. அதிகாரத்திலிருக்கும் இனவாதக் கட்சிகள் சிறுபான்மைக் கட்சிகளை உடைத்துச் சிதைக்கின்றன என்ற குற்றச்சாட்டுகளை சில தலைவர்கள் முன்வைக்கின்றனர். இதில் எவ்வளவு உண்மை உண்டு?

இந்தக் கட்சிகளில் முறையான ஜனநாயகத் தன்மையும் மக்கள் நேயப் பண்பும் இருந்திருக்குமானால், எதிர்த்தரப்பினால் எந்த நிலையிலும் பிரித்து இவற்றை உடைக்க முடியாது. காரணம், அப்படிப் பிரிந்து செல்வோரை மக்கள் இலகுவில் அடையாளம் கண்டு ஒதுக்கிவிடுவார்கள். பின்னர் - அவர்களால் மக்களிடம் அந்தச் சமூகத்தின் சார்பாக செல்லவும் முடியாது; செல்வாக்கைக் கோரவும் முடியாது.

ஆனால், இன்றுள்ள இந்தக் கட்சிகளுக்கும் மக்களுக்கும் இடையில் உறவே இல்லை. தாம் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற சமூகத்தில் அல்லது பிரதேசத்தில் இந்தக் கட்சித் தலைவர்கள் இருப்பதில்லை; தலைமையகங்களும் இல்லை. கொழும்பை மையமாகக் கொண்டதாகவே இந்தச் சிறுபான்மைக் கட்சிகளில் பலவும் இருக்கின்றன. கொழும்பை மையமாகக் கொண்டபின்னர் இவை எப்படி மக்களிடம் நெருக்கமாக இருக்கமுடியும்? மக்களை எப்படி விசுவாசிக்கவும் இயலும்? கொழும்பை மையமாகக் கொண்டிருப்பது என்பதன் அர்த்தமே இரண்டு பிரதான கட்சிகளை அனுசரித்துப் போவது என்பதுதான். இதனை எவரும் மறுக்கமுடியாது?

சிறுபான்மைச் சமூகங்கள் வரவர மேலும் மேலும் பலவீனமடைந்து கொண்டே போகின்றன. இதற்கு இந்தத் தேர்தல் மிகச் சிறந்ததொரு உதாரணம். எத்தகைய தீர்மானங்களும் எடுக்க முடியாத ஒரு நிலையில் தமிழ் பேசும் மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கி இலகுவானது. அதுவே இதுவரையிலும் நடந்தது. இன்னும் அதற்கான வாய்ப்புகளே அதிகம் தெரிகின்றன. இதனையிட்டு நாம் இந்தத் தலைமைகளைக் கோபிக்க முடியுமேதவிர, எதிர்த்தரப்புகளை அல்ல.

இன்று வீழ்ச்சியின் படிக்கட்டில் நிற்கும் இந்தக் கட்சிகள் மறைமுகமாகவும், நேரடியாகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும், ஐ.தே.கவையும் பலப்படுத்துகின்றன. கடந்த சில ஆண்டுகளுக்குள் வடக்கு, கிழக்கில் இந்த இரண்டு கட்சிகளின் அகத் தூண்டல் அதிகரித்திருப்பதை அவதானிப்போருக்கு இது புரியும்.



இப்படிப் பார்க்கும்போது, இந்தச் சிறுபான்மைக் கட்சிகள் பெருங்கட்சிகளுக்கு உதவுகின்றனவா? சிறுபான்மைக் கட்சிகளில் மக்களுக்கு ஏற்படும் சலிப்பும் நம்பிக்கையீனமும் பெரும்பான்மைக் கட்சிகளிடம் அவர்களை ஈர்க்கப் பண்ணுகிறது. இது மிகவும் கூர்மையாக அவதானிக்க வேண்டிய அதிமுக்கிய சங்கதி. இன்று இது சிறிய சங்கதியாகப்படலாம். ஆனால், இதன் வளர்ச்சியை அடுத்துவரும் ஆண்டுகளில் நாம் தெளிவாகக் காணமுடியும்.

மக்களின் அனுபவங்களையும் தேவைகளையும் யாரும் சரியாக மதிப்பிட்டால் இந்த அபாயத்தைத் தவிர்க்கலாம்.

- ஜோசவ் தயாளன் -



# வெளுக்கிறது சாயம் !

''ஆடான ஆடெல்லாம் தீனுக்கு அழுகுதாம். குட்டியாடு பாலுக்கு அழுததாம்'' என்றொரு நாட்டார் வழக்காற்றுத் தொடர் நம்மிடையே உண்டு. இதனையே அண்மையில் லண்டனில் வைத்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்த கருத்துக்கள் மீளவும் ஒருமுறை ஞாபகப்படுத்துகின்றன. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடு கின்ற ஒரேயொரு தமிழ் வேட்பாளர் என்ற பெருமையோடு(?) லண்டனுக் குச் சென்ற அவர் நலன்புரி நிலையங் களில் வாடும் தமிழ் மக்களைப் பற்றியோ அல்லது இப்போது தோல்வி யடைந்த இனமாக அடையாளப்படுத் தப்பட்டு தன்னுடைய சுயத்தை இழக்கும் அபாயநிலையில் உள்ள தமிழ் இனத்தின் எதிர்காலத்தைப் பற்றியோ எதுவுமே கூறாது, அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்த கதையாக உதயன்- சுடர் ஒளி பத்திரிகைகள் மீது பாய்ந்திருக்கிறார். அதுவும் இலங்கை யின் பிரதான கட்சிகளில் ஒன்றான ஐக்கியதேசியக் கட்சியின் நிகழ்ச்சி நிரலின்படியே இந்தப் பத்திரிகைகள் செயற்படுகின்றன என அவர் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார். அந்தக் குண்டு அவருக்கு எதிராகவே வெடித்ததுதான் பரிதாபமானது. இப்போது வாயைச் சும்மா வைத்திருக்கத் தெரியாமல் அவசரத்தனமாக வெளிவிட்ட வார்த்தைகளால் ஆப்பிழுத்த குரங்கு போல என்ன செய்வதென்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறார் அவர். இத்தனைக்கும் தமிழ் மக்களால் தெரிவு செய்யப் பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்று பீற்றிக்கொள்ளும் அவர், தமிழ் மக்களுக்காக எதுவுமே செய்யாது அண்மைக் காலம் வரை எங்கேயோ பதுங்கியிருந்து விட்டு தேர்தல் காலப் பறவையாக மிக அண்மையில்தான் நாடு திரும்பியிருந் தார். சண்டை உக்கிரம் பெற்றிருந்த காலப்பகுதியில் மக்களோடு மக்களாக நிற்காமல், தான் மட்டும் தப்பினால் போதும் என்ற நினைப்போடு பறந்தோடிப் போன மக்கள் பிரதி நிதிகளில்(?) அவரும் ஒருவர். நிலைமைகள் சுமுகம் அடைந்த பின்னர் கனவு கண்டவா போல போனமச்சான் திரும்பி வந்தார் கோவணத் தோடு...... மன்னிக்கவும் பூமணத்தோடு.- என வந்தவர் சும்மா இருக்க வில்லை. ஜனாதிபதித் தேர்தல் என்றவுடனேயே அதிரடியாக ஏதாவது செய்தாக வேண்டும் என்ற வெறியில் மூளையைக் கசக்கிப் பிழிந்து கடைசியாய் கண்டு பிடித்த ஒன்று தான் 'ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவரை களமிறக்க வேண்டும்' என்பது. அதுவும் தானேதான் அந்த தமிழ் வேட்பாளர் என்பதை மனதுக்குள்ளேயே முடிவு செய்துவிட்டு அதன்படி உள்வீட்டுக் காய்நகர்த்தல்களையும் மேற்கொண்டார். அவரது திட்டப்படி உருப்படாத இந்த யோசனையை எவரும் ஏற்றுக்கொள்ளா ததால் வேறு வழியின்றி தமிழ் மக்களை 'இரட்சிப்பதற்காக' தானே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்வந்து பாவப்பட்ட மக்களின் 'வயிற்றிலே பாலைவார்த்தார்.'

ஆயினும் களநிலைமைகள் வேறாகவே இருந்தன. ஜனாதிபதித் தேர்தலின் இரண்டு பிரதான வேட்பாளர் களையும் மீறி தமிழ் வேட்பாளரான சிவாஜிலிங்கம் ஒன்றும் வெட்டிக் கிழித்துவிட முடியாது. ஏனெனில் இலங்கையின் தேர்தல் முறையின் படி ஒரு பெரும்பான்மை இனத்தவரே ஜனாதிபதியாக வரக்கூடிய சூழலே நிலவுகின்றது. ஏனைய வேட்பாளர்கள் எல்லாம் பின்னொரு காலத்தில் நானும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டேன் என்று பெருமைக்கு சொல்லிக் கொள்ளலாமே தவிர ஒரு போதுமே வெற்றியை எட்டிப்பறிக்கமுடியாது. எனவே இரண்டு பிரதான வேட்பாளர் களில் யாராவது ஒருவரைத்தான் ஆதரித்தாக வேண்டும் என்பது கட்டாய மானதாக மாறிவிட்டது. இந்நிலையில் பொன்சேகாவா, மஹிந்தவா நமக்கேற்ற ஜனாதிபதி என்ற குழப்பம் தமிழ் மக்கள் மத்தியில் நீடித்து வருகின்றது. ஏனெனில் இந்த இரண்டு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களும் சிறுபான்மை இனங்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்லர். மாபெரும் மனிதப் பேரவலம் ஒன்று நிகழ்வதற்கு இந்த இரண்டு பேருமே சம பங்குதாரர் கள். அதை விட விலங்குகள் போல தமிழ் மக்கள் முட்கம்பி சூழப்பட்ட நலன்புரி நிலையங்களுக்குள் முடங்கிக் கிடப்ப தற்கும் மூல காரணம் இந்த இருவருமே தான். இந்த அவலத்தினை தென்பகுதி யில் பேரினவாதத்தின் வெற்றியாகக் காட்டி அதற்கு தாம் மட்டுமே ஏகபோக உரிமையாளர்கள் என்று நிறுவுவதில் இருவருமே ஏட்டிக் குப்போட்டியாகவே செயற்பட்டு வருகின்றனர்.

ஆனாலும் ஒரு சில காரணிகளால் தமிழ் மக்களின் மனங்கள் பொன்சேகா வின் பக்கம் சாய்வதற்கான சந்தர்ப்பங் களே அதிகமாகத் தென்படுகின்றன. ஏனெனில் மிக நீண்ட காலத்திற்கு பின்னர் போரைத் தற்காலிகமாக நிறுத்தி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைக் கொண்டு வந்த ஐக்கிய

(9 ஆம் பக்கம் பார்க்க)

பிரமன்


# எப்படி நம்புவது?

"இந்த தேசம் சிங்கள மக்களுக்கு சொந்தமானது என நான் உறுதியாக நம்புகிறேன். ஆனால் நாம் எமக்கு சமமாக நடத்தும் சிறுபான்மை சமூகங்களும் உள்ளன. இந்த நாட்டின் 75% பெருபான்மையினரான எமக்கு இந்த நாட்டை பாதுகாக்கும் உரிமையுண்டு என்பதுடன் அதை விட்டுகொடுக்கமுடியாது. நாம் பலமிக்க ஓர் தேசம். அவர்கள் எம்முடன் இந்த நாட்டில் வாழலாம். ஆனால் அவர்கள் சிறுபான்மை சமூகமாக இருக்கவேண்டுமன்றி தேவையற்றவிடயங்களை வேண்டக்கூடாது."

நஷனல் போஸ்ட் – கனடா பத்திரிகைக்கு
சரத் பொன்சேகா வழங்கிய நேர்காணலிலிருந்து

இது கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# ஜி.எஸ்.பி.வரிச்சலுகைக்கு சர்வதேசம் விதிக்கிறது நிபந்தனை

## ஜனாதிபதி வேட்பாளர்கள் நீதியான தேர்தலுக்கு உதவுவார்களா?

நடக்கப்போகும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்கள் சூடுபிடித்துள்ள நிலையில் -

துஷ்பிரயோகங்கள் அற்ற நிலையில் நீதியான தேர்தலாக ஜனாதிபதித்



தேர்தல் இடம்பெறவேண்டும் என்று சர்வதேசத்தில் இருந்து எச்சரிக்கை வந்துள்ளது.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் மற்றும் லஞ்சம், ஊழல் ஆகியன தொடர்பாகப் பகிரங்கமாகக் குற்றச்சாட்டுக்களை இலங்கைமீது சுமத்திவரும் ஐரோப்பிய ஒன்றியமே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

ஆடைத்தொழில் இறக்குமதிக்கு வழங்கிவந்த ஜி.எஸ்.பி.பிளஸ் என்ற வரிச்சலுகையை மேற்கண்ட குற்றச்சாட்டுக்கள் காரணமாக நிறுத்தியுள்ள ஐரோப்பிய ஒன்றியம், மீண்டும் அந்த வரிச்சலுகையை வழங்கத் தற்போது நிபந்தனை விதித்துள்ளது.

ஜி.எஸ்.பி.பிளஸ் என்ற வரிச்சலுகையை நிறுத்தியபோது, ஐரோப்பிய ஒன்றியம் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக இலங்கை அரசு அறிவித்தது. இப்போது அதில் இருந்து பின்வாங்கித் தொடர்ந்தும் இந்த வரிச்சலுகை யைப் பெறுவதற்குப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதாக கூறியுள்ளது.

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை என்பது என்ன? இலங்கையில் இயங்கும் நூற்றுக்கணக்கான ஆடைத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களை ஐரோப்பியச் சந்தையில் சந்தைப்படுத்துவதற்கு பின்தங்கிய நாடு என்ற வகையில் இலங்கைக்கு வரிச்சலுகை வழங்கும் ஒரு நடை முறையாகும். இந்த வரிச் சலுகை கிடைத்தால்தான், ஐரோப்பியச் சந்தையில் வேறுநாடுகளில் இருந்து வரும் பொருள்களுடன் போட்டி போட முடியும். வரிச் சலுகை கிடைக்காவிட்டால் வேறு நாடுகளில் இருந்துவரும் பொருள்களுடன் இலங்கைப் பொருள்கள் போட்டியிட முடியாது. இதன்காரணமாக இலங்கையின் ஏற்று மதியை நிறுத்த வேண்டிய நிலை உருவாகும்.

இதுவரை காலமும் இந்த வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கிவந்தது.

இதன் காரணமாக வேறுநாடுகளில் இருந்து வரும் பொருள்களுடன் போட்டி போடமுடிந்தது.

நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் முளைத்தன, ஆயிரக்கணக்கான வர்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டியது. இலங்கைக்குத் தாராளமாக அந்நியச் செலாவணியும் கிடைத்தது. நாடு பொருளாதாரத்தில் வளம் பெற்றதாக முன்னேறியது.

2006 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வெடித்த யுத்தம், பயங்கரவாதத்துக்கு எதிரானது என்று இலங்கை கூறிக் கொண்டிருந்தாலும் -

அந்த யுத்தத்தின் பின்னணியில் இடம்பெற்ற கொலைகள், ஆள்கடத்தல்கள், பலவந்தக் கைதுகள், ஊடகங்கள் மீதான அச்சுறுத்தல்கள் போன்றவற்றைச் சர்வதேச சமூகம் மனித உரிமைமீறல் சம்பவங்களாகவே பார்த்தது.

கண்மூடித்தனமாக இடம்பெற்ற சம்பவங்கள் இன்று நாட்டையே பாதித்து நிற்கின்றன.

2006 ஆண்டு ஆரம்பமான இத்தகைய மனித உரிமைமீறல் சம்பவங்களைப் பட்டியல் இட்டு வைத்துக்கொண்டு சர்வதேசம் இலங்கையை மிரட்ட ஆரம்பித்தது. அப்போதுகூட பணிந்துபோகாமல், சர்வதேசத்துக்குச் சண்டித்தனம் காட்ட முனைந்ததன் பலாபலனை இன்று மக்கள் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்குப்புறம்பாக, வன்னியில் நடந்த மோதல்களில் கடைசிக் கட்டத்தில் வகைதொகையின்றி மக்களைக் கொன்று குவித்தது. பின்னர் அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களை முள்வேலிகளுக்குள் தடுத்து வைத்து இம்சைப்படுத்தியது போன்ற கைங்கரியங்களும் இப்போது இலங்கை அரசுக்கு எதிராகத் திரும்பி நிற்கின்றன.

யாழவன்

இலங்கையில் 2002 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த போர் நிறுத்த உடன்படிக்கையை முறித்து, அந்த உடன்படிக்கையைக் கண்காணித்து வந்த ஐரோப்பிய நாடுகளின் கண்காணிப்பாளர்களை இன்றைய அரசு வெளியேற்றியது. பின்னர் அனுசரணையாளர்களாகச் செயற்பட்ட நோர்வேயை அதன் பணியில் இருந்து வெளியேற்றியது போன்றவையும் சர்வதேசத்தின் ஆத்திரத்துக்கு காரணமாகும்.

கிழக்கு மாகாணத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டு, அது தொடர்பான விசாரணைகளை முடக்கிவைத்திருப்பதும் சர்வதேசத்துக்கு இலங்கை மீது ஆத்திரம் கொள்ள மற்றொரு காரணமாக அமைந்துள்ளது.

மேற்கண்ட காரணங்கள் காரணமாக ஆத்திரம் கொண்டுள்ள சர்வதேசம் இலங்கைக்கு நெருக்கடிகளைக் கொடுத்து வருகின்றது.

இந்நிலையில், கடந்த 2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்புப் பணியை மேற்கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் இம்முறை தேர்தலில் பங்குகொள்ள மறுத்துள்ளது.

வழமைபோல் தேர்தல் ஆணையாளர், கண்காணிப்புப் பணிக்கு வருமாறு ஐரோப்பிய ஒன்றியத்தைக் கடிதம் மூலம் கேட்டிருந்தார்.

ஐரோப்பிய ஒன்றியம் தேர்தல் பணிகளில் ஈடுபட்டால் அவர்களின் பணியில் நம்பகத் தன்மை இருக்குமா என்பது சந்தேகம் என அரசுத்தரப்பில் இருந்து குரல்கள் எழும்பின.

இந்நிலையில் தேர்தல் பணிகளில் தாங்கள் ஈடுபடப்போவதில்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்து விட்டது.

அதற்கு மேலாக ஐரோப்பிய ஒன்றியம் எழுத்து மூலம் இலங்கை அரசுக்கு விடுத்துள்ள செய்தி, பல்வேறு கேள்விகளை எழுப்பி நிற்கின்றது.

''ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானதும் நீதியானதுமாக நடத்தப்படவேண்டும். தேர்தல் முறைகேடுகள் இடம்பெற்றால் இலங்கைக்கான ஜி.எஸ்.பி. சலுகைத்திட்டம் நிரந்தரமாக ரத்துச் செய்யப்பட்டுவிடும். அழுத்தங்களோ இடையூறுகளோ இன்றிச் சுதந்திரமான முறையில் மக்கள் தமக்குப் பிடித்த வேட்பாளருக்கு வாக்களிக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்'' என்று ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.


நாட்டின் பொருளா தார வளத்தை மேம் படுத்த ஜி.எஸ்.பி. சலுகையைப் பெற முயற்சிப்பதா? அல்லது முறைகேடான முறையில் செயற்பட்டு ஜனாதிபதி பதவியைத் தக்க வைப்பதா? என்ற கேள்விகள் அரச மட்டத்தில் எழுந்துள்ளதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, தேர்தல் காலத்தில் பொதுவளங்களைத் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பாக 25.12.2009 ஆம் திகதி வரை 60 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று ''ட்ரான்ஸ்பரன்ஸி இன்ரநஷனல்'' என்ற அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எந்தவொரு அரசியற்கட்சியும் ஜனாதிபதி வேட்பாளர் அல்லது வேறு ஒருவரும் -

✱அரச வாகனங்கள், ஹெலிக்கொப்டர் மற்றும் விமானம் உட்படப் போக்கு வரத்து வசதிகள்.

✱ அரச, கூட்டுஸ்தாபன



ஊழியர்கள்.

✱ அரச கட்டடங்கள் மற்றும் அரச நிதி.

✱விஷேட கடன் வசதிகள் மற்றும் அரச வங்கி நிவாரணம்.

✱ அரச ஊடகங்களில் ஒலி, ஒளி, பரப்புவேசும், அச்சு வசதிகள் உட்பட.

இத்தகைய அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றம் என்று அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட நாளில் இருந்து கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள புள்ளிவிவரங்களை நோக்கும் போது அந்த எண் ணிக்கை மேலும் உயரும் என்றே எதிர்வுகூறப்படுகின்றது.

கடந்த காலங்களில் இடம் பெற்ற மாகாணசபைத்தேர்தல்களின் அரச சொத்துக்கள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டதாக முறைப்பாடுகள் தெரிவிக் கப்பட்டபோதும், அவை கிடப்பில் போடப்பட்டுவிட்டன.

ஆனால், ஜனாதிபதி தேர்தலில் அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டால், நாடு ஜி.எஸ்.பி. பிளஸ் என்ற வரிச் சலுகையை இழக்கப்போகின்றது. அதன் மூலம் நாடு பொருளாதாரத்துறையில் குப்புறவிழப்போகின்றது.

நாட்டின் தலைவராகத் தெரிவு செய்யப்படவிருப்பவர், இவற்றைக் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டிய இக்கட்டு நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரக் கதிரையை எப்படியாவது கைப்பற்ற வேண்டும் என்ற போக்கைக் கைவிட்டு நாட்டின் நலனை, மக்களின் நலனை முன்னிறுத்தி ஜனாதிபதி வேட்பாளர்கள் செயற்பட வேண்டிய நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளதை உணர்ந்து, தெற்குத் தலைவர்கள் தமது பங்களிப்பை வழங்க வேண்டும் என்பதே பொதுஜனங்களின் எதிர்பார்ப்பாகும்.

இதை அவர்கள் நிறைவேற்றுவார்களா? அதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

✱✱✱✱✱

# உயிர் வலிக்கும் கணங்கள்...!



## மலிவாகிப்போன மரணங்கள்....

### அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்

நாம் உயிர்வாழ்வதற்காய் ஊர் ஊராய் ஓடிக்கொண்டிருந்த காலமது. ஒரு பிடி அரிசிக்காய் பதுங்குழிவிட்டு வெளியே வந்த பல உயிர்கள் காவு கொள்ளப்பட்ட சோகமது. நான் என் உறவுகளைத்தேடி அலைந்து கொண்டிருந்தேன். அதனால் தறப்பாள் கொட்டில்கள் செறிவாய் இருந்த எல்லா இடங்களுக்குள்ளும் புகுந்து எம்மக்கள் விட்ட உயிர் ஓலங்களையும், பட்ட துன்பங்களையும் இதயத்தில் சுமந்து நடந்து கொண்டிருந்தேன். கறுப்புத் தார்வீதிகள் எம்மக்களின் இரத்தத்தால் நனைந்து நிறம் மாறிப்போயிருந்தன. சிறிய பள்ளங்களில் மனித இரத்தங்கள் தேங்கி நின்றன. மழை நீரைப்போல அதன்மேல் ஈக்கள் முகாமடித்து மொய்த்துக்கொண்டிருந்தன. எனக்கு அந்த ஈக்களின் கூட்டத்தைப் பார்க்கையில் அவை அடுத்த புதிய மனித இரத்தத்தை சுவைப்பதற்காக காத்திருப்பதைப் போலிருந்தது. ஆனாலும் அவைகளின் வேண்டுதல் ஒவ்வொறு நொடியும் நிறைவேறின. நான் தவழ்ந்து கொண்டிருந்தேன். எங்கும் மரண ஓலம். இரண்டு பக்கத்தாலும் படையினர் நெருங்கி வந்துவிட்டமையால் துப்பாக்கி ரவைகள் எம்மக்களைப் பதம்பார்த்தன. மக்கள் எந்தப் பக்கம் போவதென்று தெரியாமல் மடிந்து கொண்டிருந்தனர்.

எமக்கு அப்போது ஓரளவு பாதுகாப்பான ஒரே இடமாக அரச வைத்தியசாலைகளே காணப்பட்டன. அங்கு ஷெல் விழாது என்று எண்ணியிருந்தோம். அதிலும் மண்விழுந்தது.

நான் உறவுகளைத் தேடி அலைந்து கொண்டிருந்தமையால் என் உறவுகளில் யாராவது மாஞ்சோலை வைத்தியசாலைக்கு வந்திருக்கலாம் என நினைத்து அங்கு போனேன். நான் கண்ட காட்சி என்னை உலுக்கியது. ஷெல் வீச்சினாலும் துப்பாக்கி ரவைகளினாலும் காயப்பட்டு சிகிச்சை பெற வந்தவர்களால் அந்த வைத்தியசாலை வளாகம் நிரம்பி இருந்தது. இடமில்லாமல் வெளியே மாமரங்களுக்கு கீழே எம்மக்கள் வலிகளுடன் காத்திருந்த போதுதான் அந்த கோரச் சம்பவம் இடம்பெற்றது. ஆம் கூவிக்கொண்டு வந்த ஷெல்கள் மாஞ்சோலை வைத்தியசாலை வளாகத்துக்குள்ளும் வெளியேயும் வீழ்ந்து வெடித்துச் சிதறின. நான் இதயம் பதற ஒரு பள்ளத்தினுள் பதுங்கிக் கொண்டேன். கண நேரத்தில் எங்கும் புகைமண்டலம். மெதுவாக வெளியே வந்து பார்த்தேன். எப்படிச் சொல்வது அங்கே நான் கண்ட காட்சிகளை...! தமது உயிர்களைக் காத்துக்கொள்ள வைத்திய சாலையில் வந்து தங்கியிருந்த பலர் உயிரிழந்திருந்தனர்.

. தனது ஒரு கையில் காயப்பட்டு வந்த தாய் ஒருவர், வைத்தியசாலையில் வைத்து தனது ஒரு காலை இழந்த சோகத்தைப் பார்த்தேன். தனது கணவருக்கு காயம் என அருகே இருந்து கவனித்து உதவி செய்து வந்த ஒரு பாசமான மனைவி கணவரின் கண்ணெதிரிலேயே பலியாகிப் போன துயரம் பார்த்தேன். எத்தனை சாவுகள். உயிரற்ற உடல்களையும் உயிர் போய்க் கொண்டிருக்கும் உடல்களையும் வைத்தியர்களின் உதவியோடு நகர்த்தி கொடுத்துவிட்டு நடக்கத் தொடங்கினேன். என்னைக் கடந்து காயப்பட்டவர்களை ஏற்றிய வாகனங்கள் வைத்தியசாலையை நோக்கி சீறிக்கொண்டு சென்றன . எங்கும் ஒரே வெடியோசை; விலைமதிப்பில்லாத உயிர்கள் வீதிகளிலும் வெளிகளிலும் விதைக்கப்பட்டன. காயப்பட்டு வீழும் எம் உறவுகளை தூக்கி வைத்தியசாலை நோக்கி போகும் வாகனங்களில் ஏற்றிவிட்டு நான் நடந்து கொண்டிருந்தேன்.

எங்கும் மலிவாகிப்போன மரணங்கள், பசி, ஒப்பாரிகள், சிறுவர்களின் கதறல்கள் என ஒட்டுமொத்தமாய் ஒரு செத்த வீடாய் காட்சி தந்தது முள்ளிவாய்க்கால்.

சில இடங்களில் எமது மக்களின் மனச்சாட்சிகளும் மரணித்துப் போயின. இறுதி நாட்களில் குழந்தைப் பிள்ளைகள் உள்ள தாய்மாருக்கு (மூன்று பிள்ளைகள் உள்ள குடும்பத்துக்கு) பால்மா பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன. தமது தாய் தந்தை உறவுகளை இழந்து விட்டு அநாதையாய் தவித்திடும் குழந்தைகளை சிலர் தூக்கிச் சென்று காட்டி பால்மா பைக்கற்றுக்களை வாங்கிவிட்டு, சிறிது தூரம் சென்ற பின்னர் அக் குழந்தைகளை கைவிட்டுச் சென்ற சோகங்களும் நடந்தேறின. அவர்களின் ஒரே இலக்கு தம் பசி தீர்த்து; உயிர் காப்பது மட்டுமே. அதனால் செத்து விழும் எம் மக்களோடு உயிர்தப்பியவர்களின் மனச்சாட்சிகளும் செத்துப்போயின. அப்போதுதான்.....



என் கண் எதிரே நடந்த சம்பவம் என்னை ஒரு முறை உலுக்கியது. எனக்கு முன்னே தனது உடமைகளை ஒரு சைக்கிளில் கட்டி, உருட்டிக்கொண்டு வந்தார் ஒரு குடும்பத் தலைவர். அந்த இடத்தில் ரவைகள் தலைக்கு மேலாகக் கூவிக் கொண்டிருந்தன. அப்போது எங்கிருந்தோ வந்த ஒரு ரவை அந்த குடும்பத்தவரின் முதுகைத் துளைத்து மார்புப் பகுதியால் வெளியேறி எதிரே வேலியடைத்திருந்த தகரத்தில் படீர் என்ற சத்தத்துடன் மோதியது. சோகம் என்னவெனில் என் எதிரே வந்தவர் தான் காயப்பட்டது கூடத் தெரியாமல் அந்த சத்தத்துக்கு ஒருமுறை குனிந்து விட்டு நிமிர்ந்து மீண்டும் நடக்கத் தொடங்கினார். ஓரிருஅடி எடுத்து வைத்தவர் அப்படியே சரிந்து விழ நானும் இன்னும் சிலரும் ஓடிப்போய் அவரைப் பிடித்துக் கொண்டோம். அப்போது அவ்விடத்திலிருந்து வைத்திய சாலை ஒரு நூறு மீற்றர் தூரத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. எனவே நாம் அவரை தூக்கிக்கொண்டு ஒரு 25 மீற்றர் நடந்திருப்போம். அவர் இறந்து போனார். அப்பா பின்னால் வருவார் என நினைத்துக் கொண்டு முன்னால் நடந்து கொண்டிருக்கும் குடும்பத் தினருக்கு இது தெரிந்திருக்குமா...? எவ்வளவு துயரம்.

சமகாலப் பகுதியில் ஷெல்களும், துப்பாக்கி ரவைகளும் மக்களை ஒரு புறம்கொன்று குவிக்க, மறுபுறம் பசி, வறுமை என்பன உயிரைப் பறித்தன. பசியின் கொடூரம் தாங்காமல் பலர் உணவுப் பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் களஞ்சிய அறைகளை உடைத்துத் தள்ளினர். கைக்கு கிடைத்ததை அள்ளினர். ஒருபுறம் ஷெல் வீழ்ந்து எரியும் களஞ்சியத்தில் மறுபுறம் எம்மவர் தம் குடும்பத்து பசி போக்க தம் உயிரை துச்சமாய் மதித்து பொருட்களை அள்ளிக் கொண்டிருந்தனர்.

ஆனால் அதுகூட இறைவ னுக்குப் பொறுக்கவில்லை போலும். சரியாக களஞ்சிய சாலை மீது வீழ்ந்து வெடித்த ஷெல் ஒன்றினால் அங்கிருந்த 30 க்கு மேற்பட்டோர் உடல் சிதறிப் பலியாக எஞ்சியோர் உணவுப் பொதிகளுடன் சிதறி ஓடினர்.

அப்படி சிதறி ஓடியவர்களிடையே நான் எனது நெருங்கிய உறவினர் ஒருவரைக் கண்டேன். அவர் எனது உறவுகளுடன் இருப்பதாக சொன்னதால் என் உறவுகளின் நிலை அறிய அவருடன் நடந்தேன். ஆனால் நான் அங்கே போய்ப் பார்த்தபோது அந்த இடைவெளிக்குள் வீட்டினர் ஷெல் வீச்சுக் காரணமாக வேறிடம் மாறிவிட அவர்கள் இருந்த இடம் வெற்றிடமாய் காட்சி தந்தது. என் உறவுகளைத் தேடி நானும் இன்னொருவரும் நடந்தோம். இன்னும் எத்தனையோ வலிகளை சுமக்கப் போகின்றோம் என்பது தெரியாமலேயே நடந்தோம்.

பெருமாள் சதாசிவம்

எம்மிடம் கண்ணீரும் இல்லை
புன்னகையும் இல்லை
வார்த்தை ஆயுதமேந்தக்கூட
வலுவில்லை

வரலாறு எம்மை யாசக இனமாய்
அறிவித்திருக்கிறது
அனுமதி கிடைத்தால்
ஆண்டவனையே சுட்டுக்கொல்லும்
ஆறாக் கோபம் மட்டும் மிச்சமிருக்கிறது

எம் கடைசி நம்பிக்கையே வா
உன் ஒற்றை உயிரில் ஒளிந்திருக்கிறது
எம் கோடிக் கனவுகள்!

-இயக்குநர் தாமிரா-

# அலைகடலுக்கு அப்பால் தொடரும் அவலம்

ப.திருமாவேலன்

> இந்தோனேஷியாவின் மெராக் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகில் இருந்த இலங்கை அகதிகளில் ஒருவர் மரணமாகிவிட்டார். ஜேக்கப் கிறிஸ்டியன் என்பவரின் சடலத்தை உடனடியாக இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்கு இந்தோனேஷிய அரசு அசமந்தப் போக்கை காட்டுவதாக மனிதாபிமான அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.
>
> இந்தப் படகில் உள்ள மேலும் அகதிகள் சுகயீனமுற்றுள்ளனர். அவர்களுக்கு உரிய மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அது மட்டும் அல்ல இந்த அகதிகள் இந்தோனேஷியப் பொலிஸாரால் தாக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

'இந்திய - இலங்கைக் கடல் எல்லையில் தமிழன் தத்தளித்தால் போதுமா? எங்கள் எல்லைக்கு அந்தப் பெருமை(!) வேண்டாமா?' - தன் பங்குக்கு இம்சிக்கிறது இந்தோனேசியா!

இலங்கையில் இருந்து வெளியேறி விட்டால்போதும் என்று ஒரு பழைய கப்பலைப் பிடித்துத் தப்பிய ஈழத் தமிழர்கள், மலேசியா வழியாகப் பயணித்து ஆஸ்திரேலியாவை நோக்கி கலத்தைச் செலுத்தினார்கள். இடையில் குறுக்கிட்டது இந்தோனேசியா. உயிரைத் தவிர வேறு எதுவும் இல்லாத அந்த அப்பாவி மக்கள் நடுக்கடலில் சுற்றி வளைக்கப்பட்டு 10 வாரங்களுக்கு மேலாக நிர்க்கதியாக நிறுத்தப்பட்டுள்ளார்கள். கடலின் தத்தளிப்பில் தமிழனின் வாழ்க்கை அல்லாடுகிறது!

'எப்படியாவது இந்த நாட்டில் இருந்து தப்பினால் போதும்' என்று பலரும் வெளியேற ஆரம்பிக்கிறார்கள். லட்சங்களில் பணம் வைத்திருப்பவர்கள், சில அதிகாரிகளிடம் கொடுத்து விமானங்களில் வெளியேறுகிறார்கள். இன்னும் சிலர் கொழும்பில் இருந்து விமானம் மூலம் மலேசியா அல்லது சிங்கப்பூர் செல்கிறார்கள். அங்கே இருந்து பெரிய படகுகள் மூலமாக வேறு நாடுகளுக்கு இடம் பெயர்கிறார் கள். அந்த நாட்டில் அகதிகள் அந்தஸ்தைப் பெற்று வாழலாம் என்பது அவர்களது முடிவு. இதுமாதிரி கடந்த ஐந்து மாதங்களில் நான்கு குழுக்கள் போயிருக்கின்றன. 56 பேர்கொண்ட குழு, கனடாவுக்குச் சென்றது. அவர்கள் அகதிகளாக ஏற்கப்பட்டார்கள்.

ஆஸ்திரேலியாவுக்கு முதல் கப்பலில் போனவர்களை அந்நாடு ஏற்றுக் கொண்டது. அடுத்த கப்பலில் போனவர்கள் 27 பேர் வேறு இடம் மாறி காக்கஸ் தீவுக்குப் போய் கவிழ்ந்து இறந்துபோன கொடுமையும் நடந்தது. அடுத்த 78 பேர், இடம்மாறி பன்டன் தீவில் இறங்கிவிட்டார்கள். அங்கு இன்னமும் காத்திருக்கிறார்கள். 'இவர்களை விரைவில் ஆஸ்திரேலியா அழைத்துக்கொள்ள வேண்டும். நீண்ட நாளைக்குத் தங்கவிட மாட்டோம்' என்று அங்கும் நெருக்கடி ஆரம்பித்து உள்ளது. ''எங்களுக்குத் தேவை இல்லாமல் நெருக்கடி கொடுத்தால், தற்கொலை செய்துகொள்வோம்'' என்று அவர்கள் மிரட்ட ஆரம்பித்துள்ளனர். இப்போது சென்றவர்கள் 225 பேர். ஆஸ்திரேலியாவுக்குப் போவதற்கு முன்பே இந்தோனேசியக் கடல் எல்லையில் தடுக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களில் 30 பெண்கள். 10 குழந்தைகள் இருக்கிறார்கள்.




ஒக்டோபர் 18 ஆம் திகதி சுந்தா ஜலசந்தியை இவர்களது படகு கடந்தது. இது இந்தோனேசியாவுக்கும் ஜாவா சுமத்திராவுக்கும் இடைப்பட்ட சிறிய கடல் பகுதி. இவர்களை அந்நாட்டு அதிகாரிகள் வளைத்தனர். ஆனால், மீட்புப் படகு அவர்களிடம் கிடையாது. எனவே, ஆஸ்திரேலியாவின் உதவியைக் கேட்டனர். கடற்படைக் கப்பலான ஹமிஸ் ஆர்மி டேல் அங்கு சென்றது. ''நாங்கள் அனைவரும் இலங்கைத் தமிழர்கள். ஆஸ்திரேலியாவுக்குத்தான் போகிறோம்'' என்று சொன்னார்கள். உடனே இந்தோனேசிய அதிகாரிகள், ''உங்களது நாட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று ஆஸ்திரேலியாவிடம் கோரிக்கை விடுத்தனர். அதை ஆஸ்திரேலியா ஏற்றுக் கொள்ளாதது தான் வேதனையின் தொடக்கம்.

ஒரு வார கால அவகாசம் தருவதாக இந்தோனேசியா சொன்னது. ஆனால், ஆஸ்திரேலியாவிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை. ''நாங்கள் உங்களைத் துரத்தவில்லை. அதே சமயம் நெடு நாளைக்கு இங்குநீங்கள் இருக்கவும் முடியாது'' என்று இந்தோனேசியா சொல்லிவிட்டது.

இதுவரை வந்த அனைத்து அகதிகளையும் ஏற்றுக் கொண்ட நாடுதான் ஆஸ்திரேலியா. அங்கு ஆட்சியில் இருக்கும் பிரதமர் கெவின் ரூட் இவர்க ளைப் பரிவுடன்தான் பார்த்தார். ஆனால், தொடர்ச்சியாக அகதிகள் வந்து குவிவதை அங்கு உள்ள எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்க்க ஆரம்பித்துள்ளன. ''மனிதாபிமான நடவடிக்கையா... உள்நாட்டுப் பாதுகாப்பா?'' என்ற கேள்வி இன்று பிரதானமாக எழுந்துள்ளது ஆஸ்திரேலியாவில்.

எனவே, நடுக்கடலில் தத்தளிக்கிறான் தமிழன். அவர்களிடம் எடுக்கப்பட்ட வீடியோ காட்சி ரத்தம் உறைய வைக்கிறது. ஆறு மாதக் கர்ப்பணியான ஒரு பெண்ணின் அருகில் ஒன்றரை வயதுக் குழந்தை படுத்திருக்கிறது. ''இந்த வயித்தை வைச்சுக்கிட்டு என்னால் வாழவே முடியவில்லை. வலியால் துடிச்சேன். ஒருநாள் மட்டும் டாக்டர் வந்து பார்த்தார். அதுக்குப்பிறகு வரவில்லை. சரியான சாப்பாடு இல்லை. குடிக்கத் தண்ணி இல்லை. சரியான பாத்ரூம் வசதி இல்லை. யாருக்குமே எங்களோட கஷ்டம் புரியவில்லை. எந்த நாடாவது திரும்பிப் பார்க்குமா என்று கவலையா இருக்கு. மலேசியா காட்டில் 21 நாள் கஷ்டப் பட்டுத்தான் படகைப் பிடிச்சு வந்தோம். ஆனால், நிம்மதியான இடத்துக்குப் போய்ச் சேர முடியவில்லை'' என்று கண்ணீர் வடிக்கிறார். ''இந்த மாதிரி சூழ்நிலையில இந்தக் குழந்தை பிறந்தா எப்படி நிம்மதியா வாழும்? இது பிறக்காமலே இருந்தாக் கூட நல்லது'' என்று அந்தப் பெண் கதறுகிறார். வயிற்றில் இருக்கும் பிஞ்சு, பிறக்காமலே இருக்கட்டும் என்று ஒரு தாய் நினைத்தால், அவர் அனுபவிக்கும் கொடுமை எப்படி இருக்கும்?

இன்னொரு பெண்ணுக்கு அதை விட சோகம். தன்னை கடற்படை அதிகாரி ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்ததாகக் குற்றஞ்சாட்டுகிறார்.

ஒரு சிறுமி... ''ஸ்ரீலங்காவில் நாங்கள் ஸ்கூலுக்குப் போகும்போது ஆமி அடிச்சது. பிளேனில் வந்து ஸ்கூல் மேல குண்டுபோட்டாங்க. அதனால் அங்கு இருக்க முடியாம, வேற நாட்டுக்குக் கிளம்பிட்டோம். இரண்டு, மூன்று மாசமா ஸ்கூலுக்குப் போக முடியவில்லை. படிக்காம எப்படி இருக்க முடியும்?'' என்று அப்பாவியாகக் கேட்டாள்.

அலை கடலுக்கு அப்பால் இன்னும் அவலம் தொடர்கிறது!

***

# பொன்சேகாவைத் தோற்கடிக்க சிவாஜிலிங்கம் ?

மு. தாமரைக்கண்ணன்

ஒற்றுமை உறுதியுடன் இருந்த நான்கு எருதுகளின் ஐக்கியத்தைக் குலைத்து, அதன் ரத்தத்தைக் குடித்த சிங்கத்தின் கதை சின்ன வயதில் வாசித்தது தான். அதற்கு நிகழ்கால உதாரணம், இலங்கை மண்ணில் தமிழ்த் தலைவர்கள் அடிக்கும் கூத்து. இலங்கைக்குப் புதிய ஜனாதி பதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் களத்தில், இவர்கள் தங்களது கூட்டுறவைத் துறந்து மோதிக்கொள்ள ஆரம்பித்துள்ளது சோகங்களில் துயரமானது.

இலங்கையில் உள்ள முன்வேலி முகாம்களில் அடைபட்டிருக்கும் இரண்டரை லட்சம் தமிழர்களின் ஒரே எதிர்பார்ப்பு, தங்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்வது என்பதுதான். வருகிற ஜனாதிபதித் தேர்தல் களத்தை அடிப்படையாகவைத்து, இந்த விஷயத்தை பேரம் பேசி முடிக்க வேண்டிய அக்கறை கூட இல்லை, இலங்கைத் தமிழ்க் கட்சிகளிடம்.

''தமிழர்களுக்கான பாதுகாப்புக் கேடயமாக இதுவரை புலிகள் இருந்தனர். புலிகள் இல்லாத நிலையில், மக்கள் எங்களைப் போன்ற தமிழ் அரசியல்வாதிகளைத்தான் முழுமையாக நம்புகின்றனர். ஆனால், இங்கே இருக்கும் தமிழ்த் தலைவர்களிடம் எந்த ஒற்றுமையும் இல்லாததினால் பேரம் பேசும் வலிமையை இழந்துவிட்டிருக்கிறது தமிழ்ச் சமூகம்!'' என்று வருத்தம் கலந்த அக்கறையோடு பேசுகிறார் டெலோ அமைப்பின் தலைவரும் வன்னி எம்.பியுமான செல்வம் அடைக்கலநாதன். இதையே புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த் தனும் வழிமொழிகிறார். ''தமிழரின் பலத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியாக சூரிச்சில் தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர்கள் நடத்திய கலந்தாய்வுக் கூட்டத்தில் எந்த முக்கிய முடிவும் எடுக்கப்படவில்லை'' என்கிறார் இவர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஈழ மக்கள் விடுதலை முன்னணி, புளொட், ஈ.பி. ஆர். எல்.எவ் (பத்மநாபா அணி), தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆகிய கட்சிகள் எந்தவித நிபந்தனையும், வேண்டுகோளும் இல்லாமல் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு கொடுத்திருக்கின்றன.

மனோகணேசனின் ஜனநாயக முன்னணி எதிர்க்கட்சி வேட்பாளரான சரத் பொன்சேகாவுக்குச் சில நிபந்தனைகளுடன் ஆதரவு வழங்கியிருக்கிறது. ஆனந்த சங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ராஜபக்ஷவுக்கு ஆதரவான நிலைப்பாட்டையே எடுக்கவுள்ள நிலையில், தமிழரசுக் கட்சி, டெலோ, ஈ.பி. ஆர்.எல்.எவ், தமிழ் காங்கிரஸ் ஆகிய நான்கு கட்சிகளைக்கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற தவியாகத் தவிக்கிறார்கள் ராஜபக்ஷவும் பொன்சேகாவும். சிங்கள வாக்குகள் சிதறிப் பிரியும் வேளையில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஆதரவு மட்டும் இருந்தால் எளிதில் வென்றுவிடலாம் என்பதால், கூட்டமைப்பைச் சாய்க்கப் பல்வேறு காய் நகர்த்தல்களை மேற்கொள்கிறார் ராஜபக்ஷ. இந்த இரண்டு தரப்புக்களின் படபடப்பையே ஆயுதமாக்கி, தமிழ் மக்களின் தேவைகளைப் பேரத்தின் மூலம் வென்றெடுக்க வேண்டிய கூட்டமைப்போ எந்த முடிவும் எடுக்க முடியாமல் நிலைதடுமாறிய கப்பலாகத் தடுமாறுகிறது.

இந்தக் கூட்டமைப்புதான் இலங்கையில் உள்ள தமிழர்களின் வாக்கு வங்கியின் பெரும்பகுதியை வைத்திருக்கிறது. ''தமிழ் மக்களைக் கொன்று குவித்த, புலிகளின் வீழ்ச்சிக்குக் காரணமான ராஜபக்ஷ மற்றும் பொன்சேகா இருவரையும் ஒரே கண்ணோட்டத்தில்தான் பார்க்கிறோம்'' என்று சொல்லியிருக்கிறார், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன். இதைப் பார்த்துக் கோபப்பட்ட ராஜபக்ஷ, இந்தக் கூட்டமைப்பையே பிளக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். இதில் உள்ள சில எம்.பிக்களைத் தனியாகப் பிரிக்கும் காரியங்கள் தொடங்கி இருக்கின்றன. ராஜபக்ஷவின் பிறந்தநாளின் போது கூட்டமைப்பின் எம்.பி. சிவநாதன் கிஷோர், அவரை வாழ்த்திக் கட்டித் தழுவியிருக்கிறார். அனைத்து தமிழ் எம்.பிக்களையும் தன்னைச் சந்திக்க அழைப்பு விடுத்துள்ளார் ராஜபக்ஷ.



இந்த நிலையில் எதிர்பாராத திருப்பமாக ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் எம்.பி. சிவாஜிலிங்கம் குதித்தார். இதற்கு மற்றொரு எம்.பியான ஸ்ரீகாந்தாவும் ஆதரவு தெரிவித்தார். ராஜபக்ஷவின் தூண்டுதல்படியே சிவாஜிலிங்கம் நிற்கிறார் என்று சிவசக்தி ஆனந்தன் போன்றோர் சொல்ல ஆரம்பத்திருக்கிறார்கள். ''தமிழ் எம்.பிக்கள் கூட்டமைப்பு உடையாமல் போனால் தமிழ்ச் சமூகத்தின் வாக்குகளில் பெரும் பகுதி ரணிலை நம்பி பொன்சேகாவுக்கு விழுந்து விடும். இதன் மூலம் எளிதாக ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்து விடுவார் பொன்சேகா. இதைத் தடுக்க நினைக்கும் ராஜபக்ஷ, டெலோவைச் சார்ந்த சிவாஜி லிங்கத்தைப் பயன்படுத்தி அந்த வாக்குகளைச் சிதறடிக்க நினைக் கிறார் என்று கொழும்பு பத்திரிகையாளர்கள் சொல்கிறார்கள். தற்போதைய நிலைமையில், தமிழகத்தின் விஜயகாந்த் நிலைமைதான் சிவாஜிலிங்கத்துக்கு இலங்கையில். தமிழகத்தில் கணிசமான வாக்குகளைப் பிரித்து வெற்றி தோல்வியை மாற்றும் வல்லமை படைத்த விஜய காந்தைப் போன்றுதான் இலங்கையிலும் தமிழர்களின் கணிசமான வாக்கைப் பிரித்து பொன்சேகாவின் வெற்றியைப் பறிக்கப்போகிறார் சிவாஜிலிங்கம் என்கிறார்கள் இலங்கை அரசியல் நோக்கர்கள். இதை சிவாஜிலிங்கம் மறுக்கிறார். ''இப்போதும்கூட நேரம் கடந்து விடவில்லை. வடக்கு, கிழக்கு இராணுவமயமாக்கலைத் தடுத்து எமது மக்களின் சுதந்திர மீள்குடியேற்றத்தை உறுதி செய்தால், நாளையே நான் தேர்தலில் இருந்து விலகத் தயார்!'' என்கிறார்.

இந்த ஆட்டத்தில் பரிதாபமாக பாம்புக் கொத்து வாங்குவதைத் தவிர, அப்பாவி மக்களுக்கு வேறு வழி இல்லை!

-நன்றி : குமுதம்-

# அக்கினிப் பரீட்சை!

தமிழக எதிர்க்கட்சிகள் செய்த பாவமோ என்னவோ அவற்றுக்குச் சோதனைமேல் சோதனையாக இடைத் தேர்தல்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து தொலைத்தவண்ணமே உள்ளன. ஒரு இடைத்தேர்தல் திருவிழா முடிந்த கையோடு ஓய்வின்றி அடுத்ததற்காக உழைக்கும் அவலம் இதுவாகும். கடந்த வாரம் தான் திருச்செந்தூர், கந்தகாசி ஆகிய இரு முக்கிய தொகுதிகளுக்கு



இடைத்தேர்தல் நடந்தது. சொல்லி வைத்தாற்போல் தி.மு.க வென்றது. அந்த தேர்தல் தயாரிப்பில் இருந்த போது பொன்னகரம் தொகுதி தி.மு.க எம்.எல்.ஏ இறந்துபோனார். ஜனவரி 20 ஆம் திகதி இத்தொகுதி தேர்தலுக்கு தேர்தல் ஆணையம் திகதி குறித்தது. ஆனால் பொங்கல் திருநாளை அண்டி வருவதால் ஒத்திப்போட அ.தி.மு.க, பா.ம.க உள்ளிட்ட கட்சிகள் கோரின. தி.மு.கவுக்கோ இடைத்தேர்தல் அல்வா சாப்பிடுவது போல. அரசாங்க கஜானாவிலிருந்து வாரி இறைக்க வேண்டியது தானே என்பது தி.மு.கவின் எண்ணம் போலும். இதில் வென்றால் சட்டசபையில் தி.மு.கவின் உறுப்பினர் பலம் முதன்முறையாக 100ஐத் தொடும். இந்த முறை ஆட்சியைப் பிடித்தபோதும் தி.மு.க தனித்து 117 என்ற பெரும்பான்மையை எட்டமுடியவில்லை. காங்கிரஸ் தயவில் தான் ஆட்சி நடக்கிறது. ஆனால், தான் வென்ற 94 என்ற எண்ணிக்கையிலிருந்து ஒவ்வொரு இடைத்தேர்தலாக வென்று தி.மு.க 99 வரை முன்னேறி விட்டது. அ.தி.மு.க மற்றும் ம.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் சிலர் கட்சி தாவியதும் இறந்ததும் இந்த முன்னேற்றத்துக்கு காரணமாயின. தி.மு.க இம்முறை பதவிக்கு வந்தபின் 10 சட்டசபைத் தொகுதி இடைத்தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ளது. இடையில் கம்பம், தொண்டாமுத்துர் தேர்தலை அ.தி.மு.க பகிஷ்கரிக்கப்போய் முகத்தில் கரி பூசிக்கொண்டது. திருச்செந்தூர் என்ற அ.தி.மு.க கோட்டையை தி.மு.க இம்முறை பெரும் வாக்கு இடைவெளியில் வென்றதும் குறிப்பிடத்தக்கது. திருநாவுக்கரசு, சாத்தூர் ராமச்சந்திரன் என கட்சிக்காக உண்மையாக உழைத்த தென்மாவட்டத்தவர்களை விரட்டியடித்த ஜெயலலிதா மற்றொரு தென் மாவட்டமான தூத்துக்குடியின் திருச்செந்தூரிலும் அனிதா ராதாகிருஷ்ணன் என்ற முக்கிய தூணை துரத்தியடித்தார். நேரடியாக தி.மு.கவில் தஞ்சமடைந்த அவர் இம்முறை தி.மு.க சார்பில் வென்றுள்ளார். அவருக்கு அமைச்சர் பதவியும் கிடைக்கலாமென்று தெரிகிறது. ஜெயலலிதாவின் தவறுகள் கட்சியை சின்னாபின்னமாக்கி வருகின்றன என்பதற்கு அனிதா ராதாகிருஷ்ணன் மற்றொரு சாட்சி எனலாம்.

இதேவேளை பென்னாகரம் தொகுதியில் விருப்பமின்றியாவது போட்டியிடும் நிலைக்கு பா.ம.க தள்ளப்பட்டுள்ளது. அக்கட்சிக்கு தர்மபுரி, விழுப்புரம், கடலூர், ஸ்ரீபெரும்புதூர், சிதம்பரம் ஆகிய மாவட்டங்களில் தான் பெரும் செல்வாக்குள்ளது. அதிலும் தர்மபுரி மாவட்ட பென்னாகரம் முன்பு பா.ம.க வென்ற தொகுதியாகும். அங்கு பெருந்தொகை வன்னியர்கள் வாழ்கின்றனர். எனவே வேறெங்கு போட்டியிடாவிட்டாலும் இங்கு போட்டியிட்டு தன் வாக்கு வங்கியை எடுத்துக் காட்டவேண்டிய நிர்ப்பந்தம் பா.ம.கவுக்கு உள்ளது. ஆனால் தி.மு.கவின் படை மற்றும் பண பலத்தின் முன்னால் தாக்குப்பிடிக்க இயலாது என்பதும் தெரிந்த விடயம். அ.தி.மு.கவுடன் கூட்டணியில் இருந்திருந்தாலாவது அவர்களது ஆதரவுடன் தேறி இருக்கலாம். தனித்துப் போட்டியிடாமல் விடவும் முடியாது. அதே நேரம் போட்டியிட்டுத் தோல்வி கண்டாலும் பா.ம.கவின் பலம் இவ்வளவே என தி.மு.கவும் அ.தி.மு.கவும் எள்ளி நகையிடத் தொடங்கிவிடும். எதிர்காலத்தில் தி.மு.கவுடனோ அ.தி.மு.கவுடனோ கூட்டணி வைக்க பேரம் பேசுவதற்கு பா.ம.கவுக்கு உள்ள வலிமை இதனால் வெகுவாகப் பாதிக்கப்படலாம். வன்னியர்கள் மிக அதிகமுள்ள தொகுதியிலேயே பா.ம.கவின் நிலை இதுவென்றால் மற்றைய தொகுதிகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். ஆக இருதலைக் கொள்ளி எறும்பின் நிலைதான் டாக்டர் ராமதாஸுக்கு.

அ.தி.மு.க. வினது இத்தொகுதியில் போட்டியிடாது பா.ம.கவை ஆதரித்தால் தி.மு.கவுக்கு கடும் சவால் ஏற்படுத்தலாம். ஆனால் இப்போதுதான் ராமதாஸ்-'ஜெ' தேனிலவு முறிந்த புதிது. மீண்டும் ஒட்டுப் போடுவது கடிமையாகவே இருக்கும். ஆனால் ஜெயலலிதாவுக்கும் இதைத்தவிர பயனுள்ள வழிவகை ஏதுமில்லை. தி.மு.க விஸ்வரூபம் எடுக்க எதிர்க்கட்சிகள் ஒன்றுடன் ஒன்றுமென்மேலும் அடித்துக் கொள்வதுதான் பெரிய பரிதாபமாகும். உதாரணமாக பா.ம.க, பி.ஜே.பி, அ.தி.மு.க ஆகிய மூன்று தரப்புக்களும் இணைந்து செயற்பட்டால் தி.மு.கவுக்கு கடும் சவாலாக விளங்கமுடியும். வன்னியர் தொகுதி என்பதால் பா.ம.க. இங்கு ஏற்கனவே வென்றும் உள்ளது. சுற்றி உள்ள ஓமலூர், கன்னயம், தர்மபுரி தொகுதிகளுக்குக் கூட பா.ம.கவினரே எம்.எல்.ஏக்களாக உள்ளனர். எவ்வாறாயினும் சவாலை எதிர் கொள்வது என பா.ம.கவினர் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

டாக்டர் ராமதாஸும் மகன் அன்புமணியும் தொகுதியில் முகாமிட்டு மும்முரமாக தேர்தல் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். மூத்த பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி ஏற்கனவே தொகுதியிலேயே தான் தங்கியுள்ளார். பின்னிடுவதைக் காட்டிலும் போராடித் தோற்றாலும் பரவாயில்லை என பா.ம.க. தீர்மானித்திருப்பது தேர்தலில் விறுவிறுப்பு அதிகரிக்க காரணம் என்பதை மறுக்க முடியாது. பா.ம.க. வேட்பாளர்கள் பெயரும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்க்கட்சிகளின் கோரிக்கைப்படி சில வாரங்கள் தேர்தலைப் பின்போட தேர்தல் ஆணையம் இணங்கி யுள்ளது. இது தேர்தல் வேலை செய்ய பா.ம.கவுக்கு இன்னும் கால அவகாசத்தை வழங்கும் என கட்சிகள் குதூகலத்தில் உள்ளன.

இதற்கிடையில் நான்முனைப் போட்டிவந்தால் பா.ம.கவை நாலாம் இடத்துக்கு தள்ளுவேன் என தி.மு.கவும் சபதம் எடுத்துள்ளது. தி.மு.கவின் வன்னியர் சமூக அமைச்சர்களான பொன்முடியும் எ.வா.வேலுவும் பிரசாரம் செய்யத் தொடங்கும்போது இதையே தமது குறிக்கோளாக வகுத்துக் கொண் டுள்ளனர். இந்த வேலுவும் பொன்முடியும் ஜெகதாட்சகனும் சேர்ந்துதான் லோக்சபா தேர்தலில் பா.ம.க. போட்டியிட்ட 7 தொகுதிகளிலும் மண் கவ்வ வைத்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. இந்தப் படை பலத்தில் முன் பா.ம.க. தாக்குப்பிடிக்க முடியாது என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். தனது இருப்பை நிலை நாட்டவும் எதிர்காலத்தில் அ.தி.மு.கவுடனோ தி.மு.கவுடனோ கூட்டணி வைக்கும்போது தனது பலத்தை எடுத்துக்காட்டவும் பா.ம.கவுக்கு வெல்வதைத் தவிர வேறு வழியில்லை. தி.மு.கவோ நூறாவது உறுப்பினரைப் பெறத் துடியாய்த் துடிக்கிறது. பெரும்பான்மை பெற இன்னும் 17 ஆசனங்களே தேவை. அ.தி.மு.கவுடன் முரண்பட்ட எஸ்.வி.சேக்கும் ராஜினாமா செய்தால் மைலாப்பூர் தொகுதிக்கும் இடைத் தேர்தல் வரலாம். ஏற்கனவே 6 ஆக இருந்த அ.தி.மு.க வின் உறுப்பினர்



எண்ணிக்கை 56 ஆகி விட்டது. ஜெயலலிதா மென்மேலும் எந்த மூத்த தலைவரைக் கட்சியில் இருந்து துரத்தியடிக்கலாம் என்ற யோசனையில் ஆழ்ந்துள்ளார் போலும். அடுத்த சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. வெல்ல முடியாவிடின் அக்கட்சி இருந்த இடம் தெரியாது போய் விடும். அதன்பின் தமிழகத்தில் பிரதான கட்சியாக தி.மு.கவே இருக்கக்கூடும். முக்கிய எதிர்க்கட்சி என்று எதுவும் இராத போதும் காங்கிரஸ் அ.தி.மு.கவின் இடத்தை எடுக்க வாய்ப்புள்ளது. இவ்வா றுள்ள நிலையில் பா.ம.கவுக்கும் மீண்டும் தலையெடுக்க வாய்ப்பு ஏற்படலாம். ஜாதிகம் பேசிக் கட்சி வளர்ப்பது சுத்த அபத்த முயற்சி என்பதை பா.ம.க தலைவர் இந்தளவில் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் ஜாதிபேசாது சுயநலமின்றி அரசியல் செய்த வை.கோவும் மூக்குடைபட்டுப் போயுள்ளதைப் பார்க்கும்போது தமிழகத்துக்கு என்னதான் மருந்து என்று எண்ணத் தோன்றலாம். தி.மு.க கொடுத்திருக்கும் மருந்துதான் தமிழகத்துக்கு மிகப் பொருத்தமானது எனலாம். இல்லாவிடில் இவ்வளவு தடைகளுக்கும் தாக்குப்பிடித்து குடும்பத்தை உயரத்தில் இவ்வளவு உயர்த்தி வைப்பது இலகுவான காரியமன்று.

-எஸ்.சுரேந்திரஜித்-

# வெளுக்கிறது சாயம்!

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

தேசியக்கட்சி பொன் சேகாவை ஆதரிக்கின்றது. எனவே பொன் சேகாவை ஜனாதிபதி ஆக்குவதன் மூலம் ஏதாவது அபிவிருத்திகள் நிகழலாம் என்ற நப்பாசை பலரிடம் உண்டு. அத்தோடு ஜனாதிபதி சொன்னதால்தானே இத்தகைய ஈவிரக்கமற்ற யுத்தத்தை பொன்சேகா தலைமை ஏற்க வேண்டி வந்தது'? எய்தவனை விட்டு விட்டு அம்பை நொந்து என்ன பலன்? என்று சிந்திப்போரும் உள்ர். கொலை செய்தவனை விடவும் அதற்கு தூண்டுதலாக பின்னணியில் இருந்தவனே அதிக குற்றமிழைத்தவன் என்ற மனுதர்ம விதியும் தமிழர்களிடையே வழி வழியாக ஊறிவந்த மரபார்ந்த விடயம். இவற்றின் காரணமாக மீண்டும் ஒரு முறை மஹிந்த குடும்பத்தை ஆட்சிக் கட்டிலில் ஏற விடாது செய்வதற்கு தமிழ் மக்கள் தமது வாக்குகளை பொன்சேகாவின் பக்கம் வழங்கக் கூடும் என்று ஆளும் தரப்பு எண்ணுகின்றது. எப்பாடு பட்டாவது சிறுபான்மை இனத்தவரின் வாக்குகளைப் பிரித்து விட வேண்டும் என்று அது திட்டம் போட்டது. இதற்காக முஸ்லிம், தமிழ் இனத்தவர்களிடமிருந்து இரண்டு விசுவாசிகள் அரசுக்குத் தேவைப்பட்டார்கள். மஹிந்த அரசின் காலடியைச் சுற்றிக்கொண்டிருந்த மயோன் முஸ்தப்பா முஸ்லிம் மக்களின் வாக்குகளை சிதறடிப்பதற்காக ஜனாதிபதித் தேர்தலில் ஒரு ''பொம்மை' போல நிறுத்தப்பட்டார். ஆனால் தமிழர் தரப்பில் தான் இப்படியான ஒரு விசுவாசி இல்லாமல் ஆளும் தரப்பு நிறையவே அல்லாடிப்போனது. இந்நிலையில் தான் அரசுக்கு ஆபத்பாந்தவனாக அபயக்கரம் கொடுத்தார் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் முதல்வருமான எம்.கே. சிவாஜிலிங்கம்.

ஆயினும் சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சூட்சுமத்தை புட்டு புட்டு வைக்கத்தொடங்கின ஊடகங்கள். எப்போதுமே தமிழ் மக்களுக்காக துணிந்து குரல் கொடுக்கும் உதயன், சுடர் ஒளி பத்திரிகைகள் இதில் முன்னின்றன. இதுதான் சிவாஜிலிங்கத்தின் இரத்தக் கொதிப்பை அதிகப்படுத்தியிருக்க வேண்டும். நாட்டில் இன்னும் இருந்தால் தன்னுடைய சாயம் வெளுத்து விடும் என்ற எண்ணத்தில் 'வெளிக்கிடடி லண்டனுக்கு' என்ற தோரணையில் பெட்டி படுக்கைகளோடு விமானம் ஏறிவிட்டார்.

நம்மிடையே ஒரு சுவாரசியமான ரயில் கதை உண்டு. யாழ்தேவி காங்கேசன் துறைவரை ஓடிய காலத்தில் உரும்பிராய் வாசி ஒருவர் கொழும்பில் ரயில் ஏறினார். அவரது அதிர்ஷ்டத்திற்கு இருப்பதற்கு ஒரு 'சீற்றும்' கிடைத்துவிட்டது. ஒய்யாரமாக ரயிலில் வந்த அவருக்கு கெடுகாலம் அடுத்த ரயில் தரிப்பு நிலையத்திலேயே காத்திருந்தது. திடுதிடுவென ரயிலில் ஏறிய ஒரு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் உரும்பிராய் வாசியை ஆசனத்தை விட்டு எழும்பச் சொன்னார். ஆனால் அவர்தான் ஊர் மைனராச்சே! எழும்பாமல் கொஞ்ச நேரம் சண்டித்தனம் காட்டினார். பொறுத்துப்பார்த்த பெரும்பான்மைக் காரர் ஓங்கி ஒரு குத்துவிட்டார். அவ்வளவு தான். சப்தநாடியும் ஒடுங்கிப் போய் எழுந்து நின்றார் உரும்பிராய்க் காரர். தன்னுடைய ஆசனத்தில் அமர்ந்த பெரும்பான்மைக்காரர் மதவாச்சியில் இறங்கிய பின்னரும் அடிப்பயத்தில் உரும்பிராய் மட்டும் நின்ற படியே வந்து இறங்கியிருக் கிறார். இறங்கியதும் முதல் வேலையாக வேலியிலிருந்த கிளுவங்கதியாலை முறித்து ''யாரோட சேட்டை விடுகிறாய்? எங்களை பற்றி உனக்கு தெரியாது'' என்று மதவாச்சியில் இறங்கிப் போன பெரும்பான்மைக் காரருக்கு உரும்பிராயில் நின்றபடி அறைகூவல் விடுத்தார் நம்மவர்.

இப்படியான நிலையிலேயே இலங்கையில் தன்னுடைய பருப்பு வேகாது என்று தெரிந்து புலம் பெயர்ந்தவர்களின் தலையில் சம்பல் அரைக்கப் போயிருக்கிறார் சிவாஜி லிங்கம். ஆயினும் தன்னுடைய பரபரப்புக்காக - சுயநலத்துக்காக - ஒரு ஊடகத்தை, அதுவும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்காக உயிரிழப்புகள், உடமையிழப்புகள் போன்றவற்றை அடிக்கடி சந்தித்த உதயன்,சுடர் ஒளி நிர்வாகத்தை இவ்வாறு சேறு பூசியிருக்கிறார் அவர். ஆயினும் முழுப்பூசணிக்காயை சோற்றிலே மறைக்க முடியாது. எல்லோருக்குமே உண்மை பட்டவர்த்தனமாகத் தெரியும் என்பதால் இப்போது எஞ்சியிருந்த மிச்சசொச்ச சாயங்களும் கரைந்து போக அம்மணமாகியது சிவாஜிலிங்கமேதான்!

****



# கீதா என்னைத் தேடி வருவாள்

வேலுசாமிதான் அந்த அழகிய எஸ்டேட்டுக்குச் சொந்தகாரன். வேலுசாமியின் தந்தைக்குப் பின்னர் வேலுசாமி அந்தத் தேயிலை எஸ்டேட்டை எது வித தடையுமின்றி நடத்தி வருகிறார்.

சிறு வயது முதலே எஸ்டேட்டில் குடும்பமாக இருந்ததால் வேலுசாமி திருமணம் முடித்தும் அங்கு தொடர்ந்து வசிப்பதற்குச் சிரமப் படவில்லை. காலம் வேகமாக ஓடியது. வேலுவுக்கு அழகிய தேவதை மகளாகப் பிறந்தாள். வேலுவின் குடும்பத்தவர்கள் வேலுவின் மகளான கீதாவை கண்களைப் போல பார்த்துக் கொண்டனர். கீதாவுக்கு அவளது பெற்றோர் எந்தக் குறையும் வைக்காது பார்த்துப் பார்த்துச் செய்தாலும், ஒரு குறை இருந்தது. அது தான் ஒரே மகளான கீதாவுடன் விளையாட யாரும் இல்லை என்பதே. இதனை ஒரு கட்டத்தில் உணர்ந்த கீதாவின் பெற்றோர், வேலுசாமியின் அக்கா பிள்ளைகளை அங்கு வரவழைத்து, கீதாவைச் சமாதானப்படுத்தினர்.

ஆனால், கீதாவுக்கு அவர்களின் செயலில் உடன்பாடு இருக்கவில்லை அவளது சிந்தனை அனைத்தும் கீதா வின் எஸ்டேட்டில் தொழில் செய்யும் தொழிலாளிகளின் பிள்ளைகளின் சுதந்திரத்திலே இருந்தது. கீதா தொழிலாளிகளின் பிள்ளைகள் கத்திக்கொண்டு ஓடிப் பிடித்துச் சிரித்து மகிழ்வதைக் காணும் போதெல்லாம் ஏக்கத்தோடு இரசித்து மகிழ்வாள்.

கீதா பெரியவளான பின்னர் அவளுக்கு இருந்த சுதந்திரமும் இல்லாமல் போனது. கீதாவின் வீட்டுக்கு அண்மையில் மைதானம் இருப்பதால், அங்கு எப்போதும் இளைஞர்களின் நடமாட்டம் இருந்து கொண்டே இருக்கும். எனவே கீதாவை அவர்களது பெற்றோர் வெளியே தலை காட்ட விட மாட்டார்கள்.

கீதா கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சை எழுதிவிட்டு வீட்டில் இருந்த நாட்களில் கீதாவின் அத்தை பையன் பாபு எஸ்டேட்டுக்கு வந்திருந்தான். கீதாவுக்கு பாபுவைப் பிடிக்காத காரணம், கீதாவுக்கு பாபுதான் என இரு வீட்டாரும் தீர்மானித்து வைத்திருந்ததே. இதனை அறிந்து கொண்ட பாபு, கீதாவின் மீது அதிகப்படியான கரிசனை காட்டினான். இது கீதாவுக்குக் கஷ்டமாக இருந்தாலும், பாபுவால் கீதாவுக்குச் சுதந்திரம் கிடைக்கவே கீதா உற்சாகமானாள்.

கீதா என்ற பறவை முதல் முறையாக அந்த ஊருக்குள் சிறகடித்துப் பறந்தது. கீதா இளைஞர்கள் இல்லாத போது மைதானத்தில் பாபுவுடன் ஓடி ஆடி மகிழ்ந்தாள். இவ்வாறு தொடர்ந்ததில் பாபுவுக்கு மைதானத்தில் விளையாட வரும் இளைஞர்களுடன் பழக்கம் ஏற்பட்டது. அவர்கள் நண்பர்கள் ஆனார்கள். இதனால் பாபுவும் தினமும் கிரிக்கெட் விளையாடச் சென்றான். பாபு கிரிக்கெட் விளையாடுகையில் கீதா மைதானத்திற்கு அருகில் நின்று வேடிக்கை பார்ப்பாள்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் கீதாவின் கண்களும் சீலனின் கண்களும் அடிக்கடி சந்தித்தன. சீலன் அந்த எஸ்டேட்டில் தொழில் செய்யும் தொழிலாளியின் மகன். நன்றாகப் படிப்பவன். கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சையை முடித்துவிட்டு பல்கலை கழக அனுமதிக்காகக் காத்திருந்தான். அவனுக்கு விடுமுறை என்பதால் மைதானத்திற்கு விளையாட வருவான். பாடசாலை நாட்களில் கீதா சீலனைச் சந்தித்திருந்தாலும், அவள் ஒரு தடவையேனும் பேசியதில்லை. கீதா வுக்கு ஏனோ சீலனை ஒரே பார்வையில் பிடித்துப்போனது. அடுத்து வந்த நாட்களில் கீதா சீலனைப் பார்ப்பதற்காகவே மைதானத்திற்குச் சென்றாள்.

இதேவேளை, கீதாவுக்கு சாதாரணதரப் பரீட்சைப் பெறு பேறுகள் சிறந்த முறையில் வரவே கீதா உயர்தரத்தில் படிப்பதற்காகத் தயாரானாள். உயர் தரத்தில் மேலதிகமாகப் படிக்க வேண்டிய தேவை ஏற்படவே தனியார் வகுப்புகளுக்குச் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. தனியே வகுப்பிற்குச் செல்லும் கீதா, ஒரு நாள் பஸ்ஸில் சீலனை சந்தித்தாள். சீலன் தயக்கமின்றி ''ஹாய் என்ன கார் பயணம் வெறுத்து விட்டதா?'' என நக்கலாக கேட்க, பதிலுக்குப் புன்னகைத்த கீதா ''ஆமாம்'' என்பதைப் போல தலையை அசைத்தாள்.

அதன் பின்னர் அவர்கள் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர். அதில் கீதா வுக்குக் கிடைத்த மகிழ்ச்சியான செய்தி, கீதா மேலதிக வகுப்பிற்குச் செல்லும் கல்விநிலையத்தில் சீலன் படித்துக் கொடுக்கிறான் என்பது. எனவே, கீதா தினமும் சீலனுடன் வகுப்பிற்கு சென்று வரலானாள்.

நண்பர்களாகப் பழகினாலும் இருவரின் எண்ணமும் ஒன்றாகவே இருந்ததால் காதலர்களாகி விட்டனர். சீலனுக்கு பல்கலைகழக அனுமதி கிடைத்தவுடன் அவனது குடும்பத்தினர் அந்தக் கிராமத்தை விட்டு நகரத்திற்குச் சென்று குடியேறினார்கள். சீலனின் வீட்டில் அவனுடைய காதலுக்குப் பச்சைக் கொடி காட்டினாலும், கீதாவின் வீட்டார்கள் பாபு தான் கீதாவின் கணவன் என்ற முடிவில் உறுதியாக இருந்தனர்.

கீதா பாபுவை விரும்புவதாக அவர்கள் நம்பினர். கீதாவுக்கு இவை அனைத்தும் நன்கு தெரிந்திருந்தாலும், சீலன்தான் தனது துணை என்பதில் முடிவாக இருந்தாள். சீலன் கீதா இருவரும் ஒரே இடத்தில் இருந்தாலும், அவர்களுக்கு தனித்துப் பேச நேரம் கிடைக்கவில்லை. இதே வேளை, கீதாவுக்கு உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகவே சீலனால் கீதாவை நீண்ட நாட்களாக சந்திக்க முடியாமற் போயிற்று.

எனவே கீதா, சீலன் இருவரும் திட்டமிட்டவாறு பரீட்சையின் இறுதி நாளன்று பரீட்சை முடிந்ததும் சந்தித்தனர். பரீட்சைக்குப் பின்னர் கீதாவை அடிக்கடி சந்திக்க முடியாது என்று உணர்ந்து கொண்ட சீலன் கீதாவுடன் நிறையப் பேசவேண்டும் என்பதற்காகப் பூங்காவுக்கு அழைத்துச் சென்றான். மத்தியானம் பரீட்சை முடிந்து சீலனோடு பூங்காவுக்குச் சென்ற கீதா, மாலை 6மணிக்கு வீடு திரும்பினாள்.

இருள் வெளிச்சத்தை விரட்டிக் கொண்டிருந்தது. கீதாவின் வீட்டுக்கு இரண்டு மணித்தியால பயணம் என்பதால் கடுகதி பஸ்ஸில் செல்வதென அவர்கள் தீர்மானித்தனர். கீதா சீலனோடு ஆடிப் பாடித் திரிந்ததில் களைத்துப் போயிருந்தாள். பஸ்ஸில் ஏறியதும் சீலனின் மடியில் சாய்ந்து படுத்து விட்டாள். அவர்களுக்கு முன் இருக்கையில் கீதாவின் தந்தை அமர்ந்திருந்ததை அந்தக் காதலர்கள் அறிந்திருக்கவில்லை. தனது மகள் தன்னிடம் கூலித் தொழில் செய்தவனின் மகனின் மடியில் படுப்பதைக் கண்ட கீதாவின் தந்தை கொதித்துப் போனார்.

அவர்களுக்குத் தெரியாமலே பஸ்ஸை விட்டு இறங்கியவர், கீதாவுக்கு முன்னராகவே வீட்டுக்குச் சென்று சேர்ந்தார். 8.30 மணியளவில் வீடு வந்து சேர்ந்த கீதா உணவருந்தி விட்டு வழமைபோல நித்திரைக்குச் சென்று விடவே, கீதாவின் தந்தை, அவளின் தாயிடம் தான் கீதாவைச் சீலனோடு கண்ட செய்தியைக் கூறியதோடு, நாளையே பாபுவுக்கும் கீதாவுக்கும் பதிவுத் திருமணம் செய்ய வேண்டும் எனவும் தீர்மானித்தார்.

காலையில் எழுந்து கீதா வீட்டில் நின்ற பாபுவைப் பார்த்து வியப்படைந்ததோடு, வீட்டில் நெருங்கின சொந்தங்கள் ஓடி ஆடி வேலை செய்வதைப் பார்த்துக் குழம்பிப் போனாள். பாபுவின் பேச்சால் நடப்பதை உணர்ந்து கொண்ட கீதா, பாபுவை அழைத்து தனது காதலைப் பற்றி எடுத்து கூறினாள்.

''உன்னைத் திருமணம் செய்தால் நான் தற்கொலை செய்து கொள்வேன்'' என கீதா கூறவே நிலைமையைப் புரிந்து கொண்டான். கீதாவிடம் எதுவித பதிலும் கூறாது, அவளுடைய பெறறோரிடம் ''எனக்குத் திருமணம் வேண்டாம்; கீதாவுக்கு சீலனைத் திருமணம் செய்து வைத்தால் என்ன?'' என்று கேட்டான். தனது மகளின் செயல் அனைவருக்கும் தெரிந்து விட்டதே என வெட்கிப்போன கீதாவின் தந்தை மாரடைப்பினால் மரணத்தைத் தழுவினார்.

தனது கண் முன்னாலேயே தந்தையைப் பறிகொடுத்த கீதா மௌனமாகிப் போனாள். தனியே வாழ்வதாய் தீர்மானித்தாள் இன்றும் தனித்து வாழ்கிறாள். அவனுக்காக வாழும் சீலன் இன்று வரை, ஒரு நாள் கீதா என்னை தேடி வருவாள் எனக் காத்திருக்கிறான் என்கிறான் கீதாவின் அத்தை மகன் பாபு.

* * *

# அந்த முகமும் இந்த முகமும்



''அப்பா எனக்கொரு சந்தேகம்''. உயர்தர வகுப்பு முதலாண்டு மாணவனான மகன் கூறினான்.

''என்ன சந்தேகம்?'' அப்பா கேட்டார்.

''எங்கடை இங்கிலீஷ் டீச்சர் சொன்ன ஒரு விஷயம் எனக்குச் சரியா விளங்கேல்லையப்பா. Between the devil and the deep blue sea எண்டால் என்னப்பா அர்த்தம்?''

''நீ ஒரு இடத்துக்குப் போக வேணும் எண்டு வைச்சுக்கொள். ஒரு பக்கம் பார்த்தால் ஆழமான நீலக்கடல் இருக்குது. சரி மற்றப்பக்கத்தாலை போவம் எண்டா, அங்கை பிசாசு நிக்குது. ரெண்டு பாதைகளும் அடைபட்டுக் கிடக்கு. அதாவது அதையும் செய்யேலாமல் இதையும் செய்யேலாமல் தவிக்கிற ஒரு நிலையைத்தான் அந்த வார்த்தைகள் சுட்டிக் காட்டுது.''

''இப்ப வரப்போற தேர்தலும் எங்கடை சனங்களும் மாதிரி எண்டு சொல்லுங்கோவன்.''

''ஏன் அப்பிடிச் சொல்லுறாய்?''

''ஒரு வேட்பாளருக்குப் பல முகங்கள். அதிலை ஒரு கோர முகத்தை அவர் கழட்டி எறிஞ்சிட்டார். 'அவர் கூடாதெண்டு. வீசின. நான்தான் நல்லமுகம். அவர் நல்லதெண்டு காட்டுற முகம் உண்மையிலை கூடாத முகம்' எண்டு அவர் வீசிய முகம் சொல்லி விடுது. சனத்துக்கு ஒரே குழப்பம். நான் சொல்லுறது சரிதானே, அப்பா?

''இந்த ரெண்டு முகத்துக்கும் மட்டுந்தான் போட்டியோ?''

''மற்ற முகங்கள் ஒளியில்லாமல் மங்கிப் போய்கிடக்கு. இருட்டுக்கை இருக்கிற சனம் வெளிச்சத்தைத் தானே தேடும்?''

ஏன் தூர தேசத்திலை இருக்கிற நம்பிக்கை நட்சத்திரங்கள் வெளிச்சம் வீசும் எண்டு சொல்லுறாங்களே. வெளிநாட்டிலை இருக்கிற உன்ரை அண்ணை ஹூம் மாமாவும் அதைத்தான் சொல்லுறாங்கள்.''

''யார் சாமான் வாங்கித் தந்தாலும் நாங்க தானே சமைக்க வேணும்? எங்களுக்கு என்ன தேவையெண்டு எங்களுக்குத்தான் தெரியும். எங்கடை சுவாத்தியத்துக்கு, எங்கடை உடல் நிலைக்குத் தேவையான சாப்பாட்டை நாங்கள் தானே தெரிவு செய்ய வேணும்?''

''சரி,சரி. உனக்கு அரசியல் வேண்டாம். நீ கெதியா ஏ.எல்லை முடி. நான் உன்னையும் வெளிநாட்டுக்கு அனுப்பத்தான் இருக்கிறன்.''

''இல்லையப்பா, எனக்கு இங்கை வேலை இருக்கு.''

''என்ன?'' அதிர்ச்சியுற்ற அப்பாவின் பார்வை சுவரில் நான்கு சட்டங்களுக்குள் அடங்கிப் போய்த் தொங்கிக் கொண்டிருந்த மூத்த மகனின் உருவத்தின் மீது பதிந்தது.

''நீங்கள் பயப்பிடத்தேவையில்லை, அப்பா. நாங்கள் கத்தியைத் தீட்டமாட்டம்; புத்தியைத்தான் தீட்டுவம். அப்படியில்லை எண்டு கத்தியைத் தூக்க வேண்டிவந்தாலும்...''

''வந்தாலும்...?'' அப்பாவுக்கு விழி பிதுங்கியது.

''அதுக்கும் புத்திதானப்பா மூலதனம்'' என்று கூறியது புதிய தலைமுறை.

-வே. தில்லைநாதன்-

* * *

# அமைதியைக் குலைக்கும் அணு!

மிகச்சிறிய என்று பொருள்படும் அணு பல சமயங்களில் பெரிய பிரச்சின களை ஏற்படுத்திவிடுகிறது. தற்போது இந்தப் பிரச்சினையின் மையப்புள்ளி யாக ஈரான் அமைந்துள்ளது.

யுரேனியம் செறிவூட்டும் பணியை



யும், அதற்காகப் புதிய நிலையங்கள் அமைக்கும் பணியையும் ஈரான் உடனடியாக நிறுத்த வேண்டும் என வலியு றுத்தி சர்வதேச அணுசக்தி முகாமை தீர்மானம் கொண்டு வந்துள்ளது.

இத் தீர்மானத்துக்கு ரஷ்யாவும் சீனா வும் ஆதரவு அளித்திருப்பதன் மூலம் ஈரானின் அணுசக்தித் திட்டங்கள் மீதான உலக நாடுகளின் பார்வையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச அணுசக்தி முகாமையில் உறுப்பினராக உள்ள 35 நாடுகளில் இந் தியா உட்பட 25 நாடுகள் ஈரானுக்கு எதி ராக வாக்களித்துள்ளன.

ஈரானின் அணுசக்தித் திட்டங்களுக்கு ரஷ்யாதான் பெருமளவு உதவிகளைச் செய்து வருகிறது. இதுதொடர்பாக கடந்த காலங்களில் ஈரானுக்கு நெருக் கடி ஏற்பட்டபோதெல்லாம் ரஷ்யாவும் சீனாவும் தங்கள் அதிகாரத்தைப் பயன் படுத்தி ஈரானைக் காத்து வந்தன. தற் போது அமெரிக்காவின் நிர்ப்பந்தம் காரணமாகவே இந்த இரு நாடுகளும் ஈரானைக் கைவிட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

''ரஷ்யா இன்றைய உலகச் சூழலை நன்றாக ஆராயாமல் தவறுசெய்துவிட் டது'' என்று ஈரான் அதிபர் முகமது அகமது நிஜாதி ஆவேசப்பட்டுள்ளார்.

மேலும், சர்வதேச அணசக்தி முகா மையின் தீர்மானத்தை அலட்சியம் செய் யும் வகையில், கூடுதலாக 10 இடங் களில் யுரேனியம் செறிவூட்டும் நிலை யங்களை அமைக்கப் போவதாகவும், அதில் 5 இடங்களைத் தேர்வு செய்து விட்டதாகவும் துணிச்சலாகக் கூறியுள்ளது ஈரான்.

நடான்ஷ் என்ற இடத்தில் அணு சக்தி நிலையத்தை அமைத்து, அதில் யுரேனி யம் செறிவூட்டும் பணியைத் தீவிரமாக மேற்கொண்டுள்ளது ஈரான். அணுச்சக்தி மூலம் 2020 ஆம் ஆண்டுக் குள் 20 ஆயிரம் மெகாவாட் மின் உற் பத்தி என்ற இலக்குடன் செயல்பட்டு வருவதாக ஈரான் கூறி வருகிறது. ஆனால், ஈரான் அணுஆயுதம் தயாரிக் கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

ஈரானின் அணுசக்தித் திட்டம் அமை திக்காக அணு என்ற பெயரில் அமெரிக் காவின் உதவியுடன் 1950களிலேயே தொடங்கப்பட்டுவிட்டாலும், மன்னர் ஷா ஆட்சியில்தான் தீவிரமடைந்தது.

1980களில் பாகிஸ்தானின் அணு விஞ்ஞானி ஏ.யூ.கான் மூலம் அணு ஆயுதத்துக்கான யுரேனியம் செறிவூட் டும் தொழில்நுட்பம் ஈரானுக்குக் கிடைத்ததாக மேற்கு நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன.

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந் தத்தில் கையெழுத்திட்ட நாடு என்ற வகையில், ஐ.நா.வின் அணுஆயுதக் கண்காணிப்பு அமைப்பான சர்வதேச அணுசக்தி முகாமைக்கு ஈரான் போதிய ஒத்துழைப்பு அளிக்காததால், அந்த நாடு அணுஆயுதம் தயாரிக்க முயற்சி செய்கி றதோ என்ற சந்தேகம் வலுத்துள்ளது.


''சர்வதேச அணுசக்தி முகாமைக்கு ஒத்துழைப்பு அளிக்காமல் ஈரானின் போக்கு தொடர்கிறது. அந்த நாட்டுக்கு எதிராகப் புதிய தடைகளை விதிக்க ஐ.நா.சபையில் தீர்மானம் கொண்டுவரு வது குறித்து ஆலோசித்து வருகிறோம்'' என அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

ஈரான் ஆயுத ஏற்றுமதி செய்யக் கூடாது என, 2007 ஆம் ஆண்டு ஐ.நா. பாதுகாப்புச் சபை விதித்த தடை அமு லில் உள்ளது. இந்த நிலையில் அந்தத் தடையை மீறி சிரியாவுக்கு ஈரான் கப்ப லில் ஆயுதங்களை அனுப்பியதாகவும், தடையை மீறி ஈரான் செயல்பட்டு வருவதால் புதிய தடையை விதிக்கும் நேரம் வந்துவிட்டது எனவும் இந்த நாடு கள் கூறியுள்ளன.

புதிய தடைகளை சில சமயங்களில் வரவேற்கலாம்' என கருத்துத் தெரிவித்த ரஷ்ய அதிபர் மெத்வதேவ், பின்னர் தனது கருத்தில் பின்வாங்கி, ஈரான் விஷயத்தில் அரசியல்ரீதியான தீர்வு தான் சரி' எனக் கூறியுள்ளார்.

இந்த விஷயத்தில் அரபு நாடுகள் கூட்டமைப்பு மௌனம் காப்பது ஈரா னைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்தியுள் ளது. ஈரான் அணுஆயுத பலம் பெறு வது, தங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் என அரபுநாடுகள் கருதினாலும், அது தங்களுக்கே ஆபத்தாக முடியக்கூடும் என்றும் கருதுகின்றன. சர்வதேச அணு சக்தி முகாமையின் உறுப்பு நாடான எகிப்து மட்டும் ஈரானுக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் ஈரானுக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையே எப்போதுமே ஒரு போட்டி இருந்து வரு கிறது. ஈரான் பலம் பெறுவதை சவூதி விரும்பியதில்லை. அதுவும் அரபு நாடு கள் கூட்டமைப்பின் மௌனத்துக்குக் காரணமாக இருக்கக்கூடும்.



இதற்கிடையே, சவூதி அரேபியாவுக் குச் சென்றிருந்த ஈரானின் அணு விஞ் ஞானி ஷாரம் அமீரி காணாமல்போன விவகாரம் புதிய பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

''கடந்த ஜூன் முதல் மாயமாகியுள்ள ஷாரம் அமீரி கடத்தப்பட்டுள்ளார். சவூதி அரேபியா மூலம் அவர் அமெரிக்காவி டம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவரை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்'' என ஈரான் கூறியுள்ளது. ஆனால், அமெரிக் காவும் சவூதியும் இதை மறுத்துள்ளன.

அணுஆயுதம் படைத்த நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, சீனா, பிரான்ஸ், இந்தியா, பாகிஸ்தான் ஆகி யவை சமீபகாலமாக அணுஆயுதச் சோதனை எதையும் நடத்தவில்லை.

அணுஆயுதப் பரவல் தடை ஒப்பந் தத்தில் கையெழுத்திடாவிட்டாலும், அணுஆயுதச் சோதனை எதையும் நடத்த மாட்டோம்; அணுஆயுதத் தொழில்நுட் பத்தை எந்த நாட்டிடமும் பகிர்ந்து கொள்ளமாட்டோம் என இந்தியா சுய உறுதி பூண்டுள்ளது. இருப்பினும், அந்த ஒப்பந்தத்தில் இந்தியாவைக் கையெழுத் திடச் செய்ய அமெரிக்கா பெரும் முயற்சி செய்துவரும் நிலையில், புதிதாக ஒரு நாடு அணுஆயுத பலம் பெறுவதை அந்த நாடு விரும்பவில்லை.

மேலும், பதற்றம் நிறைந்த மத்திய கிழக்கில் ஈரான் மட்டுமன்றி எந்த நாடு அணு ஆயுதத்தைத் தயாரித்தாலும் ஆபத்துத்தான். அதுவும் ஈரானுக்கு அணு ஆயுதங்கள் கிடைத்தால் அது எந்த அள வுக்குக் கட்டுப்பாட்டுடன் இருக்கும் என்று சொல்வதற்கில்லை.

இஸ்ரேலை வரைபடத்திலேயே இல் லாமல் செய்வோம் என ஈரான் பலமுறை பகிரங்கமாகக் கூறியுள்ளது. அணுஆயுத பலமும் கிடைத்துவிட் டால்...?

மின்சார உற் பத்திக்காகத் தான் அணு சக்தி தொழில் நுட்பத்தைப் பயன்படுத்து கிறோம் என்று ஈரான் கூறுவது உண்மை யானால், அதில் சில வெளிப்படைத் தன்மையைக் கடைப்பிடிக்கலாம்.


குறிப்பாக சர்வதேச அணுசக்தி முகா மைக்கு முழு ஒத்துழைப்பு அளித்து உலக நாடுகளின் சந்தேகத்தைப் போக்கி, மத்திய கிழக்கில் அமைதியை நிலை நாட்ட வேண்டியது ஈரானின் கடமை. ✻

---

# பறக்கும் பட்டத்தில் பிறக்கும் மின்சாரம்

காற்றின் சக்தியைச் சரியாகப் பயன்படுத்தினால் உலகின் மின்தேவையைவிட 100 மடங்கு அதிக மின் சாரத்தை உற்பத்தி செய்யமுடியும் என ஆராய்ச்சியா ளர்கள் கூறுகின்றனர்.

காற்றைக்கொண்டு மின்சாரம் பெறுவதற்கு, காற்ற லைகளை அமைத்துக் காற்றாடிகள் மூலமே (Wind Turbines) தற்போது மின்சாரம் பெறப்பட்டு வருகிறது. புவி மேற்பரப்பிலிருந்தான உயரம் அதிகரிக்கும்போதே காற்றின் வேகம் அதிகரித்து பெறக்கூடிய மின்சாரமும் அதிகரிக்கும். ஆனால், அவ்வளவு உயரத்துக்குக் காற்றாடிகளை அமைப் பது என்பது முடியாத காரியம். எனவேதான், புவி மேற்பரப்பிலி ருந்து அதிக உயரத்தில் இருக்கும் காற்றின் சக்தியைப் பயன்படுத் துவதற்காக பட்டத்தைப் பயன்படுத்தும் புதிய முறை ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்கள். இதற்கு Kitegen எனப் பெயரிட் டுள்ளார்கள்.



பட்டத்தைப் மேலே பறக்கச் செய் வதற்கு இரு பெரிய சுழல் விசிறி களோடு பிரத்தியேகமாக வடிவமைக் கப்பட்ட ஒரு தளம் பயன்படுகிறது. இவ் விசிறிகள் உயரத்தில் தொடர்ச்சியான காற்றுக்கு பட்டத்தைக் கொண்டுசெல்ல உதவுகின்றன. அதில் கம்பிகளின் மூலம் பட்டங்கள் இணைக்கப்படுகின்றன. இக்கம்பிகள் பட்டத்தின் உயரத்தையும், திசையையும் கட்டுப்படுத்து கின்றன. சுமார் 200 மீட்டர் உயரம் வரை இவை பறக்க விடப்படுகின்றன.

இவ்வாறு பறக்கவிடப்பட்ட பட்டங்கள், அவை இணைக்கப்பட்டிருக்கும் தளத்திலுள்ள மின்பிறப்பாக் கியைச் சுழலச்செய்கின்றன. இதன்மூலம் பெரு மளவு மின்சாரம் பிறப்பிக்கப்படுகிறது.

இங்கே முக்கியமான விடயம், இவ்வாறு பறக்கவிடப்படும் பட்டங்களின் பறப்பை தரையிலிருந்தே கட்டுப்படுத்தக்கூடிய தாக இருப்ப தாகும். இவ்வாறு கட்டுப் படுத்தி, பெறப்படும் மின்சாரத்தின் அளவையும் மாற்றிக்கொள்கின்றனர். அதுமட்டுமல்லாது பறக்க விடப்படும் பட்டங்கள் பறவைகளைப் பாதித்து விடாது இருப்பதற்காக ரேடார் மூலம் பறவைகள் கண்காணிக்கப்படுகின்றன.

இது காற்றாலைகளைப்போல அதிக இடத்தை அடைக்காது என்பதுடன் அதிக மின்சாரத்தையும் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளக்கூடியது. அதிகரித்துவரும் மின்தேவைக்காக எரிபொருட் களைப் பயன்படுத்தி மின்சாரம் பிறப்பித்து, சூழலையும் மாசாக்குவதைவிட இவ்வாறான கண்டு பிடிப்புகள் வரவேற்கத்தக்கவையே!

# யார் குற்றம்?

உண்மைக்கதை

மலையகத்தைச் சேர்ந்த ஒரு தோட்டத்தில் உள்ள ஒரு லயத்திலே பிறந்து அந்தத் தோட்டப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்புவரை படித்து, பின்பு நகர்ப்புறப் பாடசாலையில் சேர்ந்து கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரத்தில் சித்தியடைந்தேன். எனது தந்தையும் தாயும் அக்காமார் இருவரும் தேயிலைத் தோட்டத்தில் தான் வேலை செய்தார்கள். ஒழுங்கான வேலை கிடைக்காதபடியால் குடும்பத்தில் கஷ்டம் நிலவியது. அக்காமாரின் முயற்சியால்தான் நான் இவ்வளவுக்காவது படித்தேன். தந்தையின் உழைப்பு அவர் குடிக்கே காணாது. சிலவேளை குடித்துவிட்டு வந்து காசு கேட்டு தாயாரையும் அக்காமாரையும் போட்டு அடிப்பார். எங்கள் லயத்தில் மட்டுமல்ல எல்லா லயன்களிலும்



குடிமக்களின் தொல்லை கட்டுக் கடங்காது.

இதே காலப் பகுதியில் படித்துக் கொண்டிருந்த எனது அண்ணனின் படிப்பும் நின்று விட்டது. அங்கு தோட்டத்தில் வேலை பார்த்த கங்காணி தோட்டத்துரை வீட்டில் அண்ணனை வேலைக்குச் சேர்த்து விட்டார். அண்ணனுக்கு விருப்பமில்லாமல் இருந்தபோதிலும் வீட்டாரின் வற்புறுத்தலாலும், கங்காணி தோட்டத்துரையிடம் சொல்லி லயத்தைவிட்டு அனுப்பி விடுவான் என்ற பயத்தினாலும் பங்களா வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஒரு வருடத்துக்குமேல் அந்த பங்களாவில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அண்ணன் தற்கொலை செய்து கொண்டதாக அறிவிக்கப் பட்டது. துரையின் பங்களாவிலிருந்து சற்றுத் தூரத்திலுள்ள தேயிலைச் செடிகளுக்கு மத்தியில் அண்ணனின் உடல் கண்டெடுக்கப் பட்டது. இது கொலையா? அல்லது தற்கொலையா? என்பது மர்மமாகவும் அதிர்ச்சியாகவும் அந்த நேரத்தில் இருந்தது. தோட்டத் தொழிலாளியின் பிள்ளை என்பதால் எவருமே அந்த மரணத்தில் அக்கறை காட்டிக் கொள்ளவில்லை.

நான் படித்த பாடசாலையின் அதிபரிடம் எனது கல்விச் சான்றிதழ்களைப் பெறச் சென்றபோது, அந்த அதிபர் அண்ணனின் மரணம் பற்றி சொன்ன விடயங்கள் என்னை அதிர்ச்சிக்கு உள்ளாக்கின.

''தோட்டத்துரை தன் முதல் மனைவி இறந்ததும் இரண்டாம் தாரமாக வயதில் குறைந்த ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்திருந்தார். தோட்டத் துரை பங்களாவிலிருந்து வெளி இடங்களுக்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ போகும் காலங்களில் ஒரு இளைஞன் பங்களாவுக்கு வந்து போவான். பங்களா நோனா அவனைத் தன் தம்பி என்று சொல்லி வந்தார். ஒருநாள் பங்களா நோனாவும் தம்பி என்று சொல்லிய அந்த இளைஞனும் உறவு கொள்வதை எனது அண்ணன் பார்த்துவிட்டான். தங்கள் கபட நாடகம் துரைக்குத் தெரிந்தால்... என்று பயந்த இருவரும் கண்ணால் கண்ட சாட்சியை உயிருடன் இருக்க விடவில்லை. இந்த விடயம் அதிபருக்கு எப்படித் தெரியவந்தது என்று கேட்க எண்ணியும், அதிபரைச் சங்கடத்துக்குள் மாட்டாமல் நான் வந்த வேலையை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

நான் ஒருவரிடமும் இந்த விடயம் பற்றிப் பேசவில்லை. ஆனால் என் மனத்தில் அண்ணனின் மரணம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என்பது உண்மை.

எனக்கு அந்த தோட்டக் கந்தோரில் கிளாக் உத்தியோகம் கிடைத்தது. பெரிய கிளாக்கரின் உதவியினால் அங்குள்ள வேலைகளை எல்லாம் செய்யப் பழகிக் கொண்டேன். எல்லோருடனும் மரியாதையுடன் நடந்து கொண்டு எனது கடமைகளையும் செய்து வந்தேன். இதனால் தோட்டத் துரையின் நன்மதிப்பைப் பெற்று வந்தமை எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. சில வேளைகளில் கொழும்புக்கு, நுவரெலியாவுக்கு போகும் வேளைகளில் தமது வாகனத்தில் என்னையும் அழைத்துச் செல்வார். அந்த நேரங்களில் அவருடைய பங்களாவுக்குப் போகக் கூடிய சந்தர்ப்பம் கிட்டியது. அங்கே துரை, நோனாவுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார்.

மிக அழகான இளமைப் பருவமான நோனாவைப் பார்த்தபோது என் மனத்திலும் ஒரு பொறி தட்டியது. இந்த வயதான துரை ஏன் இந்த வயது குறைந்த நோனாவைக் கல்யாணம் செய்தார். பாவம் நோனா தமது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் தான் வேறு ஒருவரின் உதவியை நாடியுள்ளார் என்பது தவிர்க்க முடியாதது தான் என்று எண்ணும் போது நோனாமேல் இருந்த ஆத்திரம் என் மனத்தை வருடிக் கொண்டே இருந்தது.

தாம்பத்திய உறவு திருப்தியாக அமையாத குடும்பத்திலே அடிக்கடி காரணமில்லாமல் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதைக் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் நான் அறிந்த மட்டில் நோனா துரையுடன் எதுவித பிரச்சினைகளுக்கும் போவதில்லை. அவருக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுத்து வந்துள்ளதை நான் பங்களாவுக்குப் போகும் வேளைகளில் கவனித்திருக்கின்றேன். நோனா என்னுடன் பேசும்போது சிரித்துக் கதைப்பதையும் அவதானித்துள்ளேன்.

ஒருநாள் நான் காரியாலத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது... தோட்டத்துரை பங்களாவுக்கு வரும்படி அழைத்திருந்தார். நான் அங்கு சென்றபோது... ''ராகவன் நான் அவசரமாக லண்டனுக்குப் போக வேண்டும். வர மூன்று கிழமைகளாகும். அதுவரை நோனாவுக்கு காவலாக நீதான் இருக்கவேண்டும்'' என்றார். எனக்கு மனத்தில் ஒரு பயம். இருந்தும் உண்மையைத் தெரிந்து கொள்வதற்கு இது ஒரு சந்தர்ப்பம் என்று எண்ணி மௌனமாக நின்றேன். நோனா அந்த வேளையில், ''ராகவன் வந்து நிற்பார், நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காமல் போய் வாருங்கள்'' என்று துரைக்குச் சொன்னார். நானும் றைவருடன் வாகனத்தில் சென்று துரையை வழியனுப்பி வைத்து விட்டு பங்களாவுக்கு வந்து சேர்ந்தோம். றைவர் கார்ச் சாவியை நோனாவிடம் கொடுத்துவிட்டு சென்றுவிட்டான்.

வீட்டு வேலைகளைப் பார்ப்பதற்கு இரண்டு பெண்கள் காலையில் வந்து வீட்டு வேலைகள் சமையல் எல்லாம் செய்து வைத்துவிட்டு மாலையில் போய் விடுவார்கள். பங்களாவின் முன் அறை எனக்குத் தரப்பட்டிருந்தது. எயர் போட்டிலிருந்து திரும்பி வந்து குளித்துவிட்டு எனது அறையில் படுத்துத் தூங்கிவிட்டேன்.

அறைக் கதவு தட்டும் சத்தம் கேட்டு எழுந்து கதவைத் திறந்தேன். அங்கு நோனா நின்றார். ''ஏன் ராகவன் சாப்பிட்டுவிட்டுப் படுக்கலாம்தானே. வாரும் சாப்பிடுவம்'' என்றார். ''நான் வரும்பொழுது கடையில் சாப்பிட்டு விட்டுத்தான் வந்தேன்'' என்றேன். ''வேலைக்காரியிடம் சொல்லி உமக்கும் சேர்த்துத் தான் இரவுச் சாப்பாடு செய்து வைத் திருக்கின்றேன்'' என்றார். நான் ஒன்றும் பேசாமல் அவர் பின்னால் சென்றேன். சாப்பாட்டு மேசையில் எனக்கு முன்பக்கமாக இருந்து கொண்டு எனக்குச் சாப்பாடு பரிமாறியபடி தானும் சாப்பிட்டார்.

சாப்பிடும்போது நோனாவுக்குப் புரக்கடித்து விட்டது. அவதிப்படுவது தெரிந்து உடனே அவர் தலையில் தட்டியபடி குடிப்பதற்குத் தண்ணீர் எடுத்துக் கொடுத்தேன். அந்தநேரம் நான் அப்படிச் செய்திருக்கக் கூடாது என்று பின்புதான் யோசித்து, ''சொறி நோனா, நான் தெரியாமல் உங்கள் தலையில் தொட்டுவிட்டேன், மன்னித்துக் கொள்ளுங்கள். துரைக்குச் சொல்லிப்போட வேண்டாம்'' என்றேன். நோனா கோபத்துடன் என்னைப் பார்த்தார். என் மனம் படக் படக் கென்று பயத்தினால் அடிக்கத் தொடங்கியது. உண்மை யிலேயே என்ன நடக்குமோ என்று பயந்து விட்டேன். எனது பயத்தைத் தனக்குச் சாதகமாக நோனா பயன் படித்தினால் என் நிலைமை என்னாவது? என்னை நம்பி விட்டு விட்டுச் சென்ற தோட்டத்துரை என்ன நினைப்பாரோ? பல வகையாலும் யோசிக்க எனக்குப் பயத்தினால் வேர்த்துக்கொட்டியது.

எனது நிலையைப் பார்த்துக் கொண்டிருந்த நோனா சிரிக்கத் தொடங்கினார். அவருடைய சிரிப்பைப் பார்க்கும்போது ஏதோ அர்த்தம் இருப்பதாக நான் எண்ணினேன். ''இப்படியே இருந்துகொள்ளும் நான் திரும்பி வரும்வரை'' என்று சொல்லிவிட்டு தமது படுக்கை அறைக்குச் சென்று நயிற்றியை மட்டும் போட்டுக்கொண்டு வந்து எனக்குப் பக்கத்தில் இருந்தார். ''நான் நீர் என் தலையில் தொட்டதைத் துரைக்குச் சொல்லாமல் இருக்க வேண்டுமானால், நான் சொல்வதை நீர் செய்யவேண்டும்'' என்றார். எனக்கு மேலும் பயம் ஏற்பட்டு வீட்டை விட்டு ஓடிப்போகலாமா என்று கூட எண்ணினேன். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ''தற்கொலை செய்து கொண்டு சாகவா?'' என்று கேட்டேவிட்டேன். அப்பொழுது அவர் முகத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டதைக் கண்டுகொண்டேன்.

''ராகவன் எனது மாத்தயா வயது போனவர். அவர் பணக்காரர் என்பதால் மட்டும் கல்யாணம் செய்தேன். சுகம் காணக்கூட சக்தி அவரிடம் இல்லை. அதனால் அவர் இல்லாத நேரங்களில் மட்டும் ஒருவரை வீட்டுக்கு அழைத்து என் ஆசையைப் பூர்த்தி செய்துவந்தேன். அப்பொழுது நடந்த சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது. அந்தப் புதியவரும் நானும் ஒருநாள் படுக்கையில் இருக்கும்போது பங்களாவில் வேலைக்கு இருந்தவன் அந்தக் காட்சியைக் கண்டுவிட்டான். அவனை அழைத்து இங்கு நடந்ததை துரைக்கோ அல்லது வேறு எவருக்குமோ சொல்லக் கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லியிருந்தேன்.

அடுத்தநாள் காலை வெளியில் சென்றுவந்த அவன் என்னிடம் வந்து, நோனா நேற்று பங்களாவுக்கு வந்தவர் யார்? என்று கங்காணி கேட்க, தனக்குத் தெரியாது என்று சொல்லி விட்டு வந்ததாகவும் கூறினான். அத்துடன் மிகுந்த பயத்துடன் காணப்பட்டான். அடுத்தநாள் அவன் இறந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன் இதோ! அவன் கடைசியாக எழுதிவைத்த கடிதத்தைப் பார்'' என்று சொல்லி ஒரு கடிதத்தைத் தந்தார். அக்கடிதத்தைப் பெற்று வாசித்தேன்.

''நோனா, உங்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் காட்டிக் கொடுக்கமாட்டேன். அதேவேளை என்னை வேலைக்குச் சேர்த்த கங்காணி சொல்லாவிட்டால் துரைக்குச் சொல்லப்போவதாகக் கூறிப் பயமுறுத்துகிறார். துரை என்னிடம் கேட்டால் என்னவாகுமோ என்று பயமாக இருக் கின்றது. நான் உயிருடன் இருந்தால் பல பிரச்சினைகள் ஏற்படலாம். எனவே, நான் தற்கொலை செய்து கொள்கிறேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.''-இப்படிக்கு ம.கரிகாலன்.

கடிதத்தை வாசித்து முடித்ததும் நோனா மேலிருந்த தப்பபிப்பிராயம் நீங்கி, அண்ணன் தற்கொலைதான் செய்து கொண்டான் என்று என் மனம் சொல்லிற்று.

''பாத்தியா, ராகவன் பாவம் அந்தப் பொடியன். அவனின் மரணத்துக்குப் பிறகு இங்குவரும் எனது நண்பரும் வருவதை நிறுத்திக்கொண்டார். அதனால் எத்தனையோ நாட்கள் மிகுந்த கஷ்டப்பட்டேன். இனியும் என்னால் பொறுக்கமுடியாது'' என்று கூறி... என்னை அணைத்துக்கொண்டார் நோனா.

# பெண்களுக்கு பிரசவம் என்பது மறுஜென்மம்

கர்ப்ப காலத்தில் போதிய அக்கறை செலுத்தாததும், உரிய நேரத்துக்கு சிகிச்சை எடுத்துக் கொள்ளாததுமே பல பெண்களுக்குப் பிரசவத்தில் சிக்கலாகி விடுவதாகப் புள்ளி விவரம் கூறுகின்றது. ஆகவே, எச்சரிக்கையுடன் செயல்பட்டால், பிரசவத்தை எளிதாக, பாதுகாப்பாக மாற்ற முடியும். கர்ப்ப காலத்தின் போது மகளிரின் உடலில் பலவித மாற்றங்கள் நிகழும். சரியான நேரத்துக்கு மருத்துவரிடம் ஆலோசனை பெற்றால் பிரசவத்தின் போது ஏற்படும் பல சிக்கல்களைப் போக்க முடியும்.

மகப்பேறு மருத்துவரின் ஆலோசனைப்படி ''உடலில் எந்தவித பிரச்சினை ஏற்பட்டாலும், அதற்கு முன்னதாகவே சில அறிகுறிகள் தென்படும். இவற்றை சரியாகப் புரிந்து செயல்பட்டால், எந்த பிரச்சினையாக இருந்தாலும், எளிதாக எதிர்கொள்ள முடியும்'' என்கின்றனர்.

இந்த அறிகுறிகளை அலட்சியப் படுத்தும்போது உடலில் நோயானது தீவிரம் அடைந்து இருக்கக்கூடும். ஆகவே, உடனே மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது அவசியம்.

### பிரசவம் பாதுகாப்பாக அமைய

* கர்ப்ப காலத்தில் அடிக்கடி சிறுநீர் வருவது ஆபத்தான விஷயம் அல்ல. ஏனெனில் கர்ப்பப்பை பாரமாகி, அது சிறுநீர்ப்பையை அழுத்துவதால் இந்த நிலை உருவாகிறது. சிறுநீர் கழிக்கும் போது, எரிச்சல் உணர்வு ஏற்பட்டால் மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது அவசியம்.

* கர்ப்ப காலத்தில் வாந்தி வருவதும் இயல்பான ஒன்று, 50 சத வீதமானோருக்கு காலை நித்திரை விட்டு எழுந்ததும், வாந்தி ஏற்படும். ஆனால், வாந்தியானது நாள் முழுவதும் ஏற்பட்டால் உடனே மருத்துவரிடம் கலந்தாலோசிக்கவும்.

* கர்ப்ப காலத்தில் மலச்சிக்கல் பிரச்சினையும் இருக்கும். இதற்கு உணவு விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதிக நார்ச்சத்து உள்ள காய்கறிகள், பழங்கள், திரவ உணவுகள் ஆகியவற்றை உட்கொள்ள வேண்டும்.

* கர்ப்ப காலம் அதிகரிக்கும் போதே கூடவே குழந்தையின் வளர்ச்சியும் ஏற்படும். இதன் பாதிப்பு இடுப்பு மற்றும் எலும்புகளில் காணப்படும். உடல் மற்றும் இடுப்பின் அருகே வலி இருக்கும். நடக்கும் போது கவனம் தேவை. மருத்துவரின் ஆலோசனையின் பெயரில் சில உடற்பயிற்சிகள் செய்யவும். இதனால் வலியிலிருந்து விடுபட முடியும்.

* கர்ப்ப காலத்தில் ஏற்படும் நெஞ்சு வலிக்கும், இதய நோய்க்கும் எந்த வித தொடர்பும் இல்லை. இதற்கு ஒரே நேரத்தில் உணவு உட்கொள்வதைத் தவிர்க்கவும். மாறாக சிறிது இடைவெளி விட்டு உண்ணலாம். மூச்சு விடுவதில் சிரமம் இருப்பின், மருத்து வரை அணுகவும்.

* கர்ப்ப காலத்தின் கடைசி மாதங்களில் காலில் வீக்கம் ஏற்படும். சில மருந்து மாத்திரைகளை உட்கொள்வதாலும் வீக்கம் ஏற்படும். உணவில் உப்பின் அளவைக் குறைக்கவும். அதிக புரதச் சத்துள்ள உணவை உட்கொள்ளவும். இரவு தூங்கும் போது காலுக்கு அடியில் தலையணையை வைத்து தூங்குவதும் வீக்கத்தைக் குறைக்கும்.

* கர்ப்ப காலத்தின் போது உடலுறவு கொள்ளலாம். ஆனால், அடிக்கடி கருச்சிதைவு மற்றும் முதல் பிரசவத்தில் ஏதாவது கோளாறு ஏற்பட்டு இருப்பின், இவ்விஷயத்தை ஒதுக்குவது அவசியம்.

### ஆபத்தான அறிகுறிகள்

கர்ப்ப காலத்தின் போது சில அறிகுறிகளை கவனிக்காது விடக் கூடாது. ஏனெனில், இது வேறு பயங்கர பிரச்சினைக்கு வழி வகுத்து விடும். ஆகவே, சில விஷயங்களில் அக்கறை செலுத்தினாலே, பிரசவம் எளிதாக, பாதுகாப்பாக அமைந்து விடும்.

* பிறப்புறுப்பு, தொப்புள் மற்றும் மலத்துவாரத்திலிருந்து இரத்தம் வந்தால், உடனடி கவனம் தேவை.

* முகம் மற்றும் கைகளில் வீக்கம் ஏற்பட்டால் மருத்துவரின் ஆலோசனை யைப் பெறவும்.

* அதிக வலி, நடுக்கம் மற்றும் காய்ச்சல் இருப்பதும் அதிக ஆபத்தாக அமையக்கூடும்.

* பிறப்புறுப்பில் ஒருவித திரவப்பொருள் வெளிவருவதும் ஆபத்தின் அறிகுறியே. இதனையும் கவனிக்காது விடக்கூடாது.

* வயிற்றில் குழந்தையின் அசைவை உணராத போதும் விஷயம் விவகாரமாக அமையக்கூடும்.



பெண்

தொகுப்பு:சாந்தி

---

## சகோதரிகளின் பார்வைக்கு...

# தொலைந்த வாழ்க்கை! மீண்டும் வருமா...?

கணவர் இன்னொரு பெண்ணோடு தொடர்பு வைத்திருக்கிறார் என்று தெரிஞ்சால் அவரை நிராகரிக்கலாமா? கூடாதா?

எனக்கு வயது 55. இந்நேரம் பேரப் பிள்ளைகளைப் பார்த்திருக்க வேண்டிய வயது எனக்கு ஆனா, நல்லா இருக்கிறீயா என்று விசாரிக்க கூட ஆட்கள் யாரும் இல்லாத அளவுக்குத் தனிமையில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறேன். 30 வருடங்களுக்கு முன்னர் தொலைத்தேன் என் வாழ்க்கையை. அப்போது என்னை என்னால் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற தன்னம்பிக்கை இருந்தது. நான் கடவுள் பக்திக் கொண்டவள். என்னை திருமணம் செய்பவரும் கடவுள் பக்தியும் நல்ல குணநலனும் கொண்டவராக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். எப்போதும், எந்த நிலையிலும் ஒரு கறைப்பட்ட வாழ்க்கையை வாழ கூடாது என சிறு வயதில் இருந்தே வைராக்கியத்துடன் வாழ்ந்து வந்தேன்.

வீட்டில் செல்ல பிள்ளையான நான் படிப்பிலும் கெட்டிக் காரியாக இருந்தேன். என் படிப்பிற்கு தகுந்த மாதிரி நல்ல பதவியில் அரச வங்கியில் வேலையும் கிடைத்தது. ஒரு பெண்ணை பிறந்த வீட்டில் எவ்வளவு தான் சீராட்டி பாராட்டி வளர்த்தாலும் வயது வர திருமணப் பேச்சுக்களும் தீர்வுகளும் வந்தனேசெய்யும். நான் நிரந்தர வேலையில் இருப்பதால் என்னை விட பெரிய பதவியில் இருக்கிற வரன்களைப் பார்த்தார்கள். என் வீட்டார்கள் நினைத்த மாதிரியே எல்லாம் அமைந்தது.

எங்கள் திருமணம் நல்லபடியே நடந்தது. திருமணத்துக்கு பின் இருவரும் தனிக் குடித்தனம் வாழ்க்கையை ஆரம்பித்தோம்.

உண்மையில் அந்த வயதுப் பெண் ஒருத்தி எந்த மாதிரி வாழ்க்கைக்கு ஏங்குவாளோ அப்படி ஒரு வாழ்க்கை அது. ஒவ்வொரு நாளும் இன்பமா கழிந்தது. இரண்டு வருடங்கள் இந்த சந்தோஷம் எல்லைகள் இன்றி இருந்தது. பிறகு தான் இந்த சந்தோஷத் தில் புயல் வீச ஆரம்பித்தது.

வாரத்தில் இரண்டு, மூன்று நாட்கள் தாமதமாகவே வீட்டுக்கு வர ஆரம்பித்தார். கேட்ட போது வேலை என்றார். பின்னர் விடு முறை நாட்களான சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும், வேலை என்று கூறி விட்டு சென்றுவிடுவார். வார நாட்களில் நானும் அலுவலகம் செல்வதால் எனக்கு இந்த விடுமுறை நாட்கள் தான் அவருடன் இருக்கக் கூடிய நாட்கள். முதல் தடவையாக நான் ஏமாற்றம் அடைந்தேன்.

ஒரு நாள் எதேச்சையாக ஆறு மணிக்கு மேல் அவர் அலுவலகத்துக்கு போன் பண்ணினேன். அவர் ஒரு நாள் கூட ஐந்து மணிக்கு மேல் அலுவலகத்தில் இருந்ததில்லை என்ற தகவல் வந்தது. நான் இது பற்றி என் கணவரிடம் ஒன்றுமே கேட்கவில்லை. அவர் எங்கு போகிறார் என்ன செய்கிறார் என்று அவரது நண்பர் மூலம் விசாரித்தேன்.

அவருடைய அலுவலகத்திற்கு வேறொரு கிளை நிறுவனத்தில் இருந்து மாற்றலாகி ஒரு பெண் வந்திருக்கா. இவரை விட இரண்டு, மூன்று வயது மூத்தவள். அவளுடன் வெளியில் போய் சாப்பிடுவது. அலுவலகம் முடிந்த பின் அவளை காரில் கூட்டிக் கொண்டு போய் விடுவது என நிறைய செய்திருக்கிறார். இது அவரது அலுவலகம் முழுவதும் பரவிவிட்டது. எனக்குதான் கடைசியாக தெரிந்தது. அவரிடம் நேரடியாகக் கேட்டேன். மௌனமாக இருந்தார். அதுவே அவர் மேல் எனக்கு கோபத்தை உண்டாயிற்று.

எனக்கு அவர் செய்தது துரோகம் என்று என் மனம் சொல்லிக்கொண்டே இருந்தது. அவரை பார்க்கவே அருவருப்பாக இருந்தது. உடனே கிளம்பி என் அம்மா வீட்டுக்கு போனேன். அவர்களுக்கு பாரமாக இருக்கக் கூடாது என்று தனியாக வீடு பார்த்து குடியேறினேன். விவாகரத்து பெறவேண்டும் என்று உறுதியாக இருந்தது. அவரிடம் இருந்து விவாகரத்தையும் பெற்றுக் கொண்டேன். இதற்கிடையில் அவர் எத்தனையோ முறை என்னை சமாதானப் படுத்த வந்தது என் மனம் சமாதானம் ஆகவில்லை. எனக்கு உழைப்பு இருக்கு என்ற தைரியத்திலும், அவருக்கு ஏதோ தண்டனை கொடுத்துட்ட மாதிரியான திருப்தியிலும் என்னை நான் சமாதானப் படுத்திக்கொண்டேன். எங்கள் விவாகரத்துக்கு பின் அடுத்த வருடமே அவர் அந்த பெண்ணை திருமணம் முடித்துக் கொண்டார். நான் கலங்கவில்லை. நான் உண்டு என் வேலை உண்டு என்று இருந்தேன்.

நான்கு மாதங்களுக்கு முன்பு தான் நான் ஓய்வு பெற்றேன். அது வரைக்கும் எந்த சிந்தனையும் இன்றி வேலைக்கு சென்று வந்த எனக்கு அங்கிருப்பவர்களோட பேசுறதும், பழகுறதும், வேலை என பொழுது போனது. ஆனா இப்ப வீட்டில் தனிமையில் இருக்கிறபோதுதான் தெரியுது நான் என் வாழ்க்கையில் எவ்வளவு பெரிய இழப்புக்களை சந்தித்திருக்கிறேன் என்று.

கள்ளக் காதல், கொலைகள், குற்றங்கள் என்று ஒவ்வொரு நாளும் ஊடகங்கள் வெளிப்படுத்திக் கொண்டு தான் இருக்கு. என்னுடைய சிநேகிதிகளும் கூட தங்களுடைய கணவருக்கு முன்பிருந்த காதல் தொடர்புகள் பற்றி என்னிடம் பேசுகையில் இவர்களால் எப்படி இப்படி இருக்க முடிகிறது என்று எண்ணினேன். ஆனால், அவர்களுடைய அன்றைய நாள் பொறுமை இன்று வாழ்க் கையில் இன்பமாக கணவர், பிள்ளைகள், மருமகன் பேரப்பிள் ளைகள் என்று வாழும் வாய்ப்பை கொடுத்திருக்கிறது. ஆனால், நானோ 'இன்னொரு பெண்ணுக்கு உங்க ப னசுல இடம் வந்த ந, எனக்கு ல இடம் வேல என்று' பேசியது இன்று நினைக் கையில் வேடிக்கையாக உள்ளது.

இன்று இருக்கும் இது போன்ற தனியார் ஊடகங்கள் அன்று எமக்கு இருக்கவில்லை. எம் மனதின் கவலையையும் கஷ்டங்களையும் சக சகோதரிகளிடம் பகிர்ந்து கொண்டு ஆலோசனை பெறவோ வாய்ப்புக்கள் இருக்கவில்லை. என் வாழ்வில் நான் கண்ட பாடம் 'கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம்' போல் தான். எனவே இளம் பெண்களே உங்கள் இல்வாழ்க்கை தடம் மாறாமல் நல்வழியில் நடத்திச் செல்லுங்கள். ஒரு பெண்ணுக்கு உத்தியோகம் மிக முக்கியம். அதே நேரம் உழைப்பு இருக்கும் தைரியத்தில் யாரையும் உதாசீனம் செய்யாதீர்கள்.

*பெயர் குறிப்பிடாத வாசகி.*



# பொங்கலுக்கு ரஜினி வீட்டிலிருந்து 3 படங்கள் ரிலீஸ்


படம்-குட்டி


படம்-ஆயிரத்தில் ஒருவன்


படம்-கோவா

இந்தப் பொங்கலுக்கு ரஜினி குடும்பத்திலிருந்து மூன்று படங்கள் வெளிவருகின்றன.

ரஜினியின் மகள் சௌந்தர்யா தயாரித்துள்ள 'கோவா', ரஜினியின் மருமகன் தனுஷ் நடித்த 'குட்டி' மற்றும் ரஜினி மருமகனின் அண்ணன் செல்வராகவன் இயக்கியுள்ள 'ஆயிரத்தில் ஒருவன்' ஆகியவை இந்தப் பொங்கலில் திரைக்கு வருகின்றன.

ரஜினியின் மூத்த மகள் ஐஸ்வர்யா இணை இயக்குநராகப் பணியாற்றியுள்ள படம் 'ஆயிரத்தில் ஒருவன்' என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் படத்தில் தனுஸும் ஐஸ்வர்யாவும் இணைந்து ஒரு பாடலைப் பாடியுள்ளனர்.

'கோவா' படத்தை வெங்கட் பிரபு இயக்கியுள்ளார். சினேகா முக்கிய கேரக்டரில் நடிக்கிறார்.

'குட்டி'யில் தனுஷுக்கு ஜோடி ஸ்ரேயா. மித்ரன் ஆர். ஜவஹர் இயக்கி உள்ளார். தெலுங்கில் வெற்றிகரமாக ஓடிய ஆர்யாவின் ரீமேக் இப்படம்.

இந்த மூன்று படங்களில் ரஜினி தன் மகள் தயாரித்த 'கோவா' படத்தை அதிகம் எதிர்பார்க்கிறார். இந்த படத்தைத்தான் அவர் முதலில் பார்க்க விரும்புகிறாராம்.

# வில்லனாகிறார் ரமணா!


படத்துக்கு படம் பஞ்ச் வசனங்களால் ரசிகர்களுக்குத் தலைவலியை வர வைக்கும் பஞ்ச் பேரரசுவின் உதவியாளரான நந்து இப்போது படம் இயக்கிக்கொண்டிருக்கிறார். 'தொட்டுப்பார்' இதுதான் படத்தின் டைட்டில்.

யார் யாரைத் தொட்டுப் பார்க்கவேணும்... தொட்டுப் பார்க்கக் கூடாது என்கிற ஒரு வரியை வைத்துக்கொண்டு படம் முழுக்க ஆக்ஷன், கொமெடி, சென்டிமென்ட் என எல்லாவற்றையும் சேர்த்த கலவையாக இந்தப் படத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

நாயகன் படத்தில் ரித்திஷ் உடன் ஹீரோவாக நடித்த ரமணாதான் இந்தப் படத்தில் வில்லனாக நடிக்கிறார். இயக்குநர் அவரிடம் போய் கதையைச் சொல்லி வில்லன் வேடம் என்றதும் மனிதர் எகிறிக் குதித்து ஓடப் பார்த்திருக்கிறாராம். அவரை லாவகமாக பிடித்து உட்கார வைத்த இயக்குநர் கதையை ஒரு வரி விடாமல் சொல்லியிருக்கிறார்.

கதையைக் கேட்டு அதிர்ந்து போன ரமணா, அடடா வில்லன் கேரக்டரா இருந்தா என்ன? எந்த கேரக்டரா இருந்தா என்ன? இந்த கேரக்டர்ல நான் நடிக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார். இந்த வில்லன் கேரக்டர் ரமணாவை மனதில் வைத்து உருவாக்கியது போலவே இருக்கும் என்கிறார் இயக்குநர் நந்து. படத்தில டயலாக் எல்லாம் அட்டகாசமாக இருக்கும்




படம்-ஜும்பா சமுத்திராதி அம்பாணி


நிச்சயம் நான் ஒரு கன்னிப் பெண்ணாகச் சாகமாட்டேன் என்கிறார் பிரபல நடிகை நீத்து சந்திரா. தமிழில் 'விசாலுடன் தீராத விளையாட்டுப்பிள்ளை' என்ற படத்தில் படுகவர்ச்சியாக நடித்துவரும் நீத்து, சமீபத்தில் ஹிந்திப் படம் ஒன்றுக்காக லெஸ்பியன் வேடத்தில் நடிக்க ஒப்புக் கொண்டார். இந்தப் படத்துக்காக எடுக்கப்பட்ட 'ஸ்டில்'கள்தான் இப்போது பொலிவூட்டில் படுசூடான சமாச்சாரமாகிவிட்டன.

இதுகுறித்து நிருபர்களிடம் பேசிய நித்து-

''படத்துக்காகத்தான் இந்த வேடம். நிஜத்தில் அப்படியில்லை. ஒரு லெஸ்பியனாக என் வாழ்க்கை கழியாது. கன்னிப் பெண்ணாகவே செத்துப் போகவும் மாட்டேன். என்ன செய்கிறேன் என்று தெரிந்துதான் செய்கிறேன்'' என்றாராம்.



# கன்னியாக சாகவே மாட்டேன்!



# திரை விமர்சனம்

காதலர்களை பிரித்து வைக்கும் சென்னையைச் சேர்ந்த நகுலனுக்கும், காதலர்களைச் சேர்த்து வைக்கும் நாகர்கோவிலைச் சேர்ந்த பூர்ணாவுக்கும் இடையே காதல் மலர்கிறது. பூர்ணாவை ஒருதலையாய்க் காதலிக்கும் வில்லன் சம்பத்தின் மகன், இவர்களின் காதலைக் கேள்விப்பட்டு செத்துப்போக, மகனின் சாவுக்குக் காரணமான பூர்ணாவைச் சிரிக்கவிடமாட்டேன் என்று சம்பத் சவால்விட, அவளைக் கல்யாணம் பண்ணி சந்தோஷத்தைக் கொடுப்பேன் என்று நகுலன் எதிர் சவால்விட, இறுதி வெற்றி யாருக்குக் கிடைக்கிறது என்பது எவருக்குமே தெரிந்த விடயம்.

நகுலன் வழக்கம் போல சுறுசுறு துறுதுறு பார்ட்டியாக வருகிறார். முதல் பாதியில் சந்தானத்தோடு கொமெடி பண்ணி, பிறகு பூர்ணாவின் காதலில் விழுந்து பின்பாதியில் வில்லனுக்குச் சவால்விட்டு ஆக்ஷன் களத்தில் இறங்குகிறார். அளவுக்கு மீறிய ஆர்வம் நடிப்பில் மிளிர்வது பல இடங்களில் அதிகமாகவே தெரிகிறது. பூர்ணா முந்தைய படங்களை விட அழகாக இருக்கிறார். வெளிநாட்டுப் பாடல் காட்சிகளில் கிளாமராகவும் ஆடியிருக்கிறார். தினாவின் இசையில் பாடல்கள் சுமார் ரகம். கிருஷ்ணசாமியின் ஒளிப்பதிவு நாகர்கோவில் எபிசோட்டில் பளிச்சிடுகிறது. நாகர்கோவில் ஹீரோயினையும், சென்னை ஹீரோவையும் இணைத்த விதத்தில் இயக்குநர் தெரிகிறார். ஆனால் ஹீரோ, காதலை எதிர்ப்பதற்கும், ஹீரோயின் காதலை ஆதரிப்பதற்குமான காரணங்களில் அழுத்தம் இல்லை. வித்தியாசமான காதல் கதையை கொமெடி ஆக்ஷன் கலந்து தர முயற்சித்திருக்கிறார் இயக்குனர் சக்திவேல்.






# சிரிக்க வைக்கும் தமிழ்ப்படம்



தயாநிதி அழகிரி, 'தமிழ்ப்படம்' என்ற படத்தை தமது 'கிளவுட் நைன் மூவிஸ்' சார்பில் தயாரித்துவருகிறார். 'என்ன தமிழ் படமா...?' இப்படி வித்தியாசமாக நீங்க பார்க்கிறது தெரிகிறது. படத்தின் தலைப்பிலேயே இப்படி வித்தியாசம் காட்டும் 'தமிழ்ப் படம்' முழுவதையுமே வித்தியாசமாக எடுத்திருக்கிறார்கள். இதுவரைக்கும் எத்தனையோ கொமெடிப் படங்களைப் பார்த்திருப்போம். ஆனால் தமிழ்ப் படத்தைப் பார்க்கும்போது, நீங்க பக்கத்தில இருக்கிறவர்கள் மீது விழுந்து விழுந்து சிரிச்சாலோ... இல்ல, சிரிச்சு சிரிச்சு... கதிரையில் இருந்து கீழே விழுந்தாலோ நாங்கள் பொறுப்பல்ல - என்கிறார் படத்தின் இயக்குநர் அமுதன். அந்த அளவுக்குப் படத்தில் கொமெடிக் காட்சிகள் களை கட்டுகின்றனராம். இவ்வளவு இருந்தும் ஒரு கவர்ச்சிக் குத்தாட்டம் இல்லையென்றால் எப்படி?

அதனால்தான் கஸ்தூரியை ஒரு கெட்ட ஆட்டம் போட வைத்து நமீதாவிற்குப் போட்டியாக களம் இறக்கியிருக்கிறார்கள். இந்தப் படத்தைத் தொடர்ந்து அடுத்த வருடம் மூன்று படங்களைத் தயாரிக்க உள்ளாராம் தயாநிதி அழகிரி.

'எக்ஸ்பிரஸ்' வேகத்தில் படப்பிடிப்பு நடத்துவதில் கே.எஸ்.ரவிக்குமாருக்கு ஏ.வெங்கடேஷ் தம்பி மாதிரி. 'மலை மலை' படத்திற்குப் பிறகு தொடங்கிய 'மாஞ்சா வேலு' அதன் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. கடைசிக் கட்டப் படப்பிடிப்பில் ஈடுபட்டுள்ளது படக்குழு.


'வாடா' படத்தில் கவனம் செலுத்திக் கொண்டே இந்தப் படத்தை ஏ.வெங்கடேஷ் முடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. 'மலை மலை' படத்தில் நடித்தவர்கள் அப்படியே இதிலும் இருக்கிறார்கள். ஹீரோயின் மட்டுமே மாறியிருக்கிறார். இந்தப் படத்தில் ஹீரோவுக்கு ஜோடி தன்ஷிகா. பிரபு முக்கியமான வேடத்தில் நடித்துள்ளார். ஹீரோவின் அண்ணனாக பொலிஸ் அதிகாரி வேடத்தில் கார்த்திக். பிரபுவின் சிபார்சில் கிடைத்த வேடமாம் இது.

'மலை மலை' போலவே இந்தப் படத்திலும் சண்டைக் காட்சிகளுக்காக நீண்ட காலம் எடுக்கப்பட்டுள்ளது. கனல் கண்ணன் ஒன்றரை மாதங்களுக்கு மேல் 'கால்ஷீட்' கொடுத்திருக்கிறார் என்றால் சண்டைகளின் தராதரத்தைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். இதே வேகத்தில் போனால் ஜனவரியில் படத்தை வெளியிடலாம் என்ற முடிவில் இருக்கிறார் தயாரிப்பாளர் மோகன்.



பூனம் பாஜ்வா

# அலுவலகத்தில் தூக்கம் நோயின் அறிகுறியா?



**கேள்வி:** வயது 35 ஆண். எந்த நேரமும் எனக்கு தூக்கக் குணமாக உள்ளது. ஆனால் தினமும் இரவில் குறைந்தது 7 மணி நேரம் நல்ல நித்திரை கொள்கிறேன். நான் அலுவலகம் ஒன்றில் நிறைவேற்று அதிகாரியாக உள்ளேன். அநேகமாக அலுவலகக் கூட்டங்களில், பயிற்சிப் பட்டறைகளில் கலந்துகொள்ளும்போது இந்தத் தூக்கம் வந்துவிடுகிறது. தூக்கத்தைக் கலைக்க இடையில் காப்பி அருந்தினாலும் அல்லது எழுந்து போய் முகத்தைக் கழுவி வந்தாலும்- சிறிது நேரத்தில் தூக்கம் வருகிறது. இது ஒரு நோய்க் குணமா? இதற்குக் காரணம் என்ன?

**பதில்:** முதலில் நீங்கள் ஒரு முழு மருத்துவப் பரிசோதனை செய்யவேண்டும். நீரிழிவு நோயின் ஆரம்பகாலத்தில், தைராய்ட் சுரப்பு குறைந்துள்ள பிரச்சினைகளின்போது எல்லாம் - தூக்கக் கலக்கம் ஏற்படுவதுண்டு. மருத்துவப் பரிசோதனைகளில் எதுவித கோளாறுகளும் கண்டறியப்படாவிடில் பின்வரும் விஷயங்கள் உங்கள் பிரச்சினைக்குக் காரணமாயிருக்கலாம்.

1. கூட்டங்கள், பயிற்சிகளுக்கு முன்னர் வயிறு நிறைய சாப்பாடு, சிற்றுண்டிகள் எடுக்கப்பட்டிருந்தால் - உடலில் இரத்தோட்டம் சமிபாட்டுத் தொகுதிக்கு திசை திருப்பப்படுகிறது. இதனால் மூளைக்குச் செல்லும் இரத்தம் குறைந்து- தூக்கம் ஏற்படும். அதே போல் வயிறு நிறைந்த உணவு உடலில் சர்க்கரை சத்தை அதிகரிப்பதால் - இம்மாதிரி தூக்கம் ஏற்பட வாய்ப்புண்டு.

2. கூட்டங்களில், பயிற்சிகளில் நடைபெறும் விஷயங்கள், பேசப்படும்- கருத்துரைகள் என்பவற்றில் உங்களுக்கு கரிசனை, ஈடுபாடு குறைவாக இருந்தால் - Boring என்ற அலுப்பு உண்டாகும். அல்லது பேசுகின்றவர்கள் சுவாரஸ்யம் இல்லாமல் பேசினால் கூட தூக்கம் வரும்.

3. Sedentary Life Style என்கின்ற உற்சாகம் இல்லாத - உடல் உழைப்பு குறைந்த - கதிரையில் உட்கார்ந்தே தொழில் பார்க்கும்போது - (இப்படியான தொழிலை ஆங்கிலத்தில் - White Collar Jobs வெள்ளைக் கொலர் தொழில் என்பார்கள்) - தொழிலே அலுப்புத் தட்டி- தூக்கம் இடம் பிடிக்கும்.

4. இறுதியாக முன்னர் கூறியது போல- Obesity என்கின்ற அதிக உடல் பெருத்தல், தைராய்ட் குறைபாடு, நேரந்தவறிய உணவு முறை, நீரிழிவு நோய் ஆகியவையும் இந்தக் கோளாறுகளுக்குக் காரணமாகின்றன. முக்கியமாக இரவில் குறட்டை விட்டுத் தூங்குபவர்கள் - தாங்கள் நல்ல நித்திரை கொள்வதாக எண்ணிக் கொண்டாலும் உண்மையில் அவர்களின் தூக்கத்தின் போது - தேவையான அளவு ஒட்சிசன் மூளைக்கு செல்லாததால் - பகலில் தூக்கம் ஏற்படுவதுண்டு. எனவே உங்கள் கோளாறின் காரணத்தை அறிந்து - சிகிச்சை பெறவும்.

---


**கேள்வி:** வயது 21 ஆண். எனது வளர் இளம்பிராயத்தில் அளவுக்கதிகமாக எடை போட்டு, பின்னர் கடின பயிற்சிகள் மூலம் நிறை குறைத்துக் கொண்டேன். இப்பொழுது எனது உடல் 'தொய்ந்து' Sagging போயுள்ளது. முக்கியமாக கைகள், வயிற்றுப் பகுதியில்- வெள்ளை நிறத்திலான மடிப்புக்கள்- Stretch Marks ஏற்பட்டுள்ளன. கூடிய தேகப்பயிற்சியினால் எனது முழங்கால் மூட்டு பாதிப்புற்று என்னால் எனது உடலை இறுக்கமாக்கும் Weight Lifting பயிற்சிகள் செய்யமுடியாமல் உள்ளது. ஓர் வைத்தியரின் ஆலோசனையைக் கேட்டபோது, உடல் மசாஜ் மற்றும் யோகா பயிற்சிகளை செய்யச் சொன்னார். எனது உடலைக் கண்ணாடியில் பார்க்கவே, மடிப்புகள், தொங்கல் என்பவற்றால் - அருவருப்பு அடைகின்றேன். எனக்கு பரிகாரம் கூறவும்.

**பதில்:** திடீரென்று எடையைக் குறைக்க - கடின - சிரமமான உடற்பயிற்சிகள், உணவுக் கட்டுப்பாடுகளைக் கையாளுவது உங்களுக்கு ஏற்பட்டுள்ள கோளாறுகளை கூட்டுகின்றன. உங்கள் கைகள் - வயிறு ஆகியவற்றில் உள்ள வெள்ளைத் தளும்புகள் (இறுக தசைகள் வலுக்கட்டாய மாக விரிவடைவதால் ஏற்படுகின்றன) Stretch Marks மறைய தினமும். ஏதா வது Moisturising Cream எனப்படும் பூச்சு மருந்தைக் குறைந்தது 6-10 மாதங்களுக்கு உபயோகித்துவரின் பலன் காணலாம். Massage எனப்படும் தசை அழுத்தப் பயிற்சி, யோகப் பயிற்சி என் பவை மனதில் Relaxation எனப்படும் ஆறுதல் மனோநிலையை ஏற்படுத்தும்.

தசைகள் வலுவடைய வேண்டும் எனில் - உடற்பயிற்சி அவசியம். ஆனால் உங்களுக்கு முழங்கால் நோவு இருப்பதால் நீச்சல் பயிற்சி, மற்றும் Shoulder Rotation எனப்படும் பயிற்சிகளை நீச்சற் குளத்தில் செய்வதால் உதவியாக இருக்கும். இது தவிர உணவு முறைகளிலும் கவனம் எடுக்கவும். தகுந்த Dietician உளவியல் நிபுணரின் ஆலோசனையைப் பெறவும்.

---

**கேள்வி:** எனது மகள் வயது 3. என்னையோ எனது கணவரையோ இது வரை - அம்மா என்றோ, அப்பா என்றோ வாய் திறந்து கூப்பிடவில்லை. வழக்கமாக அதிகம் பேசுவதில்லை. நாங்கள் அவளோடு பேசினால்- நாங்கள் பேசிய வசனத்தையே திருப்பிச் சொல்வாள். எனக்கு இப்பொழுது 38 வயது. கர்ப்பம் அடையும் வரை வேலைக்குப் போய் வந்தேன். அதன் பின்னர் பிறக்கும் குழந்தையைக் கவனிப்பதற்காக வேலையை விட்டு விட்டேன் - எனக்கு துக்கமாகவும், வாழ்க்கை விரக்தியாகவும் இருக்கிறது. என்னை அம்மா என்று கூப்பிடாததற்காக எனது மகளை விரக்தியில் அடித்தும் உள்ளேன். எனது பிரச்சினைக்கு வழி கூறவும்.



**பதில்:** குழந்தைகளின் வளர்ச்சி ஒவ்வொரு குழந்தைக்கும் வெவ்வேறாகத் தான் இருக்கும். நிச்சயம் உங்கள் குழந்தை பாலர் பாடசாலைக்குச் சென்று மற்றைய தனது வயதொத்த குழந்தைகளுடன் பழகும்போது - அவர்களின் சகவாசம் ஏற்படும்பொழுது - கட்டாயம் பேசுவார். உங்களை அம்மா என்று அழைக்காததற்காக நீங்கள் விரக்தி அடையக்கூடாது. நீங்கள் உங்கள் தொழில் வாழ்க்கையை தியாகம் செய்து, ஒரு பூரணமான குழந்தையை எதிர்பார்த்தீர்கள். அப்படி உங்கள் தியாகத்திற்கு பலன் கிடையாதபடியால் விரக்தியடைந்துள்ளீர்கள்.

சில குழந்தைகள் வெட்கம் காரணமாக அமைதியாக இருப்பார்கள். சிலர் பேசுவதற்குக் காலம் எடுப்பார்கள். அநேகமான குழந்தைகள் - தமது பெற்றோர், மூத்தோரிடம் இருந்து பேசக் கற்றுக்கொள்வதைவிட விரைவில் தமது வயதொத்த குழந்தைகளிடமிருந்தே பேசுவதற்கு கற்றுக் கொள்கின்றார்கள். அவரது நண்பர்கள் கூட்டம் அதிகரிக்க -- அவரது தொடர்பாடல் குணம் அதிகரிக்கும். அந்தப் பருவத்திலும், அவரது பேச்சுத்திறன், தொடர்பாடல் திறன் குறைவாக உங்களுக்குத் தெரிந்தால் - நிச்சயம் ஒரு குழந்தை மனோதத்துவ நிபுணரின் ஆலோசனை அவசியம் தேவையாகிறது.

குழந்தையை விசேடமான அன்பான ஒரு ஜீவனாக கருதிப் பழகுங்கள். வீட்டுப் பொருட்களோடு விளையாட அனுமதியுங்கள். அவருக்கு சிறு கதைகளைப் படித்துக் காட்டுங்கள். அவரோடு பாடி மகிழுங்கள். பெற்றோர் பொறுப்பு என்பது மகிழ்ச்சிகரமான நிகழ்வாக இருக்கவேண்டுமே ஒழிய உங்கள் கடமை போன்ற பொறுப்புகளை வெளிக்காட்டும் நிகழ்வாக இருக்கக் கூடாது.

---

**கேள்வி:** வயது 22. ஆண் - எனக்கு கடந்த காலத்தில் நடந்த விபத்தொன்றில் போது செவிப்பறை (Ear Drum) கிழிந்து விட்டது. இதனை சமீபத்தில் சத்திரசிகிச்சை செய்து (Tympanoplasty) அடைத்துவிட்டார்கள். என்றாலும் சாப்பிடும் வேளைகளில்-காதுக்குள் சப்தம் கேட்கின்றது போல் ஓர் உணர்வு. அது போல் கொட்டாவி விடும் போது-சப்தம் எதிரொலிக்கிறது. சத்திரசிகிச்சை செய்த மருத்துவர்-கொஞ்ச காலத்தில் மெல்ல மெல்ல இந்த பிரச்சினைகள் தீர்ந்து விடும் என்கின்றார். உங்கள் ஆலோசனையை வேண்டுகின்றேன்.

**பதில்:** உங்கள் Tympano plasty சத்திர சிகிச்சையின் பின்னர் செவிப்பறை கிழிந்ததால், ஏற்கனவே ஏற்பட்டிருந்த பிரச்சினைகளான சாப்பிடும் போது தொண்டைக்குள் இருந்த காற்று காதுவழியாக வெளியேறும் பிரச்சினை, போன்றவை நிச்சயமாக குணமாகி இருக்கும். கேட்கும் சக்தி குணமாகி வரும் போது திடீர் திடீர் என்று பெருத்த சப்தமாக கேட்பதும், நீங்கள் பேசுவது எதிரொலித்து கேட்பது போல் தோன்றுவதும் (இதனை Autophony என்பார்கள்) சகஜம். சத்திரசிகிச்சையின் போது- இரத்தம், இரத்தம் சம்பந்தப்பட்ட Serum போன்ற பொருட்கள் காது Eustachian குழாயினுள் தங்கி நிற்பதே இதற்கு காரணம். காலம் செல்ல செல்ல இவை உறிஞ்சப்பட்டு, சரியான கேட்கும் சக்தி ஏற்படும். கவலை வேண்டாம்.

---

**கேள்வி:** எனது மகள்-வயது ஒன்று. அவர் அழும் போது மூச்சடைத்து- 3-4 செக்கன்களுக்கு-அப்படியே பேச்சு மூச்சின்றி விறைத்து போகின்றார். அதன் பின்னர் சரியாகி விடுகின்றது. எங்களுக்கு இதனால் பயமாக இருக்கின்றது. இது ஏன் ஏற்படுகிறது?

**பதில்:** நீங்கள் கூறுவதை கருத்தில் கொள்ளும் போது - இது சில குழந்தைகளில் 6 மாதம் தொட்டு 3 வயதுவரை ஏற்படும் Breath Holding Spells கோளாறு என்று எண்ணுகின்றேன் குழந்தை திடீரென அழும் போது முதலில் மூச்சை அடக்குவதால் இது ஏற்படுகிறது. சிலவேளைகளில் இரும்புச் சத்து குறைவால் ஏற்படும் இரத்த சோகையினால் கூட இந்த கோளாறு ஏற்படும். அல்லது அதிகரிக்கும். எதற்கும் குழந்தைகள் மருத்துவ நிபுணரின் ஆலோசனை பெறவும். கால கெதியில் அந்த பிரச்சினை தானாகவே தீர்ந்து விடும் என்று நம்புகின்றேன்.

---

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி



# தமிழ் இலக்கிய உலகில் க.நா. சுப்பிரமணியம்

'இலக்கியத்திற்கு, தரம் ஒன்று உண்டு' என்று தெரிவித்து அதனை அடைவதுதான் எழுத்தாளனின் இலச்சியம் என நிலைநிறுத்த வாழ்நாள் முழுவதும் அயர்வு அறியாமல் பேசியும் எழுதியும் வந்த படைப்பாளியாக க.நா.சுப்பிரமணியம் முகிழ்ந்து நிற்கின்றார். பல மொழிகள் தெரிந்தவர்; பல நாடுகளுக்குச் சென்று வந்தவர். இதனால் பலவகைப் பட்ட இலக்கியங் களை அறியும் வாய்ப்பு அவருக்கு இருந்தது. நவீன தமிழ் இலக்கி யத்தின் சிந்தனையாளரான இவர், நாவல், சிறுகதை, கவிதை, விமர்சனம், மொழி பெயர்ப்பு என்று பல் வகையான துறைகளிலும் முத்திரை பதித்தவர். 'சூராவளி', 'ஞானர தம்', 'சந்திரோதயம்', 'இலக்கிய வட்டம்' ஆகிய பத்திரிகை களின் ஆசிரியராக இருந்தவர் என்ற வகையிலும் முக்கியத் துவம் பெறுகின்றார்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வலங்கைமானில் 1912 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி பிறந்த இவர், பன்முகப் பரிமாணங்களைக் கொண்ட இலக்கியச் சிந்தனையாளராக வாழ்ந்து காட்டியவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் **இளங்கலைமாணி** பட்டத்தினைப் பெற்றார். 1940 ஆம் ஆண்டில் 'மணிக் கொடி' எழுத்தாளர்கள் சிறுகதை மட்டுமே எழுதிக் கொண்டி ருந்த காலத்தில் க.நா.சுப்பிரமணியம் நாவல் எழுதினார். அவரது முதல் நாவல் 'சர்மா வின் உயில்'. இந்த நாவலை சேலத்தி லுள்ள ஹோட்டலில் அறை எடுத்துத் தங்கியிருந்து முப்பது நாட்களில் எழுதி முடித்ததாக அறியக்கிடைக்கின்றது. அதைத் தொடர்ந்து 'பசி', 'ஏழுபேர்', 'வாழ்ந்த வர் கெட்டால்', 'ஆட்கொல்லி', 'பொய்த் தேவு', 'ஒருநாள்', 'நளினி', 'கோதை சிரித்தாள்', 'தாமஸ் வந்தார்' போன்ற பத்துக்கும் மேற்பட்ட நாவல் களைப் படைத்துள்ளார்.

நாவல் இலக்கியம் பற்றி இவருக்குத் தீர்க்கமான எண்ணங்கள் அனுபவரீதி யாக உருவாகின. ''சிறந்த நாவல் என் பது பக்க அளவுகளைக் கொண்டு தீர்மானிக்கப்படுவதில்லை. இருநூறு இருநூற்றி ஐம்பது பக்கங்களில் சொல்ல முடியாத எந்தக் கருத்தையும் இரண்டா யிரம் இரண்டாயிரத்து ஐம்பது பக்கங் களில் சொல்லிவிட முடியாது'' என்று பல சந்தர்ப்பங்களில் எழுதினார். 'பக்க அளவு கூடக் கூட நாவலில் வடிவ அமைப்பும், கட்டுக்கோப்பும் சிதைந்து போய்விடுகிறது. எனவே குறைந்த அளவில் சொல்லி வாசகர்களை யோசிக் கவும் விரிவுபடுத்திக் கொள்ளவும் ஏற்ற மாதிரி இடம் கொடுத்து விட்டால் போதும். அதனை நவீன இலக்கியத்தில் பாரிசில் பலரும் சாத்திய மாக்கியிருக்கிறார்கள்'' என்று எடுத்துக் காட்டினார்.

படிப்பின் வழியாகத் தமது மனத்தில் தீர்மானித்துக் கொண்டதை யதார்த்தம், கிண்டல், எளிமையுடன் ஆர்ப்பாட்டம் இன்றி நாவல்களில் வெளிக்கொணர்ந் துள்ளார். அவருடைய நாவல்கள் இன்றும் படிக்கக் கூடியதாகவும், படித்து அனுப விக்கக் கூடியதாகவும் இருக்கின்றன. தனக்கென ஒரு தனித்துவத்தைக் கையாண்டார்.

தான் ஓர் இலக்கிய விமர்சகர் இல்லை என்று சொல்லிக் கொண்டே இலக்கிய விமர்சனம் செய்தவர். ''என்னுடைய படிப்பு, ரசனை, ஈடுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் எனக்குப் பிடித்தமான படைப்புக்களை மற்றவர்களும் படித்துப் பார்க்கச் சிபாரிசு செய்கின்றேன். படித்துப் பாருங்கள் படிக்கலாம்'' என்று சொல்லிக் கொண்டே நவீன தமிழ் இலக் கியம் முழு வதையும் பற்றி அபிப்பிராயம் சொன்னவர். இதுவும் ஒரு புதுவிதமான விமர்சன உத்தி என்றே கூறலாம். க.நா. சுப்பிர மணியத்தின் இடைவிடாத இலக்கிய விமர்சனம் தமிழ் நவீன இலக்கியத்தில் மிக முக்கியமான அம்ச மாக இடம் பெற்று விட்டது. அதாவது அவர் படிக்க வேண்டும் என்று சிபாரிசு செய்த புத்தகங்களும், நூலாசிரியர்களும் வாச கர்களுக்குப் பிடித்தமானவர்களாகவே இருந்தனர். முக்கியமாக புதுமைப்பித்தன், கு.ப.ராஜ கோபாலன், மௌனி ஆகி யோரைச் சிறுகதையாசிரியர்கள் என்ற அளவில் அடிக்கடி குறிப்பிட்டு வந்தார். மௌனிக் குப் பிறகு தி. ஜானகிராமன் சிறுகதைக ளில் ஈடுபாடு காட்டினார். படைப்பி லக்கியத்திலிருந்து எவற்றை உள்வாங்கினாரோ அதையே தன்னுடைய முடிவு களுக்கு ஆதாரமாகக் கொண்டு எழுதிவந்தார்.

பெரிய எழுத்தாளர்களானாலும், பத்திரிகைகள் ஆனாலும் தமது அபிப் பிராயத்தை எதுவித தயக்கமும் இன்றித் துணிந்து கூறும் ஆற்றல் அவரிடம் இருந்தது. 'மணிக்கொடி' ஆசிரியராக இருந்த பி.எஸ் ராமையாவுடன் நெருங் கிய நண்பராக இருந்த போதிலும் ''மணிக் கொடி பத்திரிகை அப்படி யொன்றும் தரமான இலக்கியப் பங்களிப்பை வழங்கவில்லை. சிறந்த சிறுகதைகள் பரசுரிக்கப்பட்டதால் மட்டுமே அதுபற்றிப் பேசப்பட்டது'' என்று கூறியுள்ளார். பிரபலமான பத்திரி கைகள் எழுத்துக்கள் மீது அவருக்கு நம்பிக்கை இருந்ததில்லை. குறிப்பாக கல்கி, ராஜாஜியைப் பின்பற்றி எழுதினார் என்றே அடிக்கடி சொல்லிவந்துள்ளார். தி. ஜானகிராமனின் 'மோகமுள்' நாவல் அநாவசியமான தொடராக எழுதவேண்டிய நிர்ப்பந்தத் தால் நீட்டி எழுதி யுள்ளார் என்றும் கூறி யுள்ளார். மணிக் கொடி, கல்கி, மோகமுள் பற்றிய அபிப் பிராயம் இத்தகையதாக அமைந்து விட்டது.

பாரதியார் மீது அவருக்கு அபரிதமான ஈடுபாடு இருந்தது. நவீன தமிழ் இலக்கி யம் பாரதியாரிடம் இருந்து தொடங்கி வளர்ச்சி கண்டு வருவதாகவே எழுதி வந்தார். உரைநடை இலக்கியம் தோன் றியபின் இந்திய இலக்கியம் ஒன்று உரு வாகி இருப்பதாகவும், அதை எடுத்துச் சொல்லிய ஆசிரியர்கள் ஒவ்வொரு மொழியிலும் இருக்கிறார்கள் என்றும் கூறினார். தமிழில் நீல. பத்மநாபன் எழுதிய 'தலை முறைகள்' நாவல் 1968 ஆம் ஆண்டு வெளிவந்த போது, அதைச் சிறந்த நாவல் என்று எழுதிய க.நா. சுப்பிரமணி யம் அதனை ஆங்கிலத்தில் தானே மொழிபெயர்த்தார். படிப்பதில் தீவிர ஈடுபாடு கொண்ட இவர் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளி லும் கிடைக்கும் நூல்கள் எல்லாவற்றை யும் படிப்பார். படிப்பின் மீது அபாரமான ருசி இருந்தது. இதன் காரணமாகத் தான் போலும் இவரது விமர்சன அணுகுமுறை புதிய நீரோட்டத்தில் சென்றது.

க.நா.சுப்பிரமணியம் நாவல், மொழி பெயர்ப்பு, விமர்சனம் என்பவற்றுடன் சிறுகதைகளும் எழுதியுள்ளார். 'சாவித்திரி', 'அழகி', 'சோதனைகள்' என்ற சிறுகதைகளைக் குறிப்பிடலாம். கலை என்பது பூரணமாக படைப்பு எழுத்தாளரின் ஆளுமையின் வெளிப் பாடு என்பது அவர் கதைகளை வாசிப் பதன் மூலம் புரிந்துகொள்ளலாம். குறிப் பாக காலம் என்பதன் சுவடு தெரியாமல், கருத்துக்களி லிருந்து சுதந்திரம் கண்டது போலவே காட்சிப்படுத்துவதிலும், மொழியைக் கையாளுவ திலும் சுதந்திரமான மனப் போக்கை அவரது சிறுகதைகள் புலப் படுத்துகின்றன. ஏனை எழுத் தாளர்களிடமிருந்து வேறுபட்ட சிந்தனையாளராகவே இருந்துள்ளார் என் பது புலனாகின்றது.

க.நா.சுப்பிரமணியம் தம் பெற்ற ஆங்கில இலக்கிய ஈடுபாடு காரணமாக, தமிழ் இலக்கியத்தின் பால் அக்கறை யுடன் செயற்பட்டார். மேற்கத்திய இலக்கிய முயற்சிகள் அவரை வெகு வாகக் கவர்ந்ததன் காரணமாக மரபுக் கவிதைகளை விட்டு, கவிதைக ளைப் படைத்தார். அக்கவிதைகள் பன்னாளில் 'புதுக்கவிதை' என்று பெயர்பெற்றன. 1939 ஆம் ஆண்டு சிறுகதை எழுதத் தொடங்கியதிலிருந்து புதுக்கவிதைகளையும் எழுதிவந்தார். அவரின் முதல் கவிதைத் தொகுப்பு 'மயன் கவிதைகள்' என்ற பெயரில் 1977 ஆம் ஆண்டு வெளிவந்ததாக அறிய முடிகின்றது. இந்தக் கவிதைத் தொகுப்புக்கு கேரளத்தில் 'குமரன் ஆசான் கவிதைப் பரிசு' வழங்கப்பட்டது.

'கோதை சிரித்தாள்' என்ற நாவலுக்கு, தமிழ்நாடு அரசின் இலக்கியப் பரிசு கிடைத்தது. 'இலக்கியத்திற்கு ஒரு இயக் கம்' என்னும் கட்டுரைத் தொகுதிக்கு சாகித்திய அக்கடமி பரிசு வழங்கப்பட் டது. எழுதுவதையே மூச்சாகக் கொண்டு நாவல், சிறுகதை, கட்டுரை, கவிதை என்று தொடர்ந்து எழுதிக்கொண்டே இருந்தார். சிறந்த தமிழ் நாவல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண் டும் என்ற உந்துதலால் 'கமலாம்பாள் சரித்திரத்தை' மொழிபெயர்த்தார். ஆர். சண்முகசுந்தரத்தின் 'நாகம்மாள்', நீல பத்மநாபனின் 'தலைமுறைகள்' மேலும் இரண்டு சிறுகதைத் தொகுப்புகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

பழந்தமிழ் இலக்கியங்களையும் மொழிபெயர்த்து வெளியிடும் முயற்சி களிலும் கவனம் கொண்டார். 'சிலப்பதி காரத்தை வசனமாக ஆங்கிலத்தில் எழுதினார். மேலும் 'குறுந்தொகை', 'திருக்குறள் அறத்துப்பால்', என்பவற் றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த் துள்ளார். நாற்பதாண்டுகளுக்கு மேலாக நவீன தமிழ் இலக்கியத்தின் பெரும் சக்தியாக விளங்கிய படைப்பிலக்கிய வாதி. விமர்சகர் என்று பொதுவாக அறி யப்பட்டவர். தான் கருதிய தரத்தில் இல்லாத இலக்கியங்களை கடுமையாகச் சாடி பெரும்பான்மையானவர்களின் கண்டனங்களைப் பெற்றிருந்த போதி லும், இந்திய இலக்கியம் ஒன்று உரு வாகியபோது, அதைப்பற்றி அதிகமாகச் சிந்தித்து அதில் தமிழ் இலக்கியத்துக் கும் பங்களிப்பை வழங்கிய வகையில் க.நா.சுப்பரமணியம் சிறப்புப் பெறுகின்றார். ✱

---




# புனைகதைத்துறையில் ஈழத்தவர்கள்



ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலமொழியைக் கற்றவர்கள் அதன் வாயிலாக மேலை நாடுகளின் இலக்கி யங்களைப் பற்றிய அறிவினைப் பெறக் கூடிய சந்தர்ப்பம் கிட்டியது. இதன் காரணமாக ஆங்கில அறிவுடைய வர்கள் ஆங்கிலச் சிறுகதை, நாவல் களைக் கற்று அவற்றைத் தமிழ்மொழிக்கு அறிமுகப்படுத்தினர். இதேவேளை தென்னிந்தியாவில் இருந்து வெளிவந்த மணிக்கொடி, கலைமகள் மற்றும் வெளிவந்த சஞ்சிகைகளும் புனைகதை இலக்கியத்தின் மேல் கொண்ட ஈடுபா டும், எம்மவர்களை அதன்பால் ஆர்வத்தை ஏற்படுத்தியது. பொதுவாக நோக்கும்போது ஆரம்ப காலத்தில் மத்தியதர வர்க்கத்தினரே இலக்கிய ஆர்வம் மிக்கவர்களாக இருந்துள்ளார் கள். இருமொழி அறிவுள்ளவர்களே இத்துறையின் பால் முயற்சியுடையவர் களாக இருந்து வந்துள்ளனர்.

1930 களில் ஈழத்தவர்கள் சிறுகதை களை எழுதத் தொடங்கினார். சுன்னாகம் திருமகள் அழுத்தும் என்னும் அச்சுயந்திரக் கூடத்தை நிறுவிச் செயற்பட்டுக் கொண்டிருந்த பொன்னையா அவர்கள் 'ஈழகேசரி' என்னும் பத்திரிகையை ஆரம்பித்தார். ஈழகேசரி, சிறுகதை ஆக்க இலக்கியப் படைப்பாளிகளை இனங்கண்டு அவர்களுக் குக் களம் அமைத்துக் கொடுத்தது. இந்தியச் சஞ்சிகைகளின் வருகை ஈழத்து எழுத்தாளர்களை எழுதவைத்தது. ஆரம்பத்தில் இந்திய எழுத்தாளர்களுடைய பாணியிலேயே இலங்கை எழுத்தாளர்களும் இந்திய வாசகர்களுக்காகவே இந்தியச் சஞ்சிகை களில் எழுதிவந்துள்ளனர். இலங்கையர் கோன், சி.வைத்தியலிங்கம், சம்பந்தன் ஆகியோரின் படைப்புகள் 'கலைமகள்' சஞ்சிகையில் வெளிவந்தன.

ஈழகேசரி 158 சிறுகதை யாசிரியர்க ளின் 514 படைப்புகளைத் தந்ததாக அறிய முடிகின்றது. அ.செ.முருகானந்தன், இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம், சம்பந்தன், அரியரத்தினம், சிவபாத சுந் தரம், சொக்கன், வரதர், கனகசெந்திநாதன், வ.அ.இராசரத் தினம், சு.இராச நாயகன் ஆகியோர் ஈழகேசரி எழுத்தாளர்கள்.

1940 களில் வி.குப்புசாமி ஐயர் 'கதைக் கோவை' என்ற சிறுகதைத் தொகுதியை தமிழ்நாட்டிலிருந்து வெளி யிட்டார். அச் சிறுகதைத் தொகுதியில் இலங்கை எழுத்தாளர் களான இலங்கையர் கோன், சி.வைத்திய லிங்கம், சம்பந்தன் ஆகியோரின் சிறுகதைக ளும் இடம் பெற்றி ருந்தன. ஈழத்தின் முன்னோடிச் சிறுகதை எழுத்தாளர்கள் சமூகத்தை முன்னிறுத்தி, தமது சீர்திருத்தக் கருத்துக்களைப் படைப்பு களில் வெளிக்கொண்டு வந்தனர். அன்றைய சமுதாயத்தில் நடைபெறும் வாழ்க்கை யோடு ஒட்டியதான கதையம் சங்கள் படைப்புகளில் இடம்பெற்றன. இலங்கையர் கோனின் 'வெள்ளிப் பாதரசம்' ...வும் சிறுக... ர்வலாகப் பேசப்பட...

1943களி... தொடங்கப்பட்ட 'மறுமலர்ச்சி' இதழ் சிறுகதைத் துறைக் குத் தனது பங்களிப்பை வழங்கியுள்ளது. வரதர், சொக்கன், அ.ந.கந்தசாமி, து.உருத்திரமூர்த்தி, நாவற்குழியூர் நடராஜன், சு.இராசநாயகன், இ.பொன்னுத் துரை ஆகியோர்கள் முக்கிமானவர்கள்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் 1950 க்குப் பின் புதிய உத்வேகத்தைக் காணக்கூடியதாக இருந்தது. 'இலக்கியம் மக்களுக்காக' என்ற கோசம் முன்வைக்கப்பட்டது. 'முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' என்ற அமைப்பு உருவாக்கப் பட்டு, நவீன இலக்கியத்தின் தோற்றம் அறிமுகமாகியது. அடக்கப்பட்ட ஒடுக் கப்பட்ட மக்களின் குரலாக இலக்கியங் கள் பேசலாயின. கே. கணேஸ், அ.ந.கந்தசாமி, இராமநாதன், இளங்கீரன், சில்லையூர் செல்வராஜன் ஆகியோர் முன்னின்றனர்.

(மிகுதி அடுத்த வாரம்)

> மற்றவர் களைக் கீழ் நோக்கிப் பார்ப்பது எளிது. நம்மை நாமேகீழ் நோக்கிப் பார்ப்பதுதான் அரிது.

# வாழ்க்கையின் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்கின்றபோது

## நேர்மையுணர்வு மேலிட வேண்டும்

கடந்த வாரம் வாழ்க்கைப் படித்தரங்களில் ஏழாம் கட்டம்வரை பார்த்தோம் இனி மனித வாழ்வின் இறுதிக் கட்டத்தில் நிகழ்வதைப் பார்ப்போம்.

45வயதிற்கு மேல்
(நேர்மை-எதிர்-நம்பிக்கையின்மை)

இது மனிதரின் வாழ்வில் முக்கிய மானதொரு கால கட்டமாகும். ஒருவரின் முயற்சிகள் முடிவுக்கு வருகின்ற கால கட்டத்துக்குள் பிரவேசிக்கின்ற பகுதியோடு இது தொடர்புபடுகின்றது. இந்தக் கால கட்டத்தில் ஒருவர் தனது கடந்தகால வாழ்நாளை திருப்திகரமான உணர் வோடு திரும்பிப் பார்க்கின்றபோது நேர்மை உணர்வு மேலிடுகின்றது.

ஆனால், ஒருவர் தனது கடந்த கால




வாழ்க்கையை மீட்டிப் பார்க்கின்றபோது தவறவிடப்பட்ட பல வாய்ப்புகளை நினைத்து திருப்தியற்ற நிலையில் இருந்தால், காலம் கடந்து விட்டது என்ற விரக்தி நிலைக்குத் தள்ளப்படுகிறார்.

ஒட்டு மொத்தத்தில் மனிதர்களில் ஒரு சாராருக்கு இக்காலகட்டம் திருப்தியோடு இளைப்பாறி தனது அடுத்த கட்டப்பயணத்தைப் புத்துணர்ச்சியோடு மேற்கொள்வதற்கான ஒன்றாகவும் இருக்கின்ற அதேவேளை, மனிதர்களில் இன்னொரு சாராருக்கு தனது கைசேதத்தை எண்ணிவருந்தும் காலகட்டமாகவும் இருக்கும்.

இளமைக் காலத்தில் தனது உள்ளம் நாடியவற்றையெல்லாம் செய்யக் கூடிய உடல் வலிமை படைத்தவராக ஒருவர் இருப்பார். ஆனால், வாழ்வின் இறுதிப் படித்தரமான எட்டாவது காலகட்டத்தில் ஒருவர் தனது மனோ இச்சைப்படி இயங்குவதற்கு உடல்நிலை இணங்கிப்போகாது.

உள்ளம் ஒன்றைச் சொல்ல, உடல் அதனைச் செய்வதற்கு மறுப்புத் தெரிவிக்கும் ஒரு சூழ் நிலையே இக்கால கட்டத்தில் காணப்படும். எனவேதான் உடலும், உள்ளமும், பலமும், நலமும் பொருந்தியதாக இருக்கும் காலகட்டத்தில் நம்மை நாமே நெறிப்படுத்தி வாழ்ந்தால் வாழ்வின் அந்திம காலத்தில் புகழ்மிக்க ஒரு உணர்வோடு சஞ்சரிக்கலாம்.

முதுமை எனும் பிணி வருமுன் தன் வாழ்நாளின் இளமைக்காலத்தைச் சீரிய வழியில் பயன்படுத்தியோருக்கு வெற்றியின் நன்மாராயங்களும் சுபசோபனங்களும், அருளும், ஆத்ம திருப்தியும் மற்றும் இன்னபிற வரப்பிரசாதங்களும் ஏற்படும்.

**[ஏ.எச்.ஏ. ஹுஸைன்]**

இதுவரை நாம் தொடராகப் பார்த்து வந்த மனித வாழ்க்கைப் படித்தரங்களில் காணப்படும் எட்டு வகையான ஆளுமை அபிவிருத்திக் கால கட்டம் ஒன்றில் குறிப்பிட்ட பிரச்சினை தீர்க்கப் படவில்லையாயினும் அவர்கள் அந்தக் குறிப்பிட்ட கால கட்டத்து குணாம்சங்களையே கொண்டிருக்க வேண்டியதில்லை என்பதை இங்கு முக்கியமாக வலியுறுத்த வேண்டும்.

சூழ் நிலையைப் பொறுத்து ஒவ்வொரு தனிமனிதனும் தன்து எதிர்மறை அனுபவங்களை அதன்பின் தொடர்ந்து வரும் காலகட்டங்களில் நீக்கிக்கொண்டு அடுத்த கட்டத்திற்குள் செல்ல முடியும். அதே சமயம் ஒரு குறிப்பிட்ட படிமுறைகளை வெற்றிகரமாக நிறைவு செய்தவர் பின்னால் அவருக்கேற்பட்ட அனுபவங்க்ள் மூலமான பாரதூரமான பாதிப்பின் அடையாளம் அல்லது மனக்கிளர்ச்சியின் காரணமாக பின்னோக்கியும் செல்லலாம்.

சிந்தனையில் கிடைக்கும் அறிவு; சிந்தனை என்பது சிறப்புமிக்கது மட்டுமல்ல சக்தி வாய்ந்ததும் கூட. அறிவு கிடைப்பதற்கு சிந்தனை அருமையானதொரு வழியா கும். சிந்தனை அந்த அறிவையும் ஈர்த்துக் கொண்டு வந்து விடும்.

நோயாளிக்குப் பகுத்தறிவு பயன்படாதது போல், ஆரோக்கியசாலிக்கு வைத்தியம் பயன்படாது. ஒன்று மட்டும் நிச்சயம். வைத்தியத்தைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமானால், உங்களிடம் கண்டிப்பாய்ப் படுத்தறிவு இருக்க வேண்டும். பகுத்தறிவு இல்லாமல் எவரும் எந்த அறிவையும் புரிந்து கொள்ளமுடியாது.

எனவே, வயாதியைப் போக்குவதற்குப் பகுத்தறிவோடு வைத்தியமும் தேவைப்படுகிறது. இவற்றில் ஒன்று மற்றொன்று இல்லாமல் பயன்படாது. இந்த இரண்டுமே வாழ்க்கைக்குத் தேவையானதாகும்.

எதையும் சிந்திக்க வேண்டியதுதான் தவறில்லை ஆனால், நேர்மையோடு சிந்தித்துப்பாருங்கள். அதன் சிறப்பு உங்களை மேன்மையடையச் செய்யும்.

> உங்களது அந்தரங்க பிரச்சினைகள் மற்றும் சந்தேகங்கள் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கிறார் உளநல ஆலோசகர் ஏ.எச்.ஏ.ஹுஸைன்.
> கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
> 'உளநல ஆலோசனை'
> சுடர் ஒளி வாரமலர்,
> 85, ஜெயந்தமல்லி மாராச்சி மாவத்தை,
> கொழும்பு - 14.
> ஈமெயில் : abdulhussein525@gmail.com

---

**கேள்வி:** இல்லாதது பொல்லாதது எல்லாவற்றையும் சொல்லி மனவேதனையையும் மற்றக் குழப்பங்களையும் ஏற்படுத்துகிறார்களே. இதனால் வெறுப்பும் விரக்தியும் உண்டாகிறது. இத்தகைய தீய எண்ணத்தை ஒருவர் கொண்டிருப்பதற்கு என்ன காரணம்? இதனை எப்படிச் சீர்செய்யலாம்?

**பதில்:** சிலர் வாழ்ந்த, வாழ்கின்ற சூழல் இத்தகைய ஓர் இசைவாக்க மான மன நிலைக்கு அவர்களை இட்டுச் செல்கிறது. இது தவிர பாரம்பரிய மனப்பாங்குகளும் காரணங்களாக அமையலாம். எப்படியிருந்தாலும் சமூகத்திலுள்ள சிலரிடம் காணப்படும் இத்தகைய இழிவான மனப்பாங்குகள் சம்பந் தப்பட்ட நபரையும் உய்யவிடாது மற்றவர்களை ஆக்கபூர்வமாக செயற் படவும் விடாது தடங்கல் களை ஏற்படுத்திவிடும். மனிதர்களிடம் காணப்படும் ஒரு கொடிய நோயாக இதனைக் கருத முடியும்.

மனிதன் பெருமையையும் மதிப்பையும் மரியாதையையும் விரும்புகிறான். அதேவேளை இகழ்ச்சியையும், நிந்தனையையும் அவதூறுகளையும் வெறுக்கிறான். இது மனிதனின் மனோநிலை.

மற்றவர்கள் மீது அவதூறு சொல்லி சேற்றை வாரி வீசுபவர் கள் ஒருநாள் தாங்களும் அவ்வாறான அவதூறுகளுக்கு முகம் கொடுக்கும் போது உணர்ந்து கொண்டு தங்களது சிறுமைத்தனத்தை விட்டு நீங்கிக் கொள்ள வழியேற் படும். ஆனால், புறநடையாக உள்ள சிலர் ஒரு போதும் திருந்த மாட் டார்கள் அவர்களது ஆயுள் முடியும் வரை மற்றவர்களுக்குக் கெடுத்தல் வந்து கொண்டே இருக்கும்.

***

**கேள்வி:** சிலர் பதவி மோகத்தின் ஆணவத்தில் மற்றவர்களை மதிக் காமல் நடந்து கொள்கிறார்கள். எனது அலுவலகத்திலுள்ள ஒருவர் தான் பணிப்பாளர் என்ற மமதையில் கண் மண் தெரியாமல் நடந்து கொள்கிறார். அதேவேளை இவரைப் பற்றிச் சமூகத்தில் எந்த மதிப்பும் இல்லை. இப்படிப் பட்டவர்களைத் திருத்தவே முடியாதா?

**பதில்:** உங்கள் கேள்விக்கு அறிவு மேதை இமாம் கஸ்ஸாலியின் ''பதவி மோகம்'' என்ற நூலிலிருந்து பதிலைத் தருகிறேன்.

''பதவி மோகம் கொண்டவன் மக்களிடம் பொதுவாக நெருங்கிப் பழகி அன்பு செலுத்துவதில். கவனம் செலுத்த மாட்டான். அவர்களிடம் தனக்கு இருப்பதாக அவன் கருதிக் கொள்ளும் தன் மதிப்பும், மரியாதையும் உயர்வதற்குத் தகுந்தாற்போல் தான் அவன் எப்போதும் உரையாடுவான், செயலாற்றுவான் இது தான் நயவஞ் சகத்தின்வித்து. இதுதான் அடிப்படையான தவறு. இத்ன் விளைவாக இறை வணக்கத்தை அலட்சியப் படுத்தும் மனபான்மை கண்டிப்பாய் ஏற்பட்டு விடும். மக்களின் உள்ளத்தைக் கவரு வதற்காகத் தவறான பல செயல் களைச் செய்யவும் துணிவு பிறக்கலாம். இதனால் தான் அண்ணல் நபியவர்கள், பொருளாலும் பதவியாலும் ஏற்படும் விளைவை, இரண்டு கொடிய நோய் களால் ஏற்படும் விளைவுக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள். ''நீர் கீரையை உற்பத்தி செய்வது போல் பதவி மோகம் நய வஞ்சகதன்மையை உற்பத்தி செய்து விடும்'' என்றும் கூறியிருக்கிறார்கள்.

நயவஞ்சகம் என்றால் அகமும் புறமும் ஒன்றுக் கொன்று முரண்படுதல் என்றுதான் பொருள் மக்களின் மதிப்பைக் கவர விரும்புபவன் மக்களிடம் நயவஞ்சகத்தனத்தோடுதான் பழக்கிக் கொள்கிறான். தன்னிடம் இல்லாத தன்மைகளைத் தன்னிடம் இருப்பதாகக் காட்டிக் கொள்கிறான். இதுதான் நயவஞ்சகம். இப்படிப் பார்க்கும் போது பதவி மோகம் என்பது மனிதனைப் பாழ்படுத்தும் கொடிய தன்மை என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

அறிவாலும், செயலாலும் சிகிச்சை செய்து இந்தக் கொடிய பிணியை உள்ளத்தை விட்டும் அப்புறப்படுத்த வேண்டும்.

> பலரின் வேண்டுகோளுக் கிணங்கி இப்பகுதியில் பிரசுரிக் கப்படும் வாசகர்களால் அனுப் பப்படும் உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு அவர்களின் பெயர், இடம் என்பவை குறிப் பிடப்படவில்லை.

---

## பெண் பக்கத்தில் சகோதரியின் பார்வையில் இடம்பிடித்திருக்கும் சகோதரியின் மடலுக்கான ஆலோசனை.

**கேள்வி:** எனக்கு வயது 55. என் கணவர் இளம் வயதிலேயே வேறொரு பெண்ணோடு தொடர்பு கொண்டதால் அவரை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறேன். இதுவரைக் காலமும் எனக்கு துணையாக இருந்த தொழிலில் இருந்து இப்போது பென்ஷனாகி உள்ளேன். தனிமை என்னை கொல்கிறது. இனி இருக்கும் காலத்தையாவது நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் கழிக்கும் வண்ணம் எனக்கு ஆலோசனை வழங்க முடியுமா?

**பதில்:** சகோதரி, மேலே உள்ள ''ஆரோக்கியமான உள்ளத்தை நோக்கி '' என்ற எமது தொடரில் வாழ்வின் முக்கியமானதொரு காலகட் டத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. கிட்டத் தட்ட அந்தக் கட்டத்தில்தான் நீங்களும் ஒரு வாழும் அனுபவமாக இருக்கிறீர்கள்.

வாழ்க்கை ஓட்டத்தில் தனிமையும், துணையும் மாறி மாறி வரும். இதுதான் நியதி. சிலர் தனிமையை விரும்பி ஏற்றுக்கொள் வார்கள். இன்னும் சிலர் தனிமையால் அவஸ்தைப் படுபவர்கள்.

''இனிது இனிது ஏகாந்தம் இனிது அதனிலும் இனிது ஆதியைத் தொழுதல்''

என்று ஔவையார் பாடியிருக்கிறார். அதாவது தனிமை சுகம் அலாதியான தென்றும் அதனைவிட படைத்த இறைவனை வணங்குதல் இன்னமும் சுகமளிக்கக் கூடியது என்றும் இதற்கு அர்த்தம் கொள்ளலாம்.

கடந்த காலத்தைப் பற்றி நீங்கள் கலங்குவது எந்த வகையிலும் உங்களுக்கு நன்மைதராது. ''நாம் வேறுபல திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் போது எது நடை பெறுகிறதோ.. அதுதான் வாழ்க்கை'' நடந்ததை எண்ணி வருந்திக் கொண்டிருந்தீர்கள் என்றால் அது உங்கள் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பாழாக்கிவிடும்.

இருக்கும் காலத்தைப் பிரார்த்தனை புரிவதிலும், மற்றவர்களுக்கு குறிப்பாக ஆதரவற்றோருக்கு உதவுவதிலும் பயன்படுத்தலாம். பொருத்தம் என்று கருதினால் ஒரு வாழ்க்கைத் துணையைத்தேடிக் கொள்வதிலும் பிரச்சினைகள் ஏதும் இல்லை. ஆனால், தேடிக் கொள்ளும் துணை சுமையாக இல்லாமல் சுகமானதாக இருக்க வேண்டும்.

*****



# கவிதைப்புனல்

மலையக எழுச்சி

## ஓடைதம் நீ!

சிகையினில் முற்றாய் வெண்மை
சேர்கின்ற போதும் காதல்
நகைமுகத் தாளே யுன்னில்
நாட்டமேன் குறைய வில்லை?
தொகைப்பெரு நாட்க ளுன்னைத்
தொட்டுமே அளைந்த போதும்
மிகையான மோகம் முற்றாய்
மீளவே யில்லை யேனோ?

பொன்னையே பழிக்கு முந்தன்
பூமுகம் காணும் போதில்
உன்னையே இரசித்தி ருக்கும்
உவகையே உளத்தில் மோதும்!
மின்னெனக் கவர்ந்தி ழுக்கும்
மெல்லுடல் வாய்த்த மாதுன்
பின்னெழில் காணும் காலை
பித்தாக்கும் உணர்ச்சி வெள்ளம்!

காப்பியம் செய்த ளித்த
காளிதா சனைப்போல் யானும்
பாப்புனை கின்ற தாசன்!
பாடிடும் கவிதை யானாய்!
மூப்படைந் திட்ட போதும்
மோகனம் உனையே கண்டால்
மூப்பிலா இளைஞன் நானும்
மொய்த்திடும் அளிபோ லாவேன்!

ஆடையை முற்றாய் நீக்கி
ஆவலாய் அங்கம் யாவும்
வாடைபோல் தழுவிச் செல்லும்
வாஞ்சையே வந்து மோதும்!
கோடையில் பொழியும் மேகம்
குளிர்தரும் நிலைமை தந்தென்
பீடையை மாற்று கின்ற
பெருமைசேர் ஓடை தம்நீ!

-கவிஞர் அ.கௌரிதாசன்
ஆலங்கேணி கிழக்கு, கிண்ணியா.

## முத்தப் பார்வை!

இதழில் கடித மெழுத-உயிர்
இறங்கி மயங்கியது
முதலில் விழி சுவைக்க-உயிர்
முயன்று உருகியது!

சுவாசம் துடிக்க- உயிர்
சுகம் முளைத்தது
சுகவாசம் குடிக்க-உயிர்
சுவனம் அழைத்தது!

தொடாது பருகுதல்-மோகம்
தணியா பேரின்பம்
தொட்டுக் கரைதல்- மோகம்
தணியும் சிற்றின்பம்!


தூரமாய் நானிருந்து- விழி
தொடுத்தல் இன்பவூற்று
ஓரமாய் ஒதுங்கி யிருந்து-விழி
ஒன்றித்தல் இனிப்பூற்று!

காமச் சோலையொன்றை-விழி
கொண்டு பூத்தது
மோகப் பூவை- விழி
மோதி வேர்த்தது!

கூந்தல் வாச முண்ண-என்
களிப்பு காத்திருக்கும்
ஏந்தி நேசமுண்ண-என்
ஏக்கம் விழித்திருக்கும்!

காலை மாலைவரை- என்
கண்கள் முள்ளாயின
சேலை கலையும்வரை-என்
செய்தி கள்ளானது!

உடல் துறந்து-நான்
உயிரில் இறங்கினேன்
கடல் கறந்து-நான்
உயிருள் இறுகினேன்!



-ராஜகவி ஏ.சி.ராஹில்

## இந்தியத் தாக்கம்

விடுதலைப் போரில் அஹிம்சை
வீரர்கள் காந்தி, நேரு
தொடுத்தபோர் வீறு; உச்சம்
தேசத்தின் எழுச்சி; இங்குங்
கடும்பக்தி இவர்கள் மீது
கதராடை மீது மோகம்
விடுதலை வேட்கை யாலே
இலங்கையும் விழித்த காலம்!

தலைவர்கள் காந்தி, நேரு
தொடுத்தபோர் கண்டு ஆங்கு
சிலைபோல ஆட்சி யாளர்
திகைப்புக்குள் ஆழ்ந்தார்; ஈங்கும்
அலையெனத் தாள்கள், நூல்கள்
ஆங்காங்கு வருகை; கண்டு
மலையகம் விழிப்பு; மக்கள்
மத்தியில் தாக்கம்; ஊக்கம்!

மிடுக்குரை, நிகழ்வுச் செய்தி
விடுக்கும்பல் இதழ்கள் கற்றோர்
எடுப்பிங்கு; படிப்பு; கேட்போர்
இதயத்தில் துடிப்பு; பேச்சு
நடுக்கத்தை ஓட்டும்; ஊட்டும்
நெஞ்சத்தில் வீரம்; ஈங்கு
ஒடுங்கிட்ட மக்கள் கூட
உத்வேகம்; உணர்ச்சிப் பெற்றார்!

பாரத அஹிம்சைப் போரை
பார்மெச்ச நடத்தி வந்த
சாரதி அண்ணல் காந்தி
சரித்திரம் படைத்த நேரு
வீரனாம் ஹிட்லர் கண்ட
நேதாஜி சிங்கம் அஞ்சா
தீரனாம் பட்டேல் இல்லப்
படங்களில் காட்சி; ஆட்சி!
(தொடரும்).

கவிஞர் வி.எஸ். காந்தி

## ஓய்வு பெற்றான்!

வளமாய் வாலிப மிருந்தும்
வழுக்கை ஆகிப் போனேன்
'இளமை' யுற்ற எனக்கு
இந்நிலை யேனோ அறியேன்
நலமாய் உள்ளேன்; பிணிகள்
நானும் அறிந்தி லேனே!

அறுபதைக் கடந்த 'வாப்பா'
அழகாய் முடியும் கண்டார்
உறுதி யுற்ற முடியும்
உதிர விலையே; அன்னார்
இறுதி வரையும் அதேபோல்
இருந்தே இறந்து போனார்!

சுகமே தலையில் இல்லை
சூரியன் தொ(சு)ட்டுத் தாக்கும்
இகமே 'மொட்டை' என்று
இம்சிக் கின்றது என்னை
முகத்தில் தாடி மட்டும்
முளைக்கக் குறைவே இல்லை!

சீப்பு என்னைப் பார்த்து
'சீ'எனப் போனது; "மொட்டை
வாப்பா" என்றென் மகனும்
வம்பு புரிவான்! எனக்கு
மூப்பு வராத நிலையில்
முடியை இழந்தேன் பாரீர்!

முன்றில் அமரச் செய்து
முடியைக் கிளறிப் பார்த்து
அன்றென் சிரசில் இல்லாள்
அழகுற பேன்கள் பார்த்தாள்
இன்று இன்றி பார்ப்பு
இல்லாள் ஓய்வு பெற்றாள்!

-வி.எம். அன்ஸார், கிண்ணியா.

## தொல்லையடா!

தொல்லைசேர் தொல்லுலகில்-வந்து
தொட்டதெலாம் தொல்லையடா!
இல்லையென இருப்போர்க்கு-என்றும்
எல்லாமே தொல்லையடா!
அல்லையிலும் இல்லையெனும்-மனித
அடிவயிற்றுத் தொல்லையடா!
❋❋❋❋❋

வாழ்வாங்கு வாழ்வார்தம்-பெருத்த
வசதியிலும் தொல்லையடா
ஆழ்கடலும் வற்றிவிடும்-இங்கு
அப்படியோர் தொல்லையடா
கீழப்படியாப் பிள்ளைகளால்-நித்தம்
கிடைப்பதெலாம் தொல்லையடா!
❋❋❋❋❋

மாதர்தம் குலத்திற்கும்-மண்ணில்
மட்டில்லாத் தொல்லையடா
ஆதரவாய் விலங்குஇடும்-பெண்ணின்
அடிமைக்குளும் தொல்லையடா
பேதமிட்டே பிரித்தொதுக்கும்-சாதிப்
பிளவுகளும் தொல்லையடா!
❋❋❋❋❋

தேருதலில் முகம்புதைக்கும்-எந்த
தேசத்திலும் தொல்லையடா
ஆறுதலாய் வாக்களிக்க-அங்கு
அணுகிடினும் தொல்லையடா
பேருக்காய் வாழ்கின்ற-நம்மின்
பிச்சலங்கள் தொல்லையடா!
❋❋❋❋❋

சதியவளின் உழைப்பினிலே-நித்தம்
சமத்தாக வாழ்வார்தம்
புதியதொரு சாதனையின் -அந்தப்
போக்குகளும் தொல்லையடா
கதியற்ற வன்னிஇனக்
கண்ணீரும் தொல்லையடா!

காளையர்தம் கண்வீச்சில்
கற்பழிதல் தொல்லையடா
நாளைவரும் காதலியின்
நர்த்தனமும் தொல்லையடா-இங்கு
வேளைக்கோர் நிறம்மாறும்
விலையுயர்வும் தொல்லையடா!
❋❋❋❋❋



கவிஞர் ஏ.ஆர். நாகூர், ஒருமலை.



# நான் கிழவன்; நீ பாலகன்

-ரேன் கீலோ-

(சென்றவாரத் தொடர்ச்சி...)

முடிவு என்னவாக இருக்கும் என்று எல்லா யானை களுக்கும் தெரிந்துதான் இருந்தது.

சண்டை ஆரம்பமாயிற்று. சிறிது நேரம் வரை போட்டி வெற்றி-தோல்வியற்ற நிலையில் சம தரத்தில் இருந் தது. ஆனால், கிழட்டு யானை விரைவிலேயே களைத் துப் போய்விட்டது. வெற்றிபெற்ற தர்க்வாடா அத னைக் காயப்படுத்தியதன் காரணமாக அது தள்ளாடிய வாறு சென்று விழுந்தது. முடிவு தீர்மானிக்கப் பட்டாயிற்று. இதனைக் கண்டு தாய் யானை யின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. யானைக்குட்டிக்கும் கவலை. ஆனால், யானை களின் உலகத்தில் இதுதான் சட்டம். ஒவ்வொரு வருட மும் கூட்டத்திலுள்ள மிகப் பலம் வாய்ந்த யானையோடு தலைமை யானை மோதி, தன்னுடைய தலைமைத்து வத்தை நிரூபிக்க வேண்டும்.

அதன் பிறகு யானைகள் கோகுலியில் இருந்து வெளியேறின. இப்போது தர்க்வாடாதான் அவற்றின் புதிய அரசன். தனது கூட்டத்தின் பாதுகாப்பு அதனி டமே இருந்தது.

வேட்டைக்காரர்கள் சிலர் கோகுலியில் இருந்தே யானைகளைப் பின்தொடரலாயினர். கிழட்டு யானை இறந்துவிட்டது அவர்களுக்குத் தெரியும். போட்டியில் வென்ற தர்க்வாடா பல முறை கிராமங்களை நாசப் படுத்தியிருக்கிறது. வயல்களைச் சேதப்படுத்தியிருக் கிறது. இதனால், கிராமத்தவர்கள் கோபத்தோடு இருந் தனர். யானைகள் ஓர் அடர்ந்த காட்டினூடாகச் சென்று கொண்டிருந்தபோது, அதன் நாற்புறங்களிலும் தீ மூட் டப்பட்டது. அவை அலறியபடியும் பிளிறியபடியும் உயிர் பிழைப்பதற்காக அங்குமிங்கும் ஓடலாயின. ஆனால், எங்கு தான் தப்பிச் சென்றுவிட முடியும்? எல் லாப் புறங்களிலும் தீ விரைவாகப் பரவிக் கொண்டு வந்தது. குட்டி யானை பெருந் திகிலடைந்தது.

தப்பிக்கொள்வதற்கான உபாயம் எதுவும் இல்லாத நிலையில் தர்க்வாடா வேட்டைக்காரர்கள் மீது தாக்கு தல் நடத்துமாறு சைகை செய்தது. யானைக் கூட்டம் அவர்கள் மீது பாய்ந்தது. வேட்டைக்காரர்களில் அநேகர் கொல்லப்பட்டனர். ஏனையோர் உயிர் தப்பி ஓடலாயி னர். தர்க்வாடா சிறிய ஸாமாவைத் தன்னுடைய துதிக் கையால் சுருட்டிக் கொண்டு, எரியும் காட்டிலிருந்து விரைவாக வெளியே வந்தது. தர்க்வாடா அவ்வளவு கொடியதல்ல என்று முதலாவது முறையாக இப்போது தான் யானைக்குட்டிக்குத் தெரியவந்தது.

இப்போது அவை, மனிதர்கள் ஒருபோதும் செல் லாத காட்டுப் பகுதியைச் சென்றடைந்திருந்தன. ஆனால், வேட்டைக்காரர்கள் எங்கும் வரலாம் என்ப தைத் தர்க்வாடா அறிந்திருந்தது. எனவே, கவனமாக இருக்க வேண்டியிருந்தது.

வேட்டைக்காரர்கள் மீண்டும் யானைகளைப் பின் தொடரத் தொடங்கினர். இம்முறை வெள்ளைக்காரனான மார்லோ அவர்களுடைய தலைவனாக இருந்தார். ஒரு நாள் அவர் யானைக்குட்டி யின் தாயான மாரானாவைப் பிடித்து விட் டார். மிகவும் கஷ்டத்தோடுதான் அதற்குத் தப்பிவர முடிந்தது. இப்போது தர்க்வாடா அந்தக் காட்டை கைவிடும்படி கட்டளையிட் டது. ஆனால், வேட்டைக் காரர்கள் ஒரே யடியாக அவற்றைப் பின் தொடரலாயினர். மார்லோ புகழ்பெற்ற ஒரு வேட் டைக்காரர். அவர் யானைக் கூட்டத்திலிருந்து இரண் டொரு யானைகளை உயிரோடு பிடிக்கத் தீர்மானித்தார்.


இம்முறை தர்க்வாடா வேட்டைக்காரன் ஒருவனின் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்தது. இரண்டு யானைகள் அதற்குப் பக்கபலமாக இருந்தன. காட்டின் மற்றொரு பகுதிக்குக் கூட்டிச் சென்றன, குட்டி யானை கலக்க முற்று ஓடும்போது வேட்டைக்காரர்கள் கண்டு விட்ட னர். சிறிது நேரத்துக்குப் பிறகு அது பிடிக்கப் பட்டது. அதனைப் பிடித்த மார்லோ மிகவும் மகிழ்ச்சிய டைந்தார்.

மார்லோ ஏனைய காட்டு மிருகங்கள் மீதும் இரக்க முடையவராக இருந்தார். காட்டிலே தன்னுடைய வீட் டுக்குப் பக்கத்தில் விசாலமானதொரு அடைப்பு வேலியை அமைத்து வைத்திருந்தார். மிருகங்களைப் பிடித்து அங்கேயே வைத்துக் கொண்டிருந்தார்.

தான் பிடிபட்டதையிட்டு ஸாமா பெரிதும் கவலை கொண்டது. தாயைப் பிரிந்த துயரமும் அதற்கு இருக் கத்தான் செய்தது. ஒவோரோ சிம்பஞ்சியை அங்கே கண்டபோது அதனுடைய துயரம் ஓரளவு குறைந்தது. ஒவோரோவும் மார்லோவிடமே வாழ்ந்து வந்தது. மெல்ல மெல்ல இரு வருடங்கள் கழிந்தன.

ஒரு நாள் மார்லோ தனியாகக் காட்டுக்குள் போனார். ஆனால், நீண்ட நேரமாகியும் திரும்பிவரவில்லை. அத னால், ஒவோரோ அவரைத் தேடிச்சென்றது. மார்லோ ஓர் இடத்தில் சுய நினைவற்று விழுந்து கிடப்பதைக் கண்டது. அவருடைய உடலில் எறும்புகள் ஊர்ந்து கொண்டிருந்தன. உடனே ஒவோரோ மிருகங்களை அழைத்தது. அப்போது ஸாமா குட்டியும் வந்தது. அவை மார்லோவைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு எடுத்து வந்தன.

(அடுத்த இதழில் முடிவு)



# 1 தவளையும் புலியும்

புத்தாக்கம் : கே. கான்




# இளஞ்சுடர்

தயாரிப்பு : தினா

## கோழிமுட்டை குப்புசாமி



கங்கா ருவை என்ன வென்று
கேள்வி வந்தது
கங்கை என்னும் பெரிய ஆறு
என்று எழுதினேன்!

செங்கோ ணத்தை விளக்கு என்று
கேள்வி வந்தது
கும்ப கோணப் பக்கம் கிராமம்
என்று எழுதினேன்!

பாஞ்சா லியை யாரென் றொரு
கேள்வி வந்தது
பஞ்சாலை தான் அதுவென்று நான்
பதிலை எழுதினேன்

ஒட்டைச் சிவிங்கி என்ன என்று
கேள்வி வந்தது
தொட்டால் சுருங்கிச் செடிகள் என்று
பதிலை எழுதினேன்

நாள் கணக்கு ஆள் கணக்கு
கேள்வி வந்தது
பாழுங் கணக்கு விடை எனக்கு
தெரியலை அப்பா...


(இன்னும் சொல்லுவான்...)

'மிகச்சிறந்த புத்தகங்களே மிகச் சிறந்த நண்பர்கள்' என்று செஸ்டர் பீல்ட் குறிப்பிட்டார்.

இணையத் தளத்தில் இல்லாததா புத்தகங்களில் இருக்கப்போகிறது? என்று கேட்டுவிடாதீர்கள்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் புத்தகக் கண்காட்சிகள் நடைபெறும் போது எள் போட்டாலும், நிலத்தில் விழாத சன நெரிசலைக் கண்டு மூக்கின் மேல் விரலை வைக்கிறோம்.

இது கணினி-யுகம் என்கிறோம்; ஆனால், புத்தகங்களின் மவுசு குறைவதைக் காணோம்.



மனித இனத்தின் வரலாற்றைச் சுவைமிகுந்த கதைகளாகக் கூறும் ராகுல சாங்கிருத்தியாயனின் 'வால்காவில் இருந்து கங்கை வரை' என்ற

''புத்தகம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுவை; இதன் சுவையே தனி'' என்று சொன்னேன்.

புத்தகங்களைப் பற்றிய பாமர மனப்பாங்கு இன்னும் அவனைவிட்டுப் போகவில்லை என்று நினைத்து நான் பேசாமல் இருந்துவிட்டேன்.

தகவல்களைப் பெற நாம் பயன்படுத்தும் கணினி காலப்போக்கில் மனித அவயவங்களையே செயலிழக்க வைக்கிற கொடுமையை நாம் இன்று கண்ணால் காண்கின்றோமே. புத்தகம் அப்படியானதல்ல...

அது பிரயாணத்தின் போது தோழன், தனிமைக்குத் துணை.

படுக்கையறையில் தலையணைக்கருகில் இருக்கும் நண்பன்.

அறிவுறுத்தும் ஆசான்.

பாதுகாத்து வைக்கக்கூடிய பொக்கிஷம்.

அதுமட்டுமல்ல, கருத்துப் புரட்சிகளுக்கும் அரசியற் புரட்சிகளுக்கும் வித்திட்ட பெருமைக்கு உரியதும் புத்தகங்கள்தான்.

''கணினியில் ஓடும் டிஜிட்டல் வாசகங்கள் ஏற்படுத்தமுடியாத நெருக்கத்தை, புத்தகத்தின் அச்சுகோர்த்த வார்த்தைகள் நமக்குள்ளே ஏற்படுத்துகின்றன. தாய்மடிபோல கதகதப்பை உணரவைக்கின்றன.

# புத்தகங்களா? கணினியா?

புகழ்பெற்ற நூலைச் சிறுவயதில் படித்து அதிசயித்து இருக்கிறேன். புத்தகக் கடையொன்றில் அந்த நூல் இருப்பதைக் கண்டு உடனே வாங்கிக் கொண்டேன்.

என்னோடு இருந்த நண்பர், ''வீட்டிலே உன்னிடம் இருக்கின்ற புத்தகங்கள் போதாதா? கொம்பியூட்டர் வேறு இருக்கிறதே'' என்று கேட்டான்.



மெல்லிய மனித சக்தியும் இயல்பான ஆர்வமும் இருந்தால்போதும். படித்து முடித்தபிறகு எப்படிப்பட்ட சக்தி வந்து நம்மை ஆட்கொள்கிறது? நேரத்தைத் தவிர வேறெதையும் நம்மிடமிருந்து எடுத்துக் கொள்ளாத புத்தகங்கள், எடுத்துக் கொள்வதைவிட பல மடங்காகத் திருப்பித் தருகின்றன'' என்று ஒருவர் குறிப்பிட்டார்.

எவ்வளவு கருத்தார்ந்த வார்த்தைகள் அவை!

புத்தகங்கள் அறிவுகொழுத்தும் தீபங்கள். அவை மனதில் வெளிச்சத்தைப் பாய்ச்சி, வாழ்க்கையின் வழுக்கலில் ஊன்றுகோலாகத் துணைபுரியும். வழிகாட்டிகள்.

'ஆளும் வளரணும் அறிவும் வளரணும், அதுதான்டா வளர்ச்சி' என்று அடித்துச் சொன்ன பட்டுக்கோட்டையாரின் பாடல் வரிகளை நெஞ்சில் ஏற்றுவோம்.

நாட்டுக்கு நூல் நிலையங்கள் எவ்வளவு அவசியமோ அதேபோன்று வீடுகள் தோறும் நூலகங்களை அமைத்து அறிவுத் தீபங்களை ஏற்றிவைக்கும் சிந்தனையைச் சிந்தையில் கொள்ளுவோம்!

-அபூ முபஸ்ஸிர்-

## புத்தக மொழிகள்

- காலம் என்ற அகன்ற கடலில் பயணம் செய்பவையே புத்தகங்கள் என்னும் கப்பல்கள். - பேகன்
- புத்தகங்கள் இளமையில் வழிகாட்டிகள்; முதுமையில் இனிய பொழுதுபோக்குகள். - ஜெர்மி காலியர்
- புத்தகங்கள் இல்லாத அறை ஆன்மா இல்லாத உடல். - சிஸரோ
- நாம் ரசித்துப் படிக்காத புத்தகங்களால் நமக்கு நல்ல பயன் கிடைப்பதில்லை. - ஜோன் ஜப்போக்
- புத்தகங்களை இரு வகைகளாகப் பிரிக்கலாம்: ஒன்று அந்த நேரத்துக்கு மட்டும் உதவும் புத்தகங்கள்; மற்றது ஆயுள் காலத்துக்கும் உதவும் புத்தகங்கள். -ஜோன் ரஸ்கின்



## நொடிப்பொழுது

1) சிப்பாய் இறப்பதேன்? சாம்பார் மணப்பதேன்?
2) நாய் ஓடுவதேன்? வாய் இனிப்பதேன்?
3) முரசம் கேட்பதேன்? குளவிக்கு அஞ்சுவதேன்? மழை வெள்ளம் போடுவதேன்?
4) மாங்காய் கல்லெறி வாங்குவதேன்? தங்கை சோம்பேறி ஆவதேன்?
5) குழந்தைகள் கொஞ்சுவதெப்படி? கள்வர்கள் திருடுவதெப்படி?




# கதவை மட்டுமா சாத்தினாள்?

''என்ன ஹபீப், இப்படி யோசித்துக்கொண்டு? கூட வரும் என்னைக்கூடக் கண்டுகொள்ளாமல்!'' என்றபடி தன் நண்பனின் தோளில் கையைப் போடுகிறான் அஜ்மல்.

ஆனால், ஹபீபோ தன்பாட்டில் நடந்துகொண்டிருந்தான்.

''ஹூம்... இன்றைக்கு மூட் அவுட்டா?'' என்றவனாய் மேலும் ஹபீபை உற்று உற்றுப் பார்க்கிறான்.

''அப்படியொன்றும் இல்ல அஜ்மல். இன்று விஞ்ஞான பாடத்தில் டீச்சர் செய்து காட்டிய பரிசோதனையை நானும் செய்து பார்க்கவேண்டும் போலிருக்குது'' என்றான் ஹபீப்.

''ஆமான்டா, சுடச்சுடச் செய்தால்தான் மனதில் பதியுமாம்!'' என்றான் அஜ்மல் முடிந்தால் நானும் உன் வீட்டுக்கு வரப்பார்க்கிறன் என்றவன் தன் வீடு அண்மிக்கவே விடைபெற்றுச் செல்கின்றான்.

***

''அல்லாஹ்வே! வீட்டுக்கு வார நேரம்! பஸ் வரப் போகுது. டியூசன் கிளாஸுக்குப் போகவேண்டுமே!'' என்கிறாள் பொறுமையிழந்தவளாய் ஹபீபின் தாயார்.

''ஊ...ம் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டிருந்தது போதும், கையக் காலக் கழுவிக்கொண்டு தின்டிட்டு ரெடியாகுங்க'' என்று கூறியபடி சமயலறைப்பக்கம் விரைகிறாள்.

ஹபீபுக்கு தூக்கிவாரிப்போட்டது. 'எவ்வளவு ஆசையோடு விஞ்ஞானப் பரிசோதனை செய்ய இருந்தன்' எனப் பெருமூச்செறிந்தவனாய் சாய்வு நாற்காலியில் சாய்ந்துவிட்டான். அவன் மனமோ அன்று செய்த பரிசோதனையைச் சுற்றிச் சுழன்றது.

சாப்பாட்டை மேசை மேல் எடுத்து வைத்தவள் வாசல் பக்கம் வந்து பார்த்தபோது மகன் உடைகளை மாற்றாமல் அப்படியே இருக்கக்கண்டு வெகுண்டெழுந்தாள்.



''ஏன் இன்னும் டியூசனுக்குப் போக ரெடியாகல்ல?'' என்று கோபத்தோடு மகனை நெருங்குகிறாள்.

''எனக்கு இன்றைக்கு வீட்டு வேலை நிறைய இருக்குது செய்ய'' என்று ஹபீப் சொன்னான்.

''இந்தக் கூத்து இனியும் சரிவராது: நீ மட்டுமா வீட்டு வேலை செய்கிற? அந்தா உன் கூட்டாளிகள் பஸ்ஸுக்கு ஓடுறாங்க. போன மாதமும் இப்படித்தான் வீட்டு வேலை அது இது என்று வகுப்பைக் கட்பண்ணினாய். இப்படிப் போனால் கிளாஸுக்கே எடுக்க மாட்டாங்க'' என்கிறாள் கோபாவேசமாக.

ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக்கொண்ட ஹபீப், ''உம்மா, விஞ்ஞான பாடம் ஸ்கூல படிக்கிறதே போதும். பிரக்டிகல் செய்யத்தான் நேரமில்ல'' என்கிறான்.

''மத்தப் பிள்ளைகளென்றால் சோதனைக்கு முதல்ல சிலபஸ்ஸ முடிக்க வேண்டுமென்று காற்றாய்ப் பறக்கிறாங்க. டியூசனுக்கு அனுப்ப வசதியில்லாதவங்க ஏங்கிக்கிட்டு இருக்கிறாங்க. உனக்காக நாம் எவ்வளவும் செலவழிக்கத் தயாராக இருக்கோம். இவர் என்னவென்றால் பிரக்டிக்கல் செய்யவேண்டுமாம் பிரக்டிக்கல்! எல்லாத்தையும் விட்டுட்டு ரெடியாகு. இந்தா காசு. மறுபேச்சில்லாமல் பஸ்ஸுக்கு ஓடு'' என்றவளாய் ஹபீபை வெளியே தள்ளி, படார் என கதவைச் சாத்திவிடுகிறாள்.

-ஸீனத் ரஹ்மா-

## தகவல் களஞ்சியம்

- இராஜநாகம் சராசரியாக 3.7 மீட்டர் வரை வளரும்.
- கிவி என்பது பறவையாக இருந்தாலும் அதனால் பறக்க முடியாது.
- சிம்பன்சிக் குரங்கு 40-60 ஆண்டுகள் வரை உயிர் வாழும்.
- மராட்டிய சாம்ராஜ்யத்தை சிவாஜி தோற்றுவித்த ஆண்டு 1674.
- பராசக்தி என்பது சிவாஜி நடித்த முதல் திரைப்படம்.
- புறாக்களில் ஆண்-பெண் இரண்டுமே முட்டைகளை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும்.
- உலகின் மொத்த நீர்வளத்தில் 97% கடல்நீர், 2% உறைபனி, 1% நீரை மட்டுமே மக்கள் பயன்படுத்துகின்றார்கள். பயன்படுத்தக்கூடிய நீரில் 70% விவசாயத்துக்கும், 22% தொழில்துறைக்கும், 8% வீட்டுத் தேவைக்கும் செலவாகிறது. எனினும் உலகின் 40 வரையான நாடுகளில் வசிப்போர் ... ஒரு நாளைக்கு 30 லீட்டர் தண் ... கூடக் கி ... தில்லை.

-ஸ்ரீமாரன்-

# முல்லா

கொழுத்த மனிதன் ஒருவன் கழுதையில் ஏறி எங்கோ சென்றுகொண்டிருந்தான்.

முல்லா நஸ்ருத்தீன் அவனைப் பார்த்து, ''எங்கே போகிறீர்கள்? நீங்கள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தால் கழுதை மீது காண்டாமிருகம் இருப்பதுபோல் தோன்றுகிறது'' என்று சொன்னான்.

அந்த மனிதனுக்குக் கோபம் வந்துவிட்டது. ''முல்லா, நான் கழுதை மீது உட்கார்ந்திருப்பது காண்டாமிருகம் போல் இருக்கிறது என்று சொன்னதற்கு நன்றி. ஆனால், நீங்கள் இந்தக் கழுதை மீது ஏறி அமர்ந்துகொண்டால், ஒரு கழுதை இன்னொரு கழுதை மீது இருப்பதுபோல் தான் தோன்றும்'' என்றான்.

இதனைக் கேட்ட முல்லா நஸ்ருத்தீன் ''நான் வேடிக்கையாகச் சொன்னேன்'' என்றான்.

''ஆனால், நான் வேடிக்கைக்குச் சொல்லவில்லை'' என்றான் கொழுத்த மனிதன். ★




# புத்தாண்டு பலன்கள்

(மிதுனம்-சென்றவாரத் தொடர்ச்சி...)

சரியான திட்டம் வகுக்காமலிருப்பவர்களுக்குத் தடுமாற்றம் ஏற்படத்தான் செய்யும். இரண்டு, மூன்று வருடமாக உள்ளது தான் இந்தத் தொல்லை. எதையும் எதிர்கொள்ளும் நெஞ்சுறுதி வேண்டும்.

ஏதோ பெரும் துன்பம் சூழ்ந்தது போன்ற நிலைமைதான். பணியைக் கவனியுங்கள். சிக்கலான காரியத்தில் தலையிட வேண்டாம். போராட்டம் போன்றவற்றில் தலைமை தாங்கவேண்டாம். அரசியல் பின்னணி உள்ளவர்கள் அதிகம் பாதிக்கப்படலாம். குடும்பத்தில் ஓயாத புயல் வீசிய வண்ணம் இருக்கும். வீடு-நிலம்-வாகனம் என்று வாங்கும்போது, கையிலிருப்பதைக் கொண்டு வாங்கவும். கடன் வாங்கவேண்டாம். பயணங்களின்போது கவனம் வேண்டும். விபத்து போன்றவை உள்ளன. பொருளாதார நிலையில் தவிப்பவர்களுக்கு குடும்ப நிலை கெடுதலும்-சீர் உபாதையும் என்ற பாதிப்பு ஏற்படும். கண்ட 4 ஆம் இட சனி சிறைப்பட்ட வாழ்க்கை என்பார்கள். சம்பந்தமின்றி பொலிஸ் வழக்கும் கூட சிலரைச் சீண்டிப் பார்க்கலாம். ஆகவே, கிரிமினல் நடவடிக்கை வேண்டாம். மது- மாது-சூது என்னும் பொல்லாத பழக்கத்தை விட்டு விடுவது நல்லது.

நிதானம்-எளிமை-அடிமை போன்ற நிலை உங்களைக் காப்பாற்றும். பொல்லாத உங்கள் ராதியில் திருவாதிரை நட்சத்திரப் பெண்களுக்குத்தான் துன்பத்தின் நிலை அதிகம். காதல் வேண்டாம். வேலைக்குப் போகும் உங்கள் நிலையில் மாசு வராது பார்த்துக்கொள்ள வேண்டும். காலத்தின் கட்டாயம் துன்பம் என்பதால், நிதானப்போக்கு வேண்டும். இளம் வயதுக்காரர்களுக்கு பிடிவாதம்-தன்னிச்சையான போக்கு-காதல் போன்றவையும் வேண்டாம். ஜாதகப்படி செவ்வாய் தோஷம் இருந்தால் இது நடக்கவும் கூடும். 40 வயதைக் கடந்தவர்களுக்கு நோயின் பாதிப்பும் உண்டு.

கடுமையாக உழைத்தால் வெற்றி உண்டு. மாணவர்களுக்கும் படிப்பைப் பாதியில் விடுவதற்கும் வாய்ப்புகள் அதிகம் உண்டு. தேவை இல்லாதவற்றில் தலையிட வேண்டாம். உயர்கல்விக்குப் போராட வேண்டும். பொதுவில் நிதானமும், சிந்தனையும், நல்ல ஒழுக்கமும் உங்களைக் காக்கும்.

அதிர்ஷ்ட எண் : 5
அதிர்ஷ்ட திகதி : 5, 9, 14, 18, 23, 27
அதிர்ஷ்ட மாதம் : மே, செப்டெம்பர்.
அதிர்ஷ்ட கிழமை : புதன்
அதிர்ஷ்ட நிறம் : மஞ்சள், சாம்பல் மற்றும் லேசான நிறங்கள்
அதிர்ஷ்ட திசை : மேற்கு



## கடகம்

நட்சத்திரங்கள் : புனர்பூசம் (4 ஆம் பாதம்), பூசம், ஆயில்யம்.

எவ்வளவுதான் சுக போகங்கள் இவ்வுலகில் இருந்தாலும் அவ்வளவையும் அனுபவிக்கும் யோகங்கள் கொண்டவர்கள். நல்ல பண்பும்-அழகும்-ஒழுக்கமும் உள்ளவர்கள். நயமான பேச்சும்-நன்னெறியும் உள்ளவர்கள். யாரையும் விரோதியாக்கும் செய்கை இல்லாதவர்கள். நண்பர்கள் புடைசூழ நடைபோடக்கூடியவர்கள். தியாக மனப்பான்மை கொண்டவர்கள். உலகில் வணங்கும் தெய்வங்களில் பல கடவுள்கள் கூட இந்த இராசியில் பிறந்தவர்கள் என்றால், கடகம் தெய்வீக ராசி எனலாம்.

**புத்தாண்டுப் பலன்கள் :**


கடக ராசிக்காரர்களுக்கு இந்தப் புத்தாண்டின் பலனைப் பார்க்கையில் நற்பலன்கள் உண்டு எனலாம். ஆயினும் கூட வியாழன் 8 ஆம் இடத்தில் இருப்பதால் சில நற்பலன்கள் உங்கள் அசட்டையால் கைநழுவிப் போகக்கூடும். நிதானித்துச் செயல்பட்டால் 3 நிமிட சனியின் சுபப் பலன்கள் உண்டாகக்கூடும். ஆயினும்கூட உங்கள் சுய ஜாதகத்தில் தற்போது அதிர்ஷ்டத்தின் திறவுகோல் இருக்கவேண்டும். காற்று எந்தத் திசையில் அசைந்தாலும், பயன்படுத்திக்கொள்ளும் அறிவுத்திறன் போலத்தான் ஒவ்வொருவருக்கும் நடைமுறையிலிருக்கும் அதிர்ஷ்ட மகா திசையாகும். யோக திசைகள் நடப்பவர்களுக்கு நற்பலன்கள் உண்டாகும். ஆயினும் எந்த ஒரு செயலும் உங்களுக்கு வெற்றி தரக்கூடும். உடல் ஆரோக்கியம் தெளிவாக இருக்கும். விஷ வியாதிகள் என்றும் வராது. குடும்பநிலை சற்று தூக்காக வரும். மனைவியின் உடல் ஆரோக்கியம் மட்டும் பிற்போக்காக இருக்கலாம். பிள்ளைகளின் செயல்பாடு ஓரளவுக்கு நன்றாக வரும்.

செய்தொழிலில் ஏற்றமாக வர கொஞ்சம் கடுமையாக உழைக்கவேண்டும். வாழ்க்கை சற்றுப் போராட்டம் போன்று தோன்றலாம். 8 ஆம் இடத்து வியாழன் எதையும் துரிதமாக நடக்க விடமாட்டார். இருப்பினும் கூட உழைப்பை நம்ப வேண்டும். சரியான வெற்றிக்கு ஜூன் மாதம் வரை ஆகலாம். புதிய தொழில்களை ஜூன் மாதத்துக்குப் பின் தொடக்கலாம். கூட்டுத் தொழில் இவ்வருடம் வேண்டாம். ஏற்கனவே கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு, பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள இது நல்ல காலம்தான். கோர்ட் வழக்கு சிலருக்கு உண்டாகலாம். வம்பு தும்பான பிரச்சினைகள் தலை தூக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். என்னதான் இருந்தாலும் சிலருக்கு மட்டும் புதிய வீடு, வாகனம் வாங்க வாய்ப்பு உண்டாகும். பயணங்களால் லாபம் உண்டாகும். ஏஜென்ஸி-கமிசன் போன்றவை ஏற்றமாக இருக்கும், சுற்றுலா சென்று வரலாம். வீட்டில் குதூகலும் நிரம்பி இருக்கும். மனம் மட்டும் பீதியில் வாடும். தெட்சிணாமூர்த்தியை வணங்கி வரவும். இந்த ராசிக்காரர்களுக்கு ஸ்ரீ திரிகூட யந்திரம் எழுதி வைத்துக்கொள்வது நலம். திடீர் வெற்றியையும்-சுக சரீரத்தையும் தரும். கொஞ்சம் தெளிவும், சில பிரச்சினையுடனும் காலம் கடக்கும்.

உத்தியோகஸ்தர்களுக்கு இடம் விட்டு இடம் மாறுதல்-பதவி இறக்கம்-பணியில் கஷ்டம் உண்டாகலாம். மறைமுக எதிர்ப்பால் மரியாதை போய்விடும். பொதுநலப் பணியாளர்கள் விரட்டப்படுவார்கள். ஜூன் மாதத்துக்குப் பின் சில நல்ல மாறுதல்கள் வரலாம். எதற்கும் தயக்கம் வேண்டும். கைச்சுத்தம் வாய்மையைக் காப்பாற்றும். அலைச்சலுடன் அற்புதமும் நடக்கலாம். வீடு-வாகனம்-நிலம் போன்றவையும் சிலருக்கு அதிர்ஷ்டம் உண்டாக்கும். பெண்களுக்கு, தாமதமான திருமண பாக்கியம் கைகூடும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலையும் கிடைக்கும். காலம் விரைந்து நற்பலனைத் தரும். வசதியும் வாய்ப்பும் உள்ள நல்ல கணவர் அமைவார். இந்த ராசிப் பெண்கள் செவ்வாய் தோஷ பரிகாரம் செய்வது நல்லது. எப்படியும் கடகம் ராசிக்கு, இவ்வகைத் தோஷம் இயற்கையாகவே உண்டாகிவிடும். உங்கள் சுய ஜாதகப்படி செவ்வாய் தணிந்து இருந்தால் தோஷம் இல்லை.

மாணவர்களுக்கு உயர்கல்வியும் தகுந்த வேலை வாய்ப்பும் உண்டாகும். கவலைகள் கிடக்கட்டும் மறந்துவிடு. காரியம் நடக்கட்டும் துணிந்துவிடு!

அதிர்ஷ்ட எண் : 2
அதிர்ஷ்ட திகதி : 6, 7, 15
அதிர்ஷ்ட மாதம் : பெப்ரவரி, ஜூலை, நவம்பர்.
அதிர்ஷ்ட கிழமை : திங்கள்
அதிர்ஷ்ட நிறம் : லேசான பச்சை வெண்மை, லேசான மஞ்சள்
அதிர்ஷ்ட திசை : வடக்கு



## சிம்மம்

நட்சத்திரங்கள் : மகம், பூரம், உத்திரம் (1 ஆம் பாதம்)

சிம்ம ராசி என்றால் சும்மாவா! நெஞ்சுறுதி மிக்கவர்கள். எதற்காகவும் பின்வாங்காதவர்கள். விடாப்பிடியான செயல் தீரம் உள்ளவர்கள். உங்களுக்குத் தேவை என்றால் அதைப்பெற்றேதீருவீர்கள். எத்தனை முறை வேண்டுமானாலும் மோதிப்பார்க்கும் இயல்பும் துணிச்சலும் உண்டு. சில நேரம் இந்தத் துணிச்சல் உங்களுக்கு, வெற்றியைத் தரும். சிலநேரம் இதுவே உங்களுக்கு மிகக்கடுமையான தோல்வியைத் தரும். ஆனால், எதுவானாலும், அதை ஏற்றுக்கொள்ளும் துணிவும், மனமும் உள்ளவர்கள். ராசியின் அதிபர் சூரியன் அல்லவா! அவர் நவநாயகர்களின் முதல்வர் என்பதாலும், இறைவன் கூட சூரியனின் அவதாரமாகவும் உள்ளார் என்பதாலும், இந்தப் பூமிக்கு அவரே விடியலாகவும் இருப்பதால் பண்பும்-பக்குவமும்-மன உறுதியும் உள்ளவராக, எதிலும் முழு மனிதராக-முதல் மனிதராகவும் விளங்குகிறீர்கள். நிலையான சில வெற்றிகள் வாழ்க்கையில் உண்டாகும் என்றே எண்ணுகிறேன். ஆயினும் உங்கள் சுய ஜாதகப்படி நல்லவிதமான திசாபுத்திகள் நடைமுறையிலிருந்தால் கனிவான வெற்றியைப் பெறலாம். திசாபுத்தியின் நடைமுறை சரியில்லை என்றால் பலன்களும் சுமாராகத் தான் இருக்கும்.

**புத்தாண்டு பலன்கள் :**

பொதுவாக மார்ச் மாதம் வரை நிலைமை நன்றாக இருக்கும். பின்னர் ஒரு புயல் காற்று வீசக்கூடும். இந்தக் காலகட்டத்தில்தான் எச்சரிக்கை வேண்டும். நிலையான நற்பலனை மார்ச் மாதத்துக்குள் பக்குவமாய் செய்துகொள்வது நல்லது. செய்தொழிலில் நல்ல பலனை அடையலாம். பணத் தேவைக்கு கடன் எளிதில் கிட்டும். தொழில் ரீதியான வெற்றிகளை எளிதில் பெறலாம். எடுத்த காரியம் நல்லவிதமான பலனைத் தரும் என்பதால், தொழில்-சிறு தொழில், வியாபாரம் போன்றவற்றைத் தொடங்கிக்கொள்ளலாம். இதில் மார்ச் மாதத்துக்குள் கவனம் செலுத்தவேண்டும். யோகமான திசாபுத்தி நடந்தால் ஏற்றமான நற்பலன் உண்டாகும். எந்திரத் தொழில், வியாபாரம், மளிகை மற்றும் உணவுப் பொருட்களின் விற்பனை மாவு-மசாலாப் பொருட்கள் தயாரிப்பு போன்ற தொழிலைத் தொடங்கலாம். மற்றப்படி வேலை வாய்ப்பும் உண்டு. ஜீவனாம்ச முயற்சிகள் கைகூடும். பொதுவில் ஜாதகப் பலமற்றவர்கள் இப்போது நல்ல வேலையைத் தேர்வு செய்துகொள்வதுதான் நல்லது. பொதுவாக சிம்மம் ராசிக்காரர்கள் சில நல்ல பலனை அடையலாம்தான்.

பலமுள்ள காலம்தான். நற்பலன்கள் நடக்கத் தடை இல்லை. பதவி உயர்வையும் வேண்டிய இடத்துக்கான மாறுதல்களையும் பெறலாம். உத்தியோக மேன்மை நல்லபடியாகத்தான் உள்ளது. புனித பயணம்-புதிய வீடு-மனை பாக்கியமும் உண்டாகும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் நல்லபடியாய் இருக்கும். மனைவிக்கும் உடல் சோர்வு ஏற்பட வாய்ப்பு இல்லை. சுபகாரியங்கள் குடும்பத்தில் நடக்கும். குழந்தைகளுக்குக் கல்வி முயற்சிகள்-வேலை வாய்ப்பு- திருமணம் போன்றவை சிறப்பாக நடக்கும். பொதுவாகவே நல்ல காலம் என்பது ஏப்ரல் மாதம் வரை பலமாகவும், பின் குறையவும் கூடும். ஏப்ரல் மாதத்துக்குப் பின் சரியான திட்டங்கள் போட்டுச் செயல்பட வேண்டும். எதிலும் சிக்கிக்கொள்ளும் நிலையைத் தவிர்க்கவேண்டும். இந்த ராசியில் மகம் நட்சத்திரகாரர்களுக்கும், பூரம் நட்சத்திரகாரர்களுக்கும் ஆண்டு முழுவதும் பெரிய தொல்லையைத் தராது. அதிர்ஷ்டம் என்பது அதிர்ஷ்ட திகதியில் உள்ளது என்கிறார்கள். அதன்படி பார்த்தால் நீங்கள் 1, 2, 3, 9 ஆகிய திகதிகளில் பிறந்து இருந்தால் வெற்றி உண்டாகும்.

அதிர்ஷ்ட எண் : 1
அதிர்ஷ்ட திகதி : 2, 11, 28, 29
அதிர்ஷ்ட மாதம் : ஜனவரி, பெப்ரவரி, ஏப்ரல், ஜூன், ஒக்டோபர், நவம்பர்
அதிர்ஷ்ட கிழமை : வெள்ளி
அதிர்ஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு
அதிர்ஷ்ட திசை : கிழக்கு,



## கன்னி

நட்சத்திரங்கள் : உத்திரம் (2, 3, 4 ஆம் பாதம்), அஸ்தம், சித்திரை (1, 2 ஆம் பாதம்)

அழகு நிறைந்த அற்புத ராசி கன்னி, கவர்ச்சிக்கு அடையாளம் எனலாம். அன்பு-பிடிவாதம்-பக்குவம்-ஆன்மீகம் எல்லாம் உண்டு. நல்ல நட்புக்கு அடையாளம். கற்பனை வளம். இயற்கையான எண்ணம் பிரதிபலிப்பு, கூட்டுத்தன்மை என்று எதிலும் ஒரு தனித்தன்மை உண்டு. இனிமையாகவும்-மென்மையாகவும் பேசக்கூடியவர்கள். ஆயினும் திடீரென கொள்கைகளை மாற்றிக்கொள்வதால் சந்தர்ப்பவாதி என்ற கெட்ட பெயரும் உண்டு. கன்னி ராசிக்காரர்கள் அமைதியை விரும்பக்கூடியவர்கள். இவர்கள் இருக்கும் இடமே தெரியாமல் வாழ்பவர்கள். கோரிக்கையில் நாட்டம் உண்டு.

**புத்தாண்டு பலன்கள் :**

உங்கள் ராசியின் இப்புத்தாண்டுப் பலனைப் பார்க்கும்போது சுமாரான பலன்கள் தான் தொடர்கின்றன எனலாம். இருப்பினும், உங்கள் சுய ஜாதகப்படி நல்லவிதமான திசாபுத்தி நடப்பில் இருந்தால் நல்லதுதான் நடக்கும். ஆனால், 2, 6, 7, 8, 12 இல் திசாபுத்தி உடையவர்கள் என்றால் கெடுபலனைத் தரத் தயங்காது.

40 வயதைத் தாண்டியவர்களுக்கு உடல் அசதி-நோய் ஏற்படக்கூடும். உங்கள் ஜாதகப்படி நல்ல திசாபுத்தி நடக்காவிடில் தொல்லையான நோய் ஏற்படக்கூடும். கடுமையான நோய் மற்றும் குடும்பத்திலும் சதா சண்டை-சச்சரவு ஏற்படக்கூடும். மௌனமாக இருக்க வேண்டும். வாயைத் திறந்தாலே தொல்லைதான். சனி நாவிலும் உண்டு. கூட்டுக்குடும்பம் என்றால் பிரிவினைதான். சொத்து பிரிவினை, வீடு விட்டு வீடு மாறுதல், சிலருக்கு ஏதேனும் பிரச்சினையால் ஊரை விட்டு ஓடவேண்டி வரலாம். இளைஞர்களுக்குப் பெண்களால் பிரச்சினை உண்டு. காதல் போன்ற விவகாரத்தில் பொலிஸ் வரை போகலாம். தேவை இல்லாமல் சிக்கலில் மாட்டுவீர்கள். எவ்வகையிலும் பெண் பிரச்சினை உண்டு. ஜாதகப்படி பலனை அறிந்து எச்சரிக்கையோடு நடந்துகொள்ளுங்கள். தகுந்த பரிகாரம் செய்து கொள்வது நல்லது. மறைமுகமான பகை உணர்வு உண்டு. செவ்வாய் தோஷம் உள்ளவர்களுக்கு குடும்பச் சிக்கல், பெண்களால் தொல்லை, திருமணம் கை கூடாது போதல், நண்பர்களால் தொல்லை ஏற்படும். சர்ப்ப தோஷம் உள்ளவர்களுக்கு பிள்ளைகளால் பிரச்சினை, நோய், கடன் தொல்லை, விபத்து போன்றவை ஏற்படலாம். திசாபுத்திபடியான பாதிப்பு உள்ளவர்களுக்கு சகலவிதமான பாதிப்புகளும் உண்டு. நல்ல திசாபுத்தியுடன் நடப்பவர்களுக்கு பெரும் சிக்கல் இல்லை.

ஜீவனாம்சப் பாதிப்புகள் நன்றாகவே தெரியும். சிலருக்கு செய்தொழில் நின்று போகக்கூடும். எதிர்காலம் சூன்யமாகத் தெரியும். கடன் சுமை ஏறிக்கொண்டே இருக்கும். தொழில் போட்டி உங்களுக்குக் கடுமையான பாதிப்பைத் தரும். கலை சம்பந்தமான தொழில் என்றால் மாறுதலுக்கு தான் வாய்ப்பு உள்ளது. கடை-வியாபாரம் போன்றவைகள் சரியான வியாபாரம் இன்றிப் பரிதவிக்கலாம். வாங்கியதைக் கொடுக்க இயலாது. கொடுத்ததை வாங்க முடியாது. வம்பு வழக்கு ஏற்படலாம், பொருள் விரயமும், உடல் சோர்வும் உண்டாகலாம். கூட்டுத்தொழில்-வியாபாரம் என்றால் கோவிந்தாதான். ஆயினும், ஜாதக பலம் உள்ளவர்களுக்கு பெரும் பாதிப்பு இன்றித் தப்பிக்கலாம். கைத்தொழில் செய்பவர்களுக்குக் கவலை இல்லை. அச்சுறுத்தலான தொழிலைக் கைவிடுங்கள். மது-மாது-சூது போன்றவற்றை விட்டு ஒழியுங்கள். இதனால், இப்போது என்ன நடக்கிறது என்று தெரியாமலே உங்களை வஞ்சித்துவிடும். கூடா நட்பும் வேண்டாம். இப்போதெல்லாம் நீங்கள் தனிமை விரும்பியவர்களாக இருப்பதுதான் நல்லது.

உஷாராக இருக்கவேண்டும். அச்சம் இன்றி வாழ்பவர்கள் அச்சத்தை அனுபவிக்கவேண்டி வரலாம். இளமையான கன்னிப்பருவப் பெண்களுக்கு கவனம் தேவை. நடுத்தர வயது உடையவர்களுக்கு நோய் ஏற்படலாம். குடும்பச் சிக்கல், உடல் அசதி என்று சதா தொல்லைதான்.

அட்டகாசத்தைக் கைவிடவும், போராட்டம் போன்றவை உங்கள் கல்வியைத் தொலைத்துவிடும். பொலிஸ் தொல்லை, அடிபடுதல்-அவமானம் போன்றவை ஏற்படலாம். வெளிநாட்டில் வேலை முயற்சி செய்யலாம்.

அதிர்ஷ்ட எண் : 5
அதிர்ஷ்ட திகதி : 5, 9, 14, 18, 23, 27
அதிர்ஷ்ட மாதம் : ஓகஸ்ட், ஜூன்
அதிர்ஷ்ட கிழமை : வெள்ளி
அதிர்ஷ்ட நிறம் : சாம்பல், லேசான நிறம் மஞ்சள் நிறங்கள்
அதிர்ஷ்ட திசை : தெற்கு

(தொடரும்...)

**முள்ளிவாய்க்கால்வரை தாம் பட்ட துன்பங்களையும், அதனுடன் முடிவுறாது தொடர்கின்ற முள்ளுக்கம்பிக் கூண்டுச் சுமைகளையும் மனதில் சுமந்தபடி பல லட்சம் பேர் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு கதைகள் பொதிந்துள்ளன. அதை வெளிக்கொண்டுவர எல்லோராலும் முடிவதில்லை. இதனால் அவர்களது துன்பங்கள் அவர்களுக்குள்ளேயே மீண்டும் உறங்கிப் போகின்றன. இவற்றை வெளிக்கொணர வேண்டும் என்பதற்காக எழுதப்பட்டதுதான் 'முள்ளிவாய்க்காலும் முள்ளுக்கம்பி வேலியும்'. ஈழத் தமிழரின் வரலாற்றில் வேதனைகள், சோகங்கள், மரணங்கள், பிரிவுகள் நிறைந்த வன்னி மக்களின் நெருப்பாற்றுப் பயணம் வரலாற்றுப் பதிவுகளில் கறைபடிந்த அத்தியாயமாகிவிட்டது.**

# முள்ளிவாய்க்காலும் முள்ளுக்கம்பி வேலியும்

1

-டொமினிக்-

யாழ்ப்பாணத்துக்கும் வன்னிக்குமான நுழைவாயிலாக இருந்த முகமாலைப் பகுதியில் 11.08.2006 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற சமரைத் தொடர்ந்து யாழ். - வன்னி உறவை மட்டுமல்ல ஏனைய மாவட்டங்களில் இருந்தும் யாழ்ப்பாணத்துக்கான தரைவழித் தொடர்பும் துண்டிக்கப்பட்டது. இதனால் தற்காலிகமாகக் கிடைத்த போக்குவரத்துச் சுதந்திரமும் தடைப்பட்டுப் போனது.

ஊடகங்களில் எல்லாம் போர்க்கள செய்திகளே தலைப்புச் செய்திகளாகின. மாவிலாற்றில் தொடங்கிய போர் கிழக்கு மாகாணத்தை முழுமையாக இராணுவத்தினரது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. வெற்றி விழாக்களும், கேக் வெட்டி கொண்டாட்டங்களும் உச்சம் பெற்றன.

அவற்றுடன் நின்றுவிடவில்லை. தமிழர்களை பயங்கரவாதப் பிடியிலிருந்து மீட்கும் போர், கொடிய பயங்கரவாதத்தை அழிக்கும் போர், மனிதாபிமானப் போர் என அரசாங்கமும்-அரசபடைகளும் சொல்லிக்கொண்டு வடக்குக்கான போரை மன்னார் சிலாவத்தை பகுதியில் தொடங்கின. சிறுசிறு எதிர்த் தாக்குதல்களை அரசபடையினருக்கு எதிராக நடத்தியபடி விடுதலைப்புலிகள் பின்வாங்கினர். மடுதேவாலயத்தை அரசபடையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்காக கடும் முயற்சிகளை மேற்கொண்டனர். விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல்களைத் தொடுத்த வண்ணம் இருந்ததால் மடுவைச் சுற்றிய பிரதேசங்களுடாக நகர்ந்து. பெருமெடுப்பிலான பரந்துபட்ட நகர்வை மேற்கொண்டு, விடுதலைப்புலிகளின் பலத்தைச் சிதறடித்து பல மாதங்களின் பின்னரே அரசபடைகளால் மடு திருப்பதியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்தது.

அதனைத்தொடர்ந்து பெரியமடு, விடத்தல்தீவு, பன்னமடு, இலுப்பைக்கடவை, வெள்ளங்குளம், துணுக்காய், மல்லாவி என விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களெல்லாம் அரசபடைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. இவையெல்லாம் எல்லோரும் அறிந்த பழைய செய்திகள் தான்.

ஆனால் இவ்வளவு பிரதேசங்களையும் விட்டு (கிழக்கு மகாணம் உட்பட) விடுதலைப்புலிகள் பின்வாங்கிச் சென்றபோதும் 'அரசபடையினர் விடுதலைப்புலிகளின் பொறிக்குள் சிக்குப்படப் போகிறார்கள், பெரும் இழப்பைச் சந்திக்கப்போகிறார்கள், மாரிகாலமும் அகலக்கால் பதிப்பும் படையினருக்கு ஓர் இருண்ட காலமாக அமையப் போகிறது' என விடுதலைப்புலிகளின் கடந்த கால அதிரடி மற்றும் மரபுவழி சமர்களையும். போர்க்கள வரலாறுகளையும் நன்கு அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் கூறிக்கொண்டனர். அவர்கள் மட்டுமல்ல இராணுவ ஆய்வாளர்கள் தொடக்கம் சாதாரண மக்கள் வரைக்கும் பேசப்பட்ட விடயம்தான் அது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் வாழ்ந்த மக்களும் 'மீண்டும் சொந்த ஊருக்குத் திரும்பிப் போவோம்' என்ற நம்பிக்கையுடன் மன்னாரில் இருந்து மாந்தளை, வட்டுவாகல் கடற்கரை வரை அள்ளுண்டு சென்ற வெள்ளம் போல் சென்றனர். அதுவரை அவர்கள் கொடுத்த பெறுமதிகள் அளப்பரியவை-சந்தித்த துன்பங்கள் ஏராளம்.


இருந்தும் அவர்கள் எதிர்பார்த்த சுதந்திரம் கிடைத்ததா? இல்லை. ஏன் பறிபோனது? ஏன் இப்படி நடந்தது ? போரின் பிடியிலிருந்து உயிரைமட்டும் மிச்சமாகக் கொண்டு நடைப்பிணமாகத் தப்பிவந்து முள்ளுக்கம்பிக் கூட்டுக்குள் இருந்தவாறே தமக்கு நடந்த-நடக்கின்ற சம்பவங்களை ஒவ்வொருவரும் மீட்டுப் பார்க்கிறார்கள்.

அந்த வகையில் நானும் இன்றுவரையான அந்தச் சம்பவங்களை மீட்டுப் பார்க்கிறேன்.

மன்னாரிலிருந்து இராணுவத்தின் பிடியில் அகப்படாமல் கிளிநொச்சிவரை மக்கள் வரவு கூடிக்கொண்டே சென்றது.

15.09.2008 அன்று முறிகண்டிக்கு மேற்குப்புறமாகத் திடீரென ஏற்பட்ட சமரைத் தொடர்ந்து கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்களாலும், நகரை அண்மித்த பகுதிகளில் வீழ்ந்து வெடித்த எறிகணைகளாலும் கிளிநொச்சி நகர் அதிரத்தொடங்கியது. அன்றிலிருந்து கிளிநொச்சி நகரின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்தன. பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்தார்கள். வங்கிகள், பாடசாலைகள், அரச, தனியார் நிறுவனங்கள் தமது உடைமைகளை ஏற்றிக்கொண்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்தன. மக்களும் தம்மால் இயன்றளவு உடைமைகளை வாக னங்களில் சுமந்து சென்றார்கள். பொது வைத்தியசாலை இயங்கியபோதும் அங்கு செல்ல மக்கள் அச்சமடைந்தனர். எறிகணை மற்றும் விமானக்குண்டு வீச்சு சிதறல்கள் பரவலாக எல்லா இடங்களையும் தாக்கிக் கொண்டு இருந்தன. அரச-அரசுசாரா நிறுவனங்கள் குறிப்பாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வாகனங்களை ஆபத்துமிக்க கிராமங்களுக்கு அனுப்பி அவர்களையும் ஓரளவு உடைமைகளையும் ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. கிளிநொச்சி நகரம் தனது அழகை கொஞ்சம் கொஞ்சமாக இழக்க ஆரம்பித்தது. மக்கள் தங்களது அசையும் சொத்துக்களுடன் வட்டக்கச்சி, இராமநாதபுரம், முரசுமோட்டை, புளியம்பொக்கனை, தர்மபுரம், விசுவமடு என இடம் பெயர்ந்தனர்.

பல நாட்கள் இடம் பெற்ற உக்கிர மோதல்களைத் தொடர்ந்து 2009 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் கிளிநொச்சி நகரமும் அரசபடைகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.



கிளிநொச்சி, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு பிரதேசங்க்ள் அரசபடையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தபோதும் குறிப்பிட்ட சில கிராமங்களுக்குள் முடக்கப்பட்ட சுமார் 400,000 வரையான மக்கள் மத்தியில் வைத்தியசேவை, போக்குவரவு, கல்வி, வங்கி, மீன்பிடி, விவசாயம், கூட்டுறவு, சந்தை, சில்லறை வியா பாரம் உட்பட சகல செயற்பாடுகளும் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. மக்கள் தங்களை புதியதொரு வாழ்க் கைக்குள் ஈடுபடுத்தத் தொடங்கினர்.

இக்காலப்பகுதியில்தான் மக்கள் இயற்கையின் சீற்றத்துக்கு உட்பட்டனர். மழைவெள்ளம் அவர்களது தற்காலிக கூடாரங்களுக்குள் புகுந்து கொண்டது. இதனால் அவர்கள் பெரிதும் துன்பப்பட்டார்கள். போக்குவரவுகள் கூட தடைப்பட்டுப் போயின. மேட்டு நிலங்களைத் தேடி மக்கள் வெறும் கையுடன் இடம்பெயர்ந்தனர். பெரும் சிரமத்தின் மத்தியில் பெருந்தொகைப் பணத்தை வாகன சாரதிகளுக்குக் கொடுத்து ஏற்றி வந்த பல சொத்துக்களை வெள்ளம் கொண்டு சென்றுவிட்டது. இருக்க இடமின்றி, உண்ண உணவின்றி மக்கள் அலைமோதினர். ஆனால், அவை போதுமானதாக இருந்ததா என்பது கேள்விக்குறியே?

இதனோடு சுகாதார சீரின்மையால் நோய்கள் பரவத் தொடங்கின. ஆனால், வைத்தியர்களாலும் ஏனைய பொது அமைப்புக்களாலும் தீவிர சுகாதார ஆலோசனைகள், வழிகாட்டல்கள் வழங்கப்பட்டதால் பாரியளவில் நோய்த் தொற்றுக்கள் ஏற்பட சந்தர்ப்பமில்லாமல் போயிற்று.

இருந்தும் குடியிருக்கப் பொருத்தமில்லாத இடங்களில் மக்கள் வாழ்வதற்கு போர்ச்சூழல் நிர்ப்பந்தத்தால் பலர் பாம்புக்கடிக்கு உள்ளாகினர். இதிலும் வைத்தியத்துறை நன்கு விரைந்து செயற்பட்டதால் மரணிப்போர் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டது.

நாள் ஒன்றுக்கு 20 தொடக்கம் 30 வரையானோர் பாம்புக்கடிக்கு உள்ளாகினர். இவ்வாறு பல ஆபத்துக்களில் இருந்து உயிரைப் பாதுகாத்து ஓடித்திரிந்த போதும் எறிகணைகள், விமானத் தாக்குதல்களால் பலியானோர் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்குகிறது.

அரசபடைகளின் முன்னணி காப்பரணில் இருந்து குறைந்தது 5 முதல் 10 கி.மீ வரையான தூரத்துக்கப்பால் மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பாக இருந்து கொண்டதால் இழப்புக்கள் கொஞ்சம் குறைவாகத்தான் இருந்தன. இருந்தாலும் நாளாந்தம் அதிகரித்து வருகின்ற விமானத் தாக்குதல்களில் சிக்கி பலர் பலியாவதையும், படுகாயமடைந்து ஊனமுறுவதையும் அவதானிக்க முடிந்தது.

வருட ஆரம்பத்தில் கிளிநொச்சி நகர வீழ்ச்சியின் பின் அடுத்தடுத்த வாரங்களில் இடம்பெற்ற இராணுவ நகர்வுகளைத் தொடர்ந்து மேலும் மக்களின் இருப்பிடம் சுருங்கியது. இதனால் எங்கு செல்வது என்று தெரியாமல் சந்திகள், வீதிகள், மரநிழல்கள், பற்றைகள், வயல்கள் என மக்களின் இருப்பிடங்கள் அமைந்தன.

புதிதாக இயங்கத் தொடங்கிய அனைத்துச் சேவைகளிலும் தாக்கங்கள் ஏற்பட்டன. மருத்துவ சேவை என்பது பெரும் கேள்விக்குறியாகியது. எறிகணைகள் விமானத் தாக்குதல்கள் பரவலாக இடம் பெறத் தொடங்கின. நாளாந்தம் மரண ஓலங்கள். மீண்டும் இடம்பெயர்வுகள். வட்டக்கச்சி, முரசுமோட்டை, தருமபுரம், விசுவமடு, தேராவில் மக்களும் இடம் பெயரத் தொடங்கினர்.

மக்களின் உடைமைகளை ஏற்றியபடி விசுவமடுவில் இருந்து சுதந்திரபுரம் சந்திவரையிலான வீதியின் இருமருங்கிலும் வாகன நெரிசல், மக்கள் வீதியில் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலைமை. நத்தை வேகத்திலான இவர்களின் பயணம் அரசாங்கத்தினால் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட சுதந்திரபுரம், வள்ளிபுனத்தை நோக்கி நகர்கிறது. முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வலயங்களான விசுவமடு, ஒட்டுசுட்டான் செயலிழந்து போயின. இதனால் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனம் இருந்தபோதும் வேறிடமின்றி சுதந்திரபுரம் எனும் கிராமத்துக்குள் அடைகிறார்கள். தென்னந்தோட்டம், பொதுக்காணிகள், மரநிழல்கள், புல் வெளிகள், வயல்வெளிகள் என ஒரு துண்டுக் காணியும் மிச்சமின்றி புதுப்புது கூடாரங்கள் முளைக்கத் தொடங்கின.

(அவலங்கள் தொடரும்....)

# வெள்ளித்திரைகளில் ஹீரோக்கள் சின்னத்திரையில் ஹீரோயின்கள்...





மக்களின் இரசனைக்கு விருந்தளிப்பதும், அவர்களுக்கு பொழுதுபோக்கு அம்சமாக இருப்பதும் திரைப்படங்கள் தான். ஆனால் இன்று திரைப்படத்தை விட நாடகங்களுக்கே இரசிகர்கள் அதிகமாகி விட்டனர். சினிமாக் களில் நடிகர்களைத்தான் முதன்மைபடுத்தி காட்டுவார்கள்.

அவர்களுக்கே கதை, பாடல், சண்டைக் காட்சிகள் என அத்தனையும் இருக்கும். ஆனால் ஆண்களுக்கு பெண்கள் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் சின்னத்திரையில் பெண்களை (கதாநாயகிகளை) மையமாக வைத்து உருவாகி வருகிறது சின்னத்திரை ஒவ்வொன்றும். இரண்டரை, மூன்று மணித்தியாளத்தில் நிறைவு காணும் திரைப்படத்தில் வெறும் ஒரு ஊறுகாய் போலவே வந்து செல்லும் கதாநாயகிகளுக்கு இரண்டு, மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக சின்னத்திரைகளில் நடித்து சாதனை படைப்பது மகிழ்ச்சிக்குரியதே.

கடந்த 6 வருடங்களுக்கு மேலாக சக்தி டி.வியில் ஒளிபரப்பாகி வந்த 'கோலங்கள்' தொடர் பல வருடங்கள் விறுவிறுப்பான முறையில் சென்றது. இதில் கதாநாயகி அபி (தேவயானி) தன் வாழ்க்கையில் கஷ்டங்கள் பல பட்டு தன் குடும்பத்தார்களையும் உயர்த்தி தொழிலிலும் முன்னேற்றம் காணும் விதத்தை காட்டியது. அதேபோல சிவச்க்தி, திருமதி, செல்லம், தங்கமான புருஷன், கஸ்தூரி, குடும்பம், கல்யாணம் என அடுக்கிக் கொண்டே போகலாம்.

சின்னத்திரையில் பெண்களால் மிளிர முடியும் என நிரூபிக்கும் முகமாக அஸ்திவாரத்தைப் போட்டவர்கள் 'பெண்' தொடர் மூலம் ராதிகா, சுஹாசினி, ரேவதி, பானுப்பிரியா, போன்றோர் தான். அதனை தொடர்ந்து நடிகை ராதிகா 'சித்தி' என்ற தொடரை தனது ராடன் நிறுவனத்தின் மூலம் தயாரித்து நடித்தார். தொடர்ந்து 'அண்ணாமலை', 'செல்வி', 'அரசி' என இவருடைய தொடர் வரிசையில் அண்மையில் 'செல்லமே' இடம் பிடித்திருக்கிறது. ராதிகாவின் ராடன் நிறுவனம் சன் டி.வியுடன் இணைந்து தனது தொடர் நாடகங்களை ஒளிபரப்பாக்கி 10 ஆவது ஆண்டை நிறைவு அண்மையில் கண்டுள்ளது. இது போல வெள்ளித்திரையில் தங்க நட்சத்திரம ஜொலித்த நடிகை ரம்யா கிரு னும் இந்த சின்னத்திரை களத்தில் இறங்கி உள்ளார்.

இந்த வெள்ளித்திரை நட்சத்திரங்களான ராதிகா, குஷ்பு, ரம்யா கிருஷ்ணன், மீனா, சுதா சந்திரன், சீதா, நளினி ஆகியோர் வரிசையில் பல புதுமுக நடிகைகளும் தங்களுடைய பங்கினை வழங்குகிறார்கள். குறிப்பாக 'தென்றல்' , 'மாதவி' மேகலா தொடர்கள் இன்றைய நாட்களில் விறுவிறுப்பாக சக்தி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும் தொடர்களாகும்.

சின்னத் திரையில் பெண்க் கதாநாயகிகளாக மட்டும் நடிக்கவில்லை. வில்லியாகவும் நடித்து வருகிறார்கள். மொத்தத்தில் மூன்று மணித்தியாலம் திரையில் வந்து போகும் ஹீரோக்களை விட 2,3 வருடங்கள் தொடர்ச்சியாக சின்னத்திரையில் வரும் ஹீரோயின்களை மக்கள் அதிகம் விரும்புகின்றனர்.

வெள்ளித்திரையில் வாய்ப்பில்லாமல் போனாலும் கலைஞர்களுக்கு களம் கொடுக்கும் சின்னத்திரையே வாழ்க.....

-வர்ஷா

***








# வெகுளித்தனமா சிரிச்சதற்கு வெற்றி கிடைச்சிருக்கு

**சோனியா-குழந்தை நட்சத்திரமாக பல படங்களில் நடித்தாலும் 'மைடியர் குட்டிசாத்தான்' படத்தின் மூலம் புகழும், விருதும் பெற்றவர். "லீவு இருக்கிற நாளா பாத்து அக்கா கல்யாணத்தை வைங்கப்பா" என்று பாவாடை சட்டையில் மௌனராகம் படத்தில் படபட வென்று பேசி நடித்தவர். "நீ சுத்த வேஸ்ட் அக்கா" என கண்ணடித்தவாறு அழகனில் பேசிய சுட்டி நடிகை. சமீபத்தில் இவருக்கு பெயர் வாங்கிக் கொடுத்தது "செல்லமே" தொடரில் இவர் சிரிக்கும் வெகுளித்தனமான சிரிப்புதான். அந்த காரெக்டர் பற்றி அவரை சந்தித்துப் பேசினோம்...**

"வாழ்க்கையிலே எனக்கு ரோல் மாடலா அமைஞ்சவங்க என் அம்மா, ராதிகா மேடம், ஜெயலலிதா மேடம், மூவரும்தான். எதிர்கொள்ளும் ஏற்ற இறக்கங்கள், வெற்றி தோல்விகள் எதையும் சமாளிக்கும் துணிச்சலை இவர்களிடம் பார்த்து பிரமித் திருக்கிறேன். ராதிகா மேடத் தோடு நடிக்கவேண்டு மென்ற ஆசை எனக்குள் நீறுபூத்த நெருப்பாக இருந்த தென்றே சொல்லலாம்.

நடிகர் சங்கத்தில் சமீப நாட்களா கத்தான் கமிட்டி உறுப்பினராக பொறுப்பேற்றேன். நடிகர் சங்க நாடக விழாவில் இரத்தக் கண்ணீர் காந்தாவாக வேடம் ஏற்று நடித்தேன். ராதிகா மேடத்தின் கண்ணில் பட்டது அப்போதுதான். என் மகள் பிறந்த பின் உடல் பருமனைக் குறைத்து டிரிம்மாக முயற்சி எடுத்தேன். என்னிடம் அவர்கள் மைனஸாக நினைத்த உடல் பருமன் குறைந்த தால் என் நடிப்பும் சேர்ந்து அவர்களை திரும்பிப் பார்க்க வைத்தது. நடிகர் சங்க இறுதிநாள் விழாவில் கலா வதியுடன் நான் சேர்ந்து நடித்த நகைச்சுவை நாடகம் தான், எனக்கு 'செல்லமே' தொடருக்கு நுழை வாயி லாக இருந்தது. விழா முடிந்த மறு நாளே ராதிகா மேடம் கூப்பிட்டதாக சொன்னப்போது நான் என்னையே கிள்ளிப் பார்த்துக் கொண்டேன். என் கதாபாத்திர மென்ன, எனக்கு யார் ஜோடி எதுவும் கேட்கத் தோன்ற வில்லை. நெடுநாள் கனவு நனவான சந்தோஷத்தில் திக்கு முக்காடி நின்றேன்னே சொல்லலாம்.

அவுட்டோருக்கு போனப்ப டைரக்டர் வெகுளித்தனமா சிரிச்சுகிட்டே பேசணும்னு . சொன்னப்ப நான் மண்டையை உடைச்சுகிட்டு யோசிக்க ஆரம்பிச்சேன். அந்த சிரிப்பில் நான் எச்சரிக்கையா இருக்கனும். கொஞ்சம்விட்டா பைத்தியக்காரப் பெண்ணாதான் திரிவேன். சீன்ல நடிக்க வரப்ப ஸ்பாட்டுக்கு போய் கேட்டுட்டு பட்டுனு செய்யறதுதான் என் பழக்கம். எப்படியாவது சரியான நூலிழையை பிடிச்சுடனும்கிற எண்ணத்திலே வீட்டிலே கண்ணாடி முன்னாடி நின்னு சிரிச்சு நடிச்சு பார்த்தேன். திரும்பத் திரும்ப செய்ய றதை பார்த்து என் கணவர் போஸ் வெங்கட், "எதுக்காக இப்படி கஷ்டப்படறே"ன்னு கேட்டார். நான் எதுக்கும் சளைக்கலை. சிரிச்சு சிரிச்சு பார்த்துக்கிட்டே இருந்தேன். என் விடாமுயற்சிக்கு எக்கச்சக்கமான பலன் கிடைச்சது. என் காரெக்டருக்கு இவ்வளவு ஆதரவு கிடைக்கும் என நான் எதிர்பார்க்கவே இல்லை. சமீபத்தில் கோயமுத்தூரில் ஒரு விழாவில் கலந்து கொள்ளச் சென்றபோது என்னைப் பார்த்தவர்கள் எல்லாம், சிரிச்சுகிட்டே இருந்தாங்க. ராதிகா மேடமே என்னை கூட கூப்பிட்டு பாராட்டினாங்க. எங்க வீட்டிலேயே எனக்கு விசிறிகள் கூட்டம் சேர்ந்து டுச்சு. இயற்கையா சிரிக்கவே வராத நான் படபடன்னு பேசி விஷயங் களை பட்டுனு உடைக்கற டைப். ஒருவயசு மகள்கூட இருக்கிற நேரத்தைக்கூட தியாகம் பண்ணிட்டு, என் கதாபாத்திரத்துக்கு நானே டப்பிங் பேசறேன். நடிக்கும்போது சிரிப்பிலே இருக்கிற வெகுளித்தனம், டப்பிங்கிலும் வந்தாதானே வெற்றி. இந்த கதாபாத்திரமளவுக்கு நான் கஷ்டப்பட்டு முயன்றது வேறு எதுவுமே இல்லை. கை மேல் பலன் கிடைச்சிருக்கு."

நன்றி இணையம்



# பித்தன் பதில்கள்



நிஷா,
கொழும்பு.

**கேள்வி:-** மணமகள் தேவை விளம்பரத்தில் 'அழகான பெண் தேவை' என்று குறிப்பிடுவதுபோல வேலை வாய்ப்பு மற்றும் தொழில் விளம்பரங்களிலும் 'அழகிய பெண்' என்ற தகுதி கேட்கிறார்களே...?

**பதில்:-** அங்குதான் இருக்கின்றது தொழில்நுட்பம்!

விவேக்,
வவுனியா.

**கேள்வி:-** காதல் திருமணம் செய்தவர்கள் தமது பிள்ளைகளின் காதலை எதிர்க்கின்றார்களே. ஏன்..?

**பதில்:-** சூடு கண்ட பூனை தனது குட்டியையும் அடுப்பங்கரைக்கு விடாது என்பதாலோ...?

காவியா,
தெகிவளை.

**கேள்வி:-** என் காதலனிடம் ஒரு காரியம் ஆக வேண்டும். காலைப் பிடிக்கவா...?

**பதில்:-** காலைப் பிடித்து வேலை ஆகுமா...?

மணி,
கொக்குவில்.

**கேள்வி:-** திருமணத்தின்போது பெண்கள் தலைகுனிவது ஏன் பித்தரே...?

**பதில்:-** அன்று மட்டும்தான். அதன் பின்னர் எதிர்த்தரப்புத்தானே தலை குனியப்போகிறது...! அதனால் அன்று மட்டும் விட்டுக்கொடுப்பு...!

நகுல்,
சுன்னாகம்.

**கேள்வி:-** செல்விகளை நாடாத மனம் திருமதிகளைக் கண்டு சலனப்படுகிறதே பித்தரே...?

**பதில்:-** 'பழகிய குதிரையில் சவாரி சுலபம்' என்ற எண்ணம் காரணமோ...?

உவைஸ்,
மருதானை.

**கேள்வி:-** வாழ்க்கையில் பிடிப்பு ஏற்பட என்ன வழி பித்தரே...?

**பதில்:-** ஒன்றைப் பிடித்துக்கொள்ளும்..! ஆனால், பின்னர் அது உம்மையே பற்றிப் பிடித்துவிடும் என்பது வேறு விடயம்...!




விநாயகம்,
மன்னார்.

**கேள்வி:-** புத்திசாலிகள் பலரும் வாழ்வில் உயர்வதில்லையே. ஏன் பித்தரே...?

**பதில்:-** 'புத்தியுள்ள மனிதர் எல்லாம் வெற்றி காண்பதில்லை. வெற்றி பெற்ற மனிதர் எல்லாம் புத்திசாலி இல்லை' - என்று அன்றே சந்திரபாபு பாடி வைத்தது இதைத்தான். இப்போதைய தேர்தல் முடிவும் இதைத்தான் எடுத்துக் காட்டப்போகின்றதோ, என்னவோ...?

பரமேஸ்,
மந்துவில்.

**கேள்வி:-** உலகில் பெரிய வாய் நீர் யானைக்குத்தானா உண்டு பித்தரே...?

**பதில்:-** நான் என்னவோ என் வீட்டுக் காரியின் வாய்தான் பெரிது என்று நினைத்துக்கொண்டிருக்கிறேன்...!

ஹமீம்,
அம்பாறை.

**கேள்வி:-** ஆட்சித் தலைவர் இந்தத் தேர்தல் அறிவிப்பு விடயத்தில் அவசரப் பட்டுவிட்டாரா பித்தரே...?

**பதில்:-** போகிற போக்கைப் பார்த்தால் 'ஆப்பிழுத்த குரங்கு', 'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டி' போன்ற பழமொழிகள் எல்லாம் பொருந்திப் போகும் நிலைமைகூட வரலாம் போலத் தோன்றுகின்றது...!




பர்ஸான்,
பேருவளை.

**கேள்வி:-** 'அதுக்கு' ஆசைப்படுவது தப்பா பித்தரே...?

**பதில்:-** எதுக்கு...? பிறந்தது எதனாலோ, பிறப்பது எதற்காகவோ, அதைத்தானே குறிப்பிடுகின்றீர்...? அதற்கும் வரைமுறை, மனித நாகரிக பண்பியல் கட்டுப்பாடுகள், சட்ட - ஒழுங்கு முறைமைகள் உண்டு. அவற்றை மீறாமல் இருக்கும் வரை எதுக்கும் அனுமதி உண்டு தம்பி...!

டேவிட்,
வென்னப்புவ.

**கேள்வி:-** ரூபாவின் மதிப்பு தாழ்ந்து விட்டதா பித்தரே...?

**பதில்:-** எங்கள் பக்கத்து வீட்டு ரூபசுந்தரி மாமிக்கு வயது போய்விட்ட தால் அவரது கணவர் இப்போது சுந்தரியை விட்டு விட்டு வெறும் 'ரூபா' என்று தான் அழைக்கின்றார். அதனால் தமது மதிப்புப் போய்விட்டது என்று புலம்புகிறார் ரூபா மாமி. அது வேறு விடயம். ஆனால், எங்கள் நாட்டு ரூபா நோட்டு இப்போது தேர்தல் பிரசார 'பிட்' நோட்டீஸ் மாதிரி அல்லவா வந்திருக்கிறது...?

சிவா,
கண்டி.

**கேள்வி:-** ஜெனரல் அனுருத்த ரத்வத்தையும் 'பல்டி' அடிக்கப் போகிறார் என ஊடகச் செய்திகள் வந்துள்ளனவே...?

**பதில்:-** இனம் இனத்தைச் சாரும். நான் 'ஜெனரல்கள்' அணியைச் சொன்னேன்.

நீரதன்,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:-** 'அம்மாவும் நீயே, அப்பாவும் நீயே' என்ற பாடல் நிஜத்தில் யதார்த்தமாகுமா பித்தரே...?

**பதில்:-** நவீன விஞ்ஞானத்தில் 'குளோனிங்' கண்டுபிடிப்பு அதனை எப்போதோ யதார்த்தமாக்கிவிட்டதே நண்பரே...!

ஹம்ஸா,
கல்முனை.

**கேள்வி:-** முப்பது நாட்களில் முப்பது கோடி செலவு செய்யும் 'அருணாச்சலங்கள்' நம் மத்தியில் உண்டா பித்தரே...?

**பதில்:-** ஏன் இல்லை..? இந்த தேர்தலுக்காக 'சகோதரர்கள் கம்பனி' பணத்தை வாரியிறைப்பதைப் பார்த்தால் சினிமா அருணாச்சலங்கள் நிஜ வாழ்க்கையிலும் உள்ளனர் என்பது உங்களுக்குப் புரியவில்லையா...?

## சொற்சிலம்பம் போட்டி இல. 399

சொற்சிலம்பம் 399 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் திகதி 2010 ஆம் ஆண்டு ஜனவரி 09 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜனவரி 16 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 397 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.399

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | | | ■ | |
| 7 | 8 | | | ■ | 9 | 10 | |
| 11 | | | ■ | 12 | | | |
| ■ | | ■ | 13 | | | ■ | |
| 14 | | 15 | | | ■ | 16 | |
| | ■ | 17 | | ■ | 18 | | ■ |
| 19 | | ■ | 20 | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.397

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | 2 சு | 3 வா | 4 ச | ம் | ■ | 5 சா | 6 வி |
| 7 ம | ரு | ந் | து | ■ | 8 ப | தி | ல் |
| த் | ■ | 9 தி | ப் | 10 பி | லி | ■ | லை |
| 11 து | 12 ரு | ■ | 13 பு | த் | த | ன் | ■ |
| 14 வ | து | 15 வை | ■ | 16 த | ம் | ■ | 17 க |
| ம் | ■ | 18 ய | 19 ம | ன் | ■ | 20 க | ளி |
| ■ | 21 அ | க | ர | ■ | 22 பா | ட | ம் |
| 23 வி | ள | ம் | பு | த | ல் | ■ | பு |

## சொற்சிலம்பம் போட்டி இல. 399

### இடமிருந்து வலம்

1. பரிபாலிப்பவர்/ முகாமை செய்பவர்
4. ஒருவரின் (குண) இயல்பு.
6. பல விதத்தியாசமான பெறுமானங்களின் கூட்டு மத்தி.
7. இரத்தல்.
9. முற்காலத்தில் இது ஒரு தூர அளவீட்டு அலகு.
11. மத்திய புள்ளி/ நடுநிலையம்.
12. உணர்வுகளைக் கடத்துவது.
13. மனம்/ உள்ளே இருப்பது.
14. பகிரங்கம்/ பொதுமேடை.
16. நல்லது என்பதன் சுருக்கம்.
17. குத்துவது இப்படி.
18. கூட்டல் குறி.
19. கடல் (அலை)/ மேடையை மறைப்பது.
20. மகன்.

### மேலிருந்து கீழ்

1. நிலைத்திருக்காத தன்மை.
2. வசனம்.
3. இப்போது நிறுத்தல் அலகு.
4. பிராயச்சித்தம்/ மாற்று மருத்துவம்.
5. அரற்றுதல்.
8. நித்திரை.
10. தமது.
12. விரலில் வளருவது.
13. தோய்/ துவை/ கழுவு/ பிழற்று.
14. மாலைப் பொழுது.
15. பிரி.
16. அசைய/ இடம் பெயர.
18. மறைவில் தீட்டப்படுவது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 397

### பரிசு பெறுவோர்

1. ச. அன்ரனி,
புதுக்குளம்,
கனகராயன்குளம் தெற்கு,
வவுனியா.
2. வி. நளாஜினி,
அநதோனியார் வீதி, மாதகல்,
யாழ்ப்பாணம்.
3. ஸ்ரீ. கேதீஸ்வரன்,
இல. 4, ஜெயதீபம் இன்வெஸ்மென்ட் லிமிடெட்,
சின்னக்கடை, மன்னார்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 397

### பாராட்டுப் பெறுவோர்

01. சி.இராஜேந்திரா, கொழும்பு - 06.
02. ம. தில்லைநாதன், யாழ்ப்பாணம்.
03. எஸ். ரவிச்சந்திரன், பெரிய கல்லாறு - 02.
04. எம். ரஞ்சன் பஸ்டியன், தெஹிவளை.
05. திருமதி. இ. விமலாம்பிகை கொழும்பு - 13.
06. மதன் நந்தினி, பொலிகண்டி.
07. திருமதி. பூர்ணிமா ஷியாம், மொரட்டுவை.
08. கே. ஏ. வரன், யாழ்ப்பாணம்.
09. நா. அனோஜினி, கல்முனை.
10. ஜெ. ரனுஷி, பதுளை.
11. திருமதி. பாக்கியநாதன், வவுனியா.
12. க. துவாரகன், மானிப்பாய்.
13. திருமதி. சந்திரா ரவீந்திரன், ஹட்டன்.
14. இ. சிவப்பிரியா, கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
15. சி. பேரம்பலம், வவுனியா.
16. மா. சுப்பிரமணியம், மட்டக்களப்பு.
17. ஜெ. அபிஜீத்தன், கொழும்பு - 06.

'விடுதலைப் புலிகள் இருந்தாலும் இல்லையென்றாலும், இலங்கை அரசியல் களம் என்னவோ... அந்த இயக்கத்தைச் சுற்றியே இயங்குகிறது! புலிகளுடனான போரில் கிடைத்த வெற்றிகளை முன்னாள் ராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் பங்கு போடுவதால், போருக்குப் பின் தனது சாதனைகளைப் பட்டியலிட்டு, சிங்கள வாக்குகளை கவர்ந்திழுக்கிறார், ஜனாதிபதி மகிந்தா ராஜபக்ஷ. இதைத் தொடர்ந்து, சரத் மூலமாகவே அவர்களின் ஆயுதப் பரிவர்த்தனைகள் மற்றும் இயக்கத்துக்கான நிதி ஆதாரங்கள் கிடைத்து வந்தன என்றும் கூறப்படுகிறது. இந்நிலையில்,



எளிதாகக் கப்பலை இலங்கைக்குக் கொண்டு வர முடிந்தது?'' என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, மிகக் கடுமையான கேள்விகளை எழுப்பியிருக்கிறார்!

**கைகொடுக்குமா கே.பி. தந்திரம்?!**

மே 18, போர் முடிந்ததும் இலங்கை அரசின் மிக முக்கிய நடவடிக்கையாகச் சொல்லப்பட்டது, விடுதலைப்புலிகளின் அடுத்த தலைவராக அறிவிக்கப்பட்ட செல்வராசா பத்மநாபன் என்கிற கே.பி.யின் கைதுதான். அவர் மூலமாக புலிகளின் சர்வதேச வலைப்பின்னல்களை

உள்ளிட்ட சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் கைதிகளை ஜனவரி இரண்டாம் வாரத்தில் விடுதலை செய்யும் முடிவிலிருக்கிறாராம் ராஜபக்ஷ. கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில், பிரதி அமைச்சர் புத்திரசிகாமணி 'விரைவில் தமிழ் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர்' என்று சொல்லியிருக்கிறார்.

**சந்திரிகா பராக்..!**

ராஜபக்ஷ தரப்பு ஜெட் வேகத்தில் முன்னேற... பொன்சேகா பெரிதும் நம்புவது, முன்னாள் அதிபர் சந்திரிகாவின் பிரசாரத்தைத்தான். அதிபர் ராஜபக்ஷவை அரசியலுக்குக் கொண்டுவந்து, பிரதமராக்கி, அவர் அதிபராவதற்கு அச்சாரம் போட்டதே

# சூடாகும் தேர்தல் களம்

பொன்சேகாவுக்கு ஆதரவாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பிரசாரத்துக்கு வரவிருப்பதால், இலங்கைத் தேர்தல் களத்தில் மேலும் மேலும் சூடு ஏறுகிறது!

**களைகட்டும் 'கப்பல்' மந்திரம்!**



போர் முடிந்த பிறகு, புலிகளின் சர்வதேச வலைப்பின்னலையும், நிதி ஆதாரங்களையும் குறிவைத்து உடைக்கும் வேலைகளில் இறங்கின, இலங்கையின் புலனாய்வுப் பிரிவுகள். இவை, இந்தியாவின் றோ, பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ., சீனாவின் எம்.எஸ்.எஸ், இந்தோனேஷியாவின் பி.ஐ.என்.இ., மலேசியாவின் ஆர்.ஐ.சி. போன்ற பிற ஆசிய நாடுகளின் உளவு நிறுவனங் களின் உதவியோடு, ஆசிய நாடுகளில் இருக்கும் புலிகளின் நிதி ஆதாரங்கள் குறித்த விசாரணைகளில் இறங்கியிருந் தன! புலிகளின் பெரிய பலமாகக் கருதப்பட்டதே அவர்களது கப்பல் போக்குவரத்து வசதிதான். இதன் அந்தக் கப்பல்களை கண்டுபிடிக்க இறங்கிய இலங்கை உளவு அமைப்புகள், சில தினங்களுக்கு முன் 'பிரின்ஸஸ் கிரிசான்ரா' என்ற கப்பலை கண்டுபிடித்திருப்பதாக அறிவித்தன. ஆசிய கடற்பரப்பில் கடற்படையின் முன்னாள் கப்டன் டி.கே.ப. தசநாயக்க தலைமையில் நான்கு அதிகாரிகள் இந்தக் கப்பலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் என்றும் கூறப்பட்டது.

90 மீட்டர் நீளமும், 16 மீட்டர் அகலமும் கொண்ட இதில், ஹெலிக்கொப்டர் இறங்கும் வசதியுண்டாம்! இதுதான் புலிகளின் மிகப்பெரிய கப்பல் என அறிவித்திருக் கிறது அரசாங்கம். அதோடு, இறுதிக் கட்டத்தில் பிரபாகரன் உள்ளிட்ட முக்கியத் தளபதிகள் இந்தக் கப்பலில் தான் தப்பிச் செல்ல முடிவெடுத்திருந் தனர் எனவும் பேசியிருக்கிறார், இலங்கையின் ராணுவ பேச்சாளர் கேகெலிய ரம்புக்வெல. இந்தக் கப்பலை பொதுமக்கள் பார்வையிடலாம் என்று அரசு அறிவிக்க.... பார்வையிடத் திரண்டு வந்த சிங்கள மக்களைப் பார்த்தவுடன், இதே ரீதியிலான பிரசாரங்களை மேலும் முன்னெடுத்துச் செல்லவும் திட்டமிடுகிறார்களாம் ராஜபக்ஷ சகோதரர்கள். ஆனால், ''இந்தக் கப்பல் கண்டுபிடிப்பே திட்டமிட்ட நாடகம்! இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவில் பழைய இரும்புக்காக விற்கப்பட இருந்த பிரின்ஸஸ் கிரிசான்ரா கப்பலை அரசாங்கம் விலைக்கு வாங்கி, புலிகளின் கப்பல் என பொய் பிரசாரத் தில் ஈடுபடுகிறது. புலிகளுடையதாக இருந்தால், அதில் இருந்த மாலுமிகள் கைது செய்யப்பட்டார்களா? அவர்களின் கதி என்ன? இதை ஏன் அரசாங்கம் அறிவிக்கவில்லை? சர்வதேச கடல் போக்குவரத்து சட்டத்தில் கடுமையான விதிகள் இருக்கும்போது, எப்படி

சிதைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது இலங்கை அரசு! இதன் ஒரு பகுதிதான், அமெரிக்காவின் புலிகளின் நிதி சேகரிப்பாளர்கள் என அடையாளம் காணப்பட்ட 9 பேரின் கைதும், சிங்கப்பூரில் 3 பேர், மலேசியாவில் 3 பேர் என உலகெங்கிலும் பலரின் கைதும்!

இதற்கிடையில், ராணுவத்தின் தொடர் சித்திரவதைகளைத் தாங்க இயலாத கே.பி., அரசுக்கு ஆதரவாகச் செயல்படுவதற்கு சம்மதித்திருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.



**வாக்குக்காக வள்ளல்!**

சிங்கள வாக்குகள் உடைவதால், தமிழர்களின் வாக்குகள்தான் வெற்றியைத் தீர்மானிக்கும்! அதனால் தான் தமிழர்களுக்கு ஆதரவான அறிவிப்புகளை நித்தம் நித்தம் வெளியிடுகிறது ராஜபக்ஷ அரசு. 'மலையகத்திலிருந்தோ... யாழ்ப்பாணத்திலிருந்தோ... வடக்கிலிருந்தோ கொழும்புக்கு வரும் தமிழர்கள் முறைப்படி பொலீஸில் பதிவு செய்துதான் கொழும்புக்குள் நுழைய முடியும். குறைந்த நாட்களே தங்க வேண்டும் என்ற விதி இலங்கையில் அமுலில் இருந்தது. 'இனிமேல் அப்படி வருகிறவர்கள் பொலீஸிடம் பதிவு செய்யத் தேவையில்லை. 30 தினங்களுக்கும் மேலாக கொழும்பிலேயே தங்கினால்தான் பதிவு செய்யவேண்டும் என அறிவிக்கப் பட்டுள்ளது! அதே போல் வடபகுதி கள், யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பை இணைக்கும் ஏ-9 வீதி ஆகியவற்றில் இனிமேல் பாதுகாப்புக் கெடுபிடியின்றி, எந்நேரமும் சுதந்திரமாகப் பயணிக்கலாம் எனவும் அறிவித்திருக்கி றார்கள். அதோடு, கடந்த பத்து வருடங்களுக் கும் மேலாக எந்த வித விசாரணைக ளும் இன்றி வெலிக்கடை

- மு.தாமரைக்கண்ணன்

சந்திரிகாதான். அதன் பிறகு ராஜபக்ஷவுடன் மோதல்கள் வலுத்து, உயிருக்கு ஆபத்திருப்பதாகக் கூறி அரசியலை விட்டு, அமெரிக்காவில் குடியேறினார் சந்திரிகா! இலங்கை வருவதையே தவிர்த்திருந்த சந்திரிகாவை அமெரிக்காவில் சந்தித்தார் பொன்சேகா. அதிபர் தேர்தலில் நிற்க, சந்திரிகாவின் ஆதரவையும் கேட்க... 'எதிரி ராஜபக்ஷவை ஒழிக்கவேண்டும்' என்றிருந்த சந்திரிகாவும் அதற்கு சம்மதித்தாராம்.

பொன்சேகாவுக்காக பிரசார மேடைகளில் முழங்க விருக்கும் சந்திரிகாவின் இலங்கைச் சுற்றுப்பயணமும் உறுதியாகிவிட்டது. இதற்கிடையில், சந்திரிகாவை சமாதானப்படுத்த ராஜபக்ஷ சகோதரர்கள் பல தரப்பிலும் முயல்கிறார்கள் என்று கூறப்படுகிறது. சந்திரிகா வெளியிடும் விஷயங்கள், தேர்தல் களத்தில் என்ன மாதிரியான விளைவுகளை ஏற்படுத்துமோ என்பதுதான் தற்போதைய இலங்கை மக்களின் எதிர்பார்ப்பு!

***

## நிபந்தனையில்லா ஆதர....

(3ஆம் பக்க தொடர்ச்சி...)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்காக சவூதி அரேபிய அரசாங்கம் நுரைச் சோலையில் நிர்மாணித்துக் கொடுத்த 500 வீடுகள் இன்னும் அந்த மக்களுக்கு வழங்கப் படாமல் பாழடைந்து கிடக்கின்றன. இப்படியானதொரு நிலையில்தான், முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற அமைச்சர்களான அதாஉல்லா, அமீர்அலி, றிசாத் பதியுத்தீன் போன்றவர்கள் இன்று மஹிந்த ராஜபக்ஷவுக்கு நிபந்தனை களேயில்லாமல் ஆதரவு கொடுக்க முன்வந்திருக்கின்றார்கள்.

இதேவேளை, இந்த நாட்டிலுள்ள இனப்பிரச்சினையையும், அதற்கான தீர்வு என்பதும் மிகமிக - முக்கியமானவைகளாகும். இன்றுள்ள மாகாணசபைகள் முறைமைக்கு மேலானதொரு (அதாவது 13 ஆவது அரசியல் திருத்தத்துக்கு அப்பால் சென்று கூட) அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை தன்னால் முன்வைக்க முடியும் என்று - ஜனாதிபதித் தேர்தல் களத்திலுள்ள பிரதான வேட்பாளர்களில் ஒருவரான சரத் பொன்சேகா கூறுகின்றார். ஆனால், இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் என்கிற பேச்சுக்கெல்லாம் இது பொருத்தமான நேரமல்ல. பொதுத் தேர்லொன்றின் பிறகுதான் அதுபற்றியெல்லாம் பேசமுடியும் என்கிற அர்த்தப்படக் கூறியிருக்கிறது மஹிந்த தரப்பு! இவ்வாறானதொரு நிலையில்தான் நிபந்தனையற்றதொரு ஆதரவை மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தாம் வழங்குவதாகக் கூறியுள்ளனர் நமது சிறுபான்மை மக்கள் பிரதிநிதிகள்!

நிபந்தனையற்ற ஆதரவை மஹிந்த ராஜபக்ஷவுக்கு அதாஉல்லா போன்ற இந்த முஸ்லிம் பிரதிநிதிகள் ஏன் வழங்க வேண்டும்?

அதற்கு அவர்கள் கூறும் பதில் வித்தியாசமானது. அதாவது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவிப்பதற்காகவே நாம் இவ்வாறானதொரு ஆதரவை வழங்குகிறோம் என்கிறார்கள் அதாஉல்லா அணியினர்!

இதேவேளை, தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற வைத்து ஆட்சியில் அமர்த்தியவர்களே தாங்கள்தான் என்று அதாஉல்லாவும், அவரின் கூட்டாளிகளும் பேசித்திரிந்த பெருமைகளெல்லாம் ஏனோ, இப்போது - இந்த இடத்தில் நமது ஞாபகத்துக்கு வந்து தொலைத்துக்கொண்டிருக்கின்றன.

அந்த அடிப்படையில் பார்த்தால், அதாஉல்லா தரப்பினருக்கு மஹிந்த ராஜபக்ஷதான் இந்தத் தேர்தலின் போது நன்றிகளைச் செலுத்த வேண்டும்!

அதாஉல்லா தரப்பினரின் - காரணம், காரியம் இரண்டுமே உதைக்கின்றனவே!!

***

இந்தியத் திரைப்படவுலகில் தென்னிந்தியத் தமிழ் திரைப்படங்களுக் கென்று ஒரு மதிப்பும் மரியாதையும் இருப்பதற்கு காரணம் அவை தரமானவை அது மட்டுமல்ல - தனித்தன்மையுடன் விளங்குவபை. அதனால்தான் இன்று தென்னகத்திலிருந்து ஹிந்திக்கு சென்று வெற்றிக்கொடி நாட்டிவரும் இயக்குனர்கள் ஏ.ஆர். முருகதாஸ் (கஜினி), பிரபுதேவா (போக்கிரி) உட்பட பல தமிழர்களினால் தமிழ்த் திரைப்படத்துறை தலை நிமிர்ந்துள்ளது.

இதே போலவே அன்றும் பல நல்ல கலைஞர்களினால் தமிழ்த் திரையுலகம் மற்ற மாநிலங்களிலும் பெருமை பெற்று விளங்கியது.



உட்பட பல படங்களில் ஜெய்சங்கர் துப்பறியும் கதாபாத்திரத்தில் நடித்தமை யினால் இவர் தென்னக ஜேம்ஸ் போண்ட் என அழைக்கப்பட்டார். ஆனாலும், இவர் பல நல்ல படங்களில் மிகவும் சிறப்பாக நடித்திருக்கிறார். ஏவி.எம்மின் 'குழந்தையும் தெய்வமும்' ஒரு கருத்துள்ள குடும்பப்படம். இப்படத்தில் ஜெய்சங்கருக்கு ஜோடி யாக ஜமுனாவும் இவர்களின் குழந்தை களாக இரண்டு வேடங்களில் குட்டிப் பத்மினியும் யதார்த்தமாக நடித்திருந்த னர். ஜெய்சங்கர் நல்லவனாகவும். கெட்டவனாகவும் இரு மாறுப்பட்ட கதாபாத்திரங்களில் தோன்றி நடித்த படம் 'பஞ்சவர்ணக்கிளி'. அதேப்போல கே.பாலசந்தரின் இயக்கத்தில் 'நூற்றுக்கு நூறு' கே. எஸ். கோபால கிருஷ்ணனின் இயக்கத்தில் 'குணமா

# தென்னக ஜேம்ஸ் போண்டாக பிரகாசித்த மக்கள் கலைஞர் ஜெய்சங்கர்

அந்தவகையில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரைப் போலவே 'மக்கள் கலைஞராக நடிப்பிலும் கொடையிலும் சிறந்து விளங்கிய ஜெய்சங்கரைப் பற்றிய சில நினைவுகளை மீட்டிப் பார்ப்பது மனதுக்கு சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் தரலாம்.

1964 இல் அன்றைய பிரபல தயாரிப் பாளரும் இயக்குநருமான ஜோசப் தானியத் 'தங்கமலைத் திருடன்' படத்திதையடுத்து தனது சிட்டாடல் நிறுவனத்துக்காக ஒரு படத்தை தயாரித்து இயக்க நினைத்திருந்தார். இப்படத்தில் பிரதான வேடத்தில் S.A. அசோகன் வசந்தா ஆகியோர் தெரிவு செய்யப்பட்ட நிலையில் கதாநாயகனாக யாரைப் போடுவதென்ற யோசனை யிலிருந்த ஜோசப் தானியத்திடம் சிவந்த நிறம் எடுப்பான தோற்றம் மற்றும் சுறுசுறுப்புடனி ருந்த ஒரு இளைஞனை அசோகன் அறிமுகப்படுத் தினார். எடுத்த எடுப்பிலேயே அந்த இளைஞரை ஜோசப் தானியத் துக்குப் பிடித்து விட்டது. 'இரவும் பகலும்' என்ற அந்தப் படத்தில் இரண்டு மாறு பட்ட தோற்றங் களில் 'ஜெய்சங்கர்' அறிமுகமானார். படம் 100 நாட்கள் ஓடி ஜெய்சங்கர் தமிழ்த் திரையுலகில் வெற்றி நாயகனாக உலா வரத் தொடங்கினார். S.A. அசோகன் படவாய்ப்புகளின்றி கஷ்டப்பட்ட காலத் தில் அவருக்கு வாய்ப்புகளை வலிய பெற்றுக் கொடுத்து தன் நன்றியை காட்டினார்.

'மினிமம் கிராயண்டி' என்ற சொல் உருவாவதற்கு முக்கிய காரணகர்த்தா வாக திகழ்ந்தவர் ஜெய்சங்கரேயாவார். ஏனென்றால் இவரை வைத்து படம் தயாரிப்பவர்கள் என்றுமே நஷ்டமடைவ தில்லை. இவரை வைத்து படம் தயாரிப் பவர்கள் பணக் கஷ்டத்தினால் இடையில் படத்தை தொடர முடியாமல் கைவிட நேர்ந்தால் இவர் கை கொடுப்பார். 'வெள்ளிக்கிழமை நாயகன்' என்றொரு பெயரும் இவருக்கு உண்டு. ஒவ்வொரு வாரமும் வெள்ளியன்று இவர் நடித்த படம் வெளியாவதுதான் இதற்குக் காரணம். ஜெய்சங்கர் சிவாஜிகணேஷனுடன் 'குணமா குலமா', ஜெமினிகணேசனுடன் 'எதிர்காலம்' 'நூற்றுக்கு நூறு' ஆகிய படங்களில் நடித்திருக்கிறார். எம்.ஜி.ஆருடன் 'ஒரு தாய் மக்கள்' என்ற படத்தில் சேர்ந்து நடிக்கவிருந்த சமயத்தில் இடையிலிருந்த சிலர் ஜெய்சங்கர் பற்றிய பொய்யான தகவல் களை எம்.ஜி.ஆர் காதுக்கு கொண்டு போகவே அந்தப் பாத்திரத்தில் பின்பு முத்துராமன் நடித்தார்.

'நீலகிரி எக்ஸ்பிரஸ்', 'வல்லவன் ஒருவன்', 'சி.ஐ.டி சங்கர்', 'யார் நீ...' குலமா', 'உயிரா மானமா', 'மதுரை திருமாறனின் 'வாயாடி', 'திருடி', 'மேயர் மீனாட்சி' போன்ற படங்களும் அவரின் நடிப்புக்கு நல்ல உதாரணங்க ளாக திகழ்ந்தன.

ஜெய்சங்கர் தன்னுடைய திரையுலக வாழ்க்கையில் மூன்று தலைமுறை நடிகர்களுடன் இணைந்து நடித்திருக் கிறார். எம்.ஜி.ஆர், சிவாஜி ஒரு கால கட்டம். பின்னர் ஜெய்கணேஷ், சுதாகர், சுரேஷ் ஒரு காலக்கட்டம். பின்னர் ரஜனி,கமலின் காலம். மறைந்த எழுத் தாளர் சுஜாதா எழுதி மிகவும் பரபரப்பாக பேசப்பட்ட நாவலான 'காயத்ரி' பின்னர் அதே பெயரில் படமாக்கப்பட்ட போது அதில் ஜெய்சங்கர் கதாநாயகனாகவும் ரஜினி வில்லனாகவும் நடித்தார்கள். ஆனால், பின்பு ஜெய்சங்கருக்கு வாய்ப்புகள் குறைந்த போது ஏவி. எம் மின் 'முரட்டுக்காளை' யில் ரஜனிகாந்த் கதாநாகனாகவும் ஜெய்சங்கர் முதல் முறையாக முழு வில்லனாகவும் மாறியமை காலத்தின் கோலமாகும். கமல் நடித்த கே.பாலாஜியின் 'சட்டம்' ரஜனியின் 'தனிக்காட்டு ராஜா' 'துடிக்கும் கரங்கள்' போன்ற படங்களிலும் ஜெய்சங்கர் வில்லனாக நடித்தாலும் கூட 'வாழ்வே மாயம்', 'ஊமை விழிகள்', 'தளபதி' போன்ற படங்களில் குணச் சித்திர வேடங்களிலும் நடித்திருக்கிறார். ஜெய்சங்கர் ஒரு நடிகராக இருந்தாலும் கூட அவர் ஒரு கொடையாளி. ஏழை, எளிய வர்களுக்கு உதவி செய்வதில் முன் நிற்பவர். இவரின் மகன்களில் ஒருவர் கண் சத்திர சிகிச்சை நிபுணர். 'விஜய்' என்ற பெயருடைய இவர் மறைந்த தன் தந்தையின் விருப்பப்படியே ஆயிரம் பேருக்கு இலவசமாக கண் சத்திர சிகிச்சை செய்திருக்கிறாராம். ஜெய்சங்கர் நடித்த அநேகமான படங்கள் பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்தவை. தன்னுடைய படத்தைப் பார்க்க வருப வர்கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இருந்து அனுபவித்து செல்ல வேண்டும் என்பதே அவரின் கொள்கையாக இருந்தது. எந்நேரமும் புன்னகையுட னேயே காணப்படும் 'ஜெய்சங்கர்' நோயினால் படுக்கையில் விழாமல் மின்னாமல் முழங்காமல் திடீரென மறைந்தது அவரின் ரசிகர்களுக்கு பேரிழப்புத்தான். ‡



'அன்று சிந்திய ரத்தம்' படத்தில் பத்மபிரியாவுடன் ஜெய்சங்கர்

பாலா. சங்குபிள்ளை

# ராசி பலன்

04-01-2010 முதல் 10-01-2010 வரை

பொ. சந்திரலிங்கம்

## மேஷம்



அச்சுவினி, பரணி, கார்த்திகை 1

காரியத்தடை இருக்கும் பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். உடல்நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழிற்றுறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்காது. பிறருக்கு உதவக்கூடிய வாய்ப்புண்டு. பிரயாண வாய்ப்பிருக்காது.

## இடபம்



கார்த்திகை 2, 3, 4, ரோகினி, மிருகசீரிடம் 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர். தாய்நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழிற்றுறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும். பிறருக்கு உதவும் மனமுண்டு.

## மிதுனம்



மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை, தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மனஅமைதி இருக்காது. பிறருக்கு உதவும் மனப்பான்மை உண்டு.

## கடகம்



புனர்பூசம், பூசம், ஆயிலியம்

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட் டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழிற்றுறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

## சிம்மம்



மகம், பூரம், உத்தரம் 1

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற் றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நல மில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியல் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழிற்றுறை முன் னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது. பொதுத் தொண்டில் ஈடுபட வாய்ப்புண்டு.

## கன்னி



உத்தரம் 2, 3, 4, அத்தம், சித்திரை 1, 2

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியல் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் இலாபம் அதிகரிக்கும். அதிஷ் டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழிற்றுறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி உண்டு. பொதுத்தொண்டில் ஈடுபட வாய்ப்புண்டு.

## துலாம்



சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழிற்றுறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது. பொதுத்தொண்டில் ஈடுபட வாய்ப்பிருக்காது.

## விருட்சிகம்



விசாகம் 4, அனுஷம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றா க்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழிற்றுறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது. பொதுத்தொண்டில் ஈடுபட விருப்பம் உண்டு.

## தனுசு



மூலம், பூராடம், உத்தராடம் 1

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக் கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் உண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இராது. பொதுவாழ்வில் அக்கறை குறையலாம்.

## மகரம்



உத்தராடம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகஎண்ணம் குறையலாம். தொழிற்றுறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இராது. பொதுத்தொண்டில் ஈடுபடுவீர்.

## கும்பம்



அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழிற்றுறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. பொதுத்தொண்டில் ஈடுபடுவீர்.


## மீனம்



புரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக எண்ணம் குறையலாம். தொழிற்றுறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

# கலியுக நாராயணன் திவாரி



ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே என்ற சொல் யாருக்குப் பொருந்தாவிட்டாலும், ஆந்திர பிரதேச கவர்னர் நாராயண் தத்த திவாரிக்கு நன்றாகவே பொருந்தும். இன்று பதவியிழந்து பரிதாபத்திற்கிடமாகப் போய்விட்டார். கலியுக நாராயணனாகிய இவரைக் காட்டிக்கொடுத்ததும் ஒரு பெண்தான்; அவள் பெயர் ராதிகா.

ராதிகா இவருக்கு அறிமுகமான ஒரு பெண். உத்தர்காண்ட் மாநில முதலமைச்சராக திவாரி இருக்கும்போதே 'ரியல் எஸ்டேட்' தொழில் செய்து வந்த ராதிகா, ஆந்திராவில் கடப்பா என்ற இடத்துக்கு அருகிலுள்ள சுரங்கங்களைக் குத்தகைக்கு எடுக்க விரும்பியிருந்தார். அதற்காக திவாரியை அணுகியிருக்கிறார். திவாரியின் கையாளாக இருந்த ஒருவருக்கு



பெருந்தொகைப் பணத்தையும் அள்ளியிறைத்தாராம்.

காரியமாகவில்லை; காட்டிக்கொடுத்துவிட்டார். அவர் கூறும் விவரங்கள் அதிசயமானவை. வேலையைச் செய்து தருவதாகவும், அதற்குப் பிரதியுபகாரமாக தனக்கு ஒரு வேலை செய்துதரவேண்டும் என்றும் திவாரி ராதிகாவைக் கேட்டிருக்கிறார்.

அவர் அப்படி என்ன கேட்டுவிட்டார்?

ஆளுநர் மாளிகைக்கு இளம்பெண்களை அனுப்பிவைக்குமாறு 85 வயதான திவாரி சொன்னபோது பாதத்தின் கீழ் நிலம் நழுவிவிடுவதுபோலிருந்தது ராதிகாவுக்கு.

ராதிகாவுக்கு வேலையாக வேண்டுமே! திவாரி சொன்னதை அவர் ஏற்றுக்கொண்டார். ஒரு நாளைக்கு மூன்று பெண்களை அனுப்பி வைத்துக்கொண்டிருந்தார். ஆளுநர் மாளிகை விபசார விடுதியாக மாறியது. அவருக்கு இளம் பெண்கள் இல்லாமல் தூக்கமே வராதாம். பாலியல் ஆசைக்கு இரைபோட்டு வந்த ராதிகா, காரியமாகாமையால் குட்டை குழப்பிவிட்டார்.

எப்படி?

அவருடைய காமலீலைகள் அடங்கிய ஒளி நாடாவை பத்திரிகை அலுவலகத்துக்குக் கொடுத்து இரகசியங்களை அம்பலமாக்கிவிட்டார். அந்த ஒளி நாடாவில் திவாரி மூன்று இளம் பெண்களோடு சல்லாபித்துக்கொண்டிருப்பது பதிவு செய்யப்பட்டிருந்தது. வெள்ளியன்று காலையில் சுமார் அரை மணிநேரம் தெலுங்கு டி.வி. சனல் ஒன்றில் இது காட்டப்பட்டது.

அந்த கிளிப்பில் காட்டப்பட்ட படத்தில் திவாரி காற்சட்டை அணிந்திருக்கவில்லை. ஒரு பெண் அவருடைய மடியில் அமர்ந்திருக்கிறாள். மற்றும் இரு பெண்கள் அவருடைய உடம்பின் மேல்பகுதியைத் தழுவியபடி இருக்கிறார்கள். அவர்களுள் ஒரு பெண் ஏழு மாதக் கர்ப்பிணியாக இருக்கிறாள்; மற்றொரு பெண்ணோ 18 வயதான குமரி - ஆகிய விவரங்கள் பின்னால் தெரியவந்தன.

ஆந்திரப் பிரதேச மேல் நீதிமன்றம் வீடியோ கிளிப்பை ஒளிபரப்புச் செய்வதை அன்றே தடைசெய்துவிட்டது.

திவாரியின் திருவிளையாடல்கள் அம்பலத்துக்கு வந்தது இதுதான் முதல் தடவையல்ல. உத்தர் காண்ட் மாநில முதலமைச்சராக இருக்கும்போதும் வில்லனாக வலம் வந்தார். பல பெண்களோடு இணைத்துப் பேசப்படும் அளவுக்கு அவர் 'பிரபல்ய'மானார்.

உத்தர்காண்ட் மாநிலத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற நாட்டுப் பாடல் ஆசிரியரான நரேந்திர சிங்ஹ நேகி இவர் பற்றி ஒரு பாடலையே இயற்றிப் பாடினார். 'நௌஷ்மி நாராயணன்' என்ற பெயரிலான அந்த அல்பத்தில் 'கலியுக நாராயணன்' என்று அவருக்குப் பட்டமே சூட்டப்பட்டது. இந்த அல்பம் பெண்களோடு 'கிருஷ்ண லீலா' செய்வதாக அவரை அம்பலத்துக்குக் கொண்டுவந்தது.

இத்தோடு நிற்காமல் ஒரு நேபாளிப் பெண்ணோடு, திவாரிக்கு இருந்த 'அசாதாரண உறவை'யும் புட்டுப்புட்டு வைத்திருக்கிறது இந்த அல்பம். மந்திரிப் பதவிக்குச் சமமான அந்தஸ்து உள்ள பதவியை இவருக்கு வழங்கியதாக நேகி இந்த அல்பத்தில் எடுத்துக்காட்டினார். 2006 இல் வெளியான இந்த அல்பத்தில் சர்ச்சைக்குரிய இந்தப் பாடல் மிகப் பிரபல்யம் பெற்றது.

இந்தப் பாடலால் கோபமடைந்த காங்கிரஸ் தலைவர்கள் நேகியைத் தொல்லைப்படுத்தத் தொடங்கினர். அவருடைய மேடை அரங்கேற்றங்கள் நிறுத்தப்பட்டன. அரசாங்க நிகழ்ச்சித்திட்டங்களில் அவர் பெயர் 'பிளக்லிஸ்டி'ல் போடப்பட்டது.

அதன் பிறகுதான் தற்போதைய சர்ச்சை மேலெழுந்து அவர் பெயர், பதவி, அந்தஸ்து, மரியாதை எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு போய்விட்டது

மூன்று மாதங்களுக்கு முன்பே அவருடைய லீலைகள் அடங்கிய கிளிப், பத்திரிகை அலுவலகத்தில் கிடைக்கச் செய்யப்பட்டாலும், மூன்று மாதகால அவதானிப்புக்குப் பின்னரே கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டு கப்பலேற்றப்பட்டார்.

பாவம், நாராயணன் தத்த திவாரி. தற்போது தனது பதவியைத் துறந்துவிட்டு ஆந்திராவில் இருந்து வெளியேறிவிட்டார்.

இதுபோன்று மற்றொரு சம்பவம் கேரள மாநிலத்திலிருந்து வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினரும், கேரள காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் செயலாளரும் தற்போதைய கேரள காங்கிரஸ் தலைவருமான ராம்மோஹன் உன்னிதன், ஒரு பெண்ணோடு ஞாயிறன்று இரவு 11 மணிக்கு அவள் வீட்டில் இருந்ததாகக் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டது வேறு விஷயம். *

-ஸ்ரீமாறன்-

# குழந்தைகள் திருமணம்!



உலக அளவில் ஒப்பிடும்போது இந்தியாவில்தான் அதிக அளவில் சிறுவர் திருமணங்கள் நடைபெறுகின்றன என்ற அதிர்ச்சித் தகவலை ஐ.நா. குழந்தைகள் அமைப்பான யுனிசெப் தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளது.

'குழந்தைகள் முன்னேற்றம், பாதுகாப்பு குறித்த விவரம்' என்ற பெயரில் நடத்திய ஆய்வில்,இந்தியாவில் கல்வியறிவு பெற்றவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எனினும், பாரம்பரியம் மற்றும் மத நம்பிக்கை காரணமாக குழந்தைத் திருமணங்கள் தொடர்கின்றன. அதற்கு சட்டரீதியான தடைகள் இருந்தாலும், பெரிய அளவில் பயன் ஏற்படவில்லை.

உலக அளவில் தெற்கு ஆசிய நாடுகளில்தான் குழந்தைத் திருமணங்கள் அதிகளவில் நடக்கின்றன. அவற்றில் இந்தியா, நேபாளம் ஆகிய நாடு கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. உலகின்

பாதிக்கு மேற்பட்ட சிறுவயது மணப்பெண்கள் தெற்கு ஆசியாவைச் சேர்ந்தவர்கள். உலகின் குழந்தை மணப் பெண்கள் எண்ணிக்கையில் இந்தியா 33 சதவீத இடம் வகிக்கிறது. அதாவது 3 இல் ஒரு குழந்தைத் திருமணம் இந்தியாவில் நடக்கிறது.

அதுபோலத்தான் பதிவு செய்யப்படாத குழந்தைப் பிறப்பும் இந்தியா உட்பட தெற்காசிய நாடுகளில் அதிகம். தெற்காசிய நாடுகளில் 2007 இல் பிறந்த குழந்தைகளில் சுமார் 47 சதவீதம் பதிவு செய்யப்படவில்லை. அவர்களின் மொத்த எண்ணிக்கையான 2.4 கோடியில் இந்தியக் குழந்தைகள் மட்டும் 1.6 கோடிப் பேர் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

இப்படி யுனிசெப் தெரிவித்துள்ளது.

என்னதான் Technology என்றெல்லாம் வளர்ச்சி இருந்தாலும் ஏனைய விடயங்களில் இந்தியா உலக அளவில் பின்தங்கித்தான் உள்ளது. *

